விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

கலியாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/= மட்டுமே

சங்கு 16 வள்ளுவர் ஆண்டு 2046 சித்திரை 21 திங்கட்கிழமை (04.05.2015) தொலைபேசி 222 3378, தொலைநகல் 222 7829 ஒலி 136

# பொதுத் தேர்தலில் மகிந்த போட்டியிடப் போவதில்லை

## விரைவில் அறிவிப்பார் என தகவல்!



(கொழும்பு)

**எதிர்வரும் பொதுத் தேர்தலில் தாம் போட்டியிடப் போவதில்லை என முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரியப்படுத்துவார் என தகவல்கள் கசிந்துள்ளன.**

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுடனான இரண்டாவது நேரடிச் சந்திப்பு முயற்சி வெற்றியளிக்கையில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ பொதுத்தேர்தல் தொடர்பான தனது முடிவை மேற்கண்டவாறு தெரிவிப்பார் என கூறப் 02ஆம் பக்கம் பார்க்க....

## எந்தவொரு பதுக்கப்பட்ட சொத்து
## அமெரிக்காவில் இருந்தாலும் அது ஒப்படைக்கப்படும் - கெரி

(கொழும்பு)

இலங்கையிலிருந்து பதுக்கப்பட்ட சொத்துக்கள் அமெரிக்காவில் இருந்தால், அவை இலங்கையிடம் மீண்டும் ஒப்படைக்கப்படும் என்று அமெரிக்க இராஜாங்க அமைச்சர் ஜோன் கெரி தெரிவித்துள்ளார்.

கொழும்பு தாஜ் சமுத்ரா நட்சத்திர விடுதியில் லக்ஸ்மன் கதிர்காமர் நிலையத்தினால் நேற்று முன்தினம் சனிக்கிழமை ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர், இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் குறிப்பிடுகையில், ஊழல் தொடர்பான விதிகளை நடைமுறைப் படுத்தவும், பதுக்கப்பட்ட சொத்துக்களை மீட்கவும் உங்களுக்கு நாங்கள் உதவத் தயாராக இருக்கிறோம்.

உங்களின் விசாரணையாளர்களுடன் இணைந்து பணியாற்ற எமது விசாரணையாளர்கள் தயாராக உள்ளனர். 02ஆம் பக்கம் பார்க்க....

## 40 பேருக்கு எதிராக போர்க்குற்றச்சாட்டு

(கொழும்பு)

முன்னாள் உயர்மட்ட பாதுகாப்பு அதிகாரி மற்றும் ஆயுதப் படைகளில் தலைமை வகித்த மூத்த இராணுவ அதிகாரி உட்பட 40 இலங்கையருக்கு எதிராக போர்க்குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

முன்னாள் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம் பிள்ளையினால் நியமிக்கப்பட்ட குழுவின் இறுதி அறிக்கையில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அறிக்கை எதிர்வரும் செபடெம்பர் மாதம் ஐக்கிய நாடு மனித உரிமைகள் ஆணைக்குழுவின் கூட்டத்தொடரில் 24ஆம் பக்கம் பார்க்க....

## யாழில் வெடிபொருள்கள் மீட்பு
### இராணுவம் குவிக்கப்பட்டு வீதிகள் மூடப்பட்டன


(யாழ்ப்பாணம்)

யாழ்.நகரில் பெருமளவிலான வெடிபொருட்களை மீட்கும் பொருட்டு நேற்றையதினம் யாழில் உள்ள பல வதிகள் மூடப்பட்டு இராணுவத்தினர் பெருமளவில் குவிக்கப்பட்டிருந்தனர்.

இதன் போது வெடிபொருள் வெடிப்பு அபாயமும் விடுக்கப்பட்டமையால் யாழில் பெரும் அச்சம் நிலவியது. கடந்த சில நாட்களுக்கு முன்னர் யாழ்.மணிக்கூட்டு வீதியில் வெலிங்டன் சந்திக்கு அருகாமையில் முன்னர் இராணுவமுகாம் அமைந்திருந்த வெற்று காணியொன்றில் உள்ள கிணறு ஒன்றில் பெருமளவிலான வெடிபொருடகள் இனங்காணப்பட்டிருந்தன.

இவற்றை மீட்கும் முயற்சி ஆரம்பத்தில் சிறு சிறு பகுதிகளாக மேற்கொள்ளப்பட்ட போதிலும், கிணறறுக்குள் பெருமளவிலான வெடிபொருட்கள் காணப் 24ஆம் பக்கம் பார்க்க....

## மன்னார் ஆயரின் உடல் நிலையில் முன்னேற்றம்



(கொழும்பு)

பக்கவாத நோயினால் தாக்கப்பட்ட மன்னார் ஆயர் இராயப்பு யோசப் ஆண்டகையின் உடல் நிலையில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாக மருத்துவர்கள் குறிப்பிட்டதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித் 24ஆம் பக்கம் பார்க்க....

## 1400 கைதிகளுக்கு பொது மன்னிப்பு

(கொழும்பு)

வெசாக் தினத்தினை முன்னிட்டு நாடுமுழுவதும் உள்ள சிறைச்சாலைகளில் உள்ள 1400 கைதிகளுக்கு பொது மன்னிப்பு வழங்கப்பட்டு நேற்றையதினம் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

சிறு குற்றங்கள் மற்றும் நீதிமன்றங்களினால் விதிக்கப்பட்ட தண்டனைப் பணம் என்பவற்றினை செலுத்தத்தவறிய நிலையில் சிறைத்தண்டனை அனுபவித்து வந்த கைதிகளே இவ்வாறு விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

யாழ்.சிறைச்சாலையிலும் அத்தியட்சகர் பிரதான சிறைச்சாலை அதிகாரி ஆகியோர் முன்னிலையிலேயே சில கைதி 24ஆம் பக்கம் பார்க்க....

## புதிய அரசியல் சூழ்நிலையை சரியாகப் பயன்படுத்துங்கள்
### த.தே.கூட்டமைப்பிற்கு ஜோன் கெரி அறிவுரை



(கொழும்பு)

இலங்கையில் தற்போது ஏற்பட்டுள்ள நல்லதொரு அரசியல் சூழ்நிலையை தமிழ்த் தரப்பினர் சரியாகப் பயன்படுத்திக் கொள்வதன் மூலமே, சுமுகமான அரசியல் தீர்வொன்றை காணமுடியும் என அமெரிக்க இராஜாங்க அமைச்சர் ஜோன் கெரி தெரிவித்துள்ளார். இலங்கைக்கு இரண்டு நாள் அதிகாரபூர்வ பயணத்தை மேற்கொண்டு கொழும்பை வந்தடைந்த அமெரிக்க இராஜாங்க அமைச்சர் ஜோன் கெரி நேற்று ஞாயிற்றுக்கிழமை தமிழ்த் தேசியக் கூட்ட 24ஆம் பக்கம் பார்க்க....

## மாணவன் உயிருக்கு எமனானது பலாப்பழம்

(யாழ்ப்பாணம்)

பலாப்பழம் சாப்பிட்ட பாடசாலை மாணவன் ஒருவன் ஒவ்வாமை காரணமாக வாந்தி மயக்கத்தால் அவதிப்பட்டு சிகிச்சை பலனின்றி யாழ்.போதனா வைத்தியசாலையில் நேற்று முன்தினம் பிற்பகல் உயிரிழந்துள்ளான்.

கச்சேரி நல்லூர் வீதியைச் சேர்ந்த அன்ரன் சுரேஷ் தனோஜன் என்ற 7 வயதேயான மாணவனே இவ்வாறு சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளான்.

கடந்த வெள்ளிக்கிழமை பிற்பகல 2.00 மணியளவில் பலாப்பழம் சாப்பிட்ட குறித்த மாணவன் இரவு 10.00 மணியளவில் திடீரென ஏற்பட்ட ஒவ்வாமை காரணமாக வாந்தியெடுத்துள்ளான்.

இந்நிலையில் மறுநாள் அதாவது, நேற்று முன்தினம் சனிக்கிழமை 24ஆம் பக்கம் பார்க்க....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுதந்திரக் கட்சியின் மே தினக் கூட்டத்தில் 45 நிமிடங்கள் மாத்திரமே சந்திரிகா!



(கொழும்பு)

கொழும்பில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் மேதினக் கூட்டத்தில் முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா குமாரதுங்க 45 நிமிடங்கள் மாத்திரமே இருந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தக்கூட்டத்தின்போது அறிவிப்பாளர் சந்திரிக்காவின் பெயரை உச்சரிக்கும் போது கூட்டத்தின் ஒரு பிரிவினர் சத்தத்துடன் கரகோசம் செய்தனர்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் பெயரை அறிவிக்கும் போது கரகோசம் சில வினாடிகள் தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட்டது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் பெயரை அறிவிப்பு செய்யும் போது, போதுமானளவு கரகோசம் மேற்கொள்ளப்பட்டது.

இந்தநிலையிலேயே சந்திரிக்கா 45 நிமிடங்களில் கூட்டத்தில் இருந்து சென்று விட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (செ)

## 200 மில்லியன் டொலர் பெறுமதியான
# இந்திய தொடருந்து பாகங்களை கொள்வனவு செய்யவுள்ளது இலங்கை

இந்தியாவிடம் இருந்து 200 மில்லியன் டொலர் பெறுமதியான தொடருந்து இயந்திரங்கள் மற்றும் தொடருந்துப் பெட்டிகளை கொள்வனவு செய்யவுள்ளதாக போக்குவரத்து அமைச்சர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்துள்ளார்.

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி அண்மையில் இலங்கைக்கு மேற்கொண்ட விஜயத்தின் போது, அறிவித்த கடன் திட்டத்தின் கீழேயே இந்த தொடருந்து இயந்திரங்களும், பெட்டிகளும் கொள்வனவு செய்யப்படவுள்ளன.

இதன்படி 160 தொடருந்து பெட்டிகள், 30 எரிபொருள் தாங்கி பெட்டிகள் மற்றும் ஆறு டீசல் இயந்திரங்கள் என்பன இந்தியாவிடம் இருந்து கொள்வனவு செய்யப்படவுள்ளன. இவை அடுத்த மாதம் விநியோகிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

இதேவேளை முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக்காலத்தில் பெரும்பாலும், சீனாவிடம் இருந்தே தொடருந்து இயந்திரங்கள் மற்றும் பெட்டிகள் கொள்வனவு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (செ)

## தமிழரசுக் கட்சியின் மத்திய குழுக் கூட்டம்

முக்கிய விடயங்கள் தொடர்பாக தீர்மானங்களை எடுப்பதற்காக இலங்கை தமிழரசுக் கட்சியின் மத்திய குழு கூட்டம் இன்று திங்கட்கிழமை வவுனியாவில் இடம்பெறவுள்ளது. இன்று காலை 10 மணிக்கு வவுனியா நகரிலுள்ள விருந்தினர் விடுதி மண்டபத்தில் தமிழரசுக் கட்சித் தலைவர் மாவை சேனாதிராஜா தலைமையில் இக்கூட்டம் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தல், புதிய அரசின் நடவடிக்கைகள், அங்கத்துவ கட்சிகளுக்கு வழங்கப்படவுள்ள ஆசன பங்கீடுகள் உள்ளிட்ட பல விடயங்கள் இதில் கலந்துரையாடப்படவுள்ளன.

இந்தக் கூட்டத்தில் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் உள்ளிட்ட மத்திய குழு உறுப்பினர்கள் அனைவரும் கலந்து கொள்ளவுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது. (செ)

# மயூரன், ஆண்ட்ரூ சானினது சட்டத்தரணி இந்தோனேசிய பொலிஸாரால் திடீர் கைது

(கொழும்பு)

மயூரன் சுகுமாரன் மற்றும் ஆண்ட்ரூசான் ஆகியோர் சார்பாக முதலில் வாதாடிய "மொகமெட் ரிவான்" என்னும் சட்டத்தரணியை, அதிரடியாக இந்தோனேசியப் பொலிஸார் நேற்று கைது செய்து நீதிமன்றில் நிறுத்தியுள்ளார்கள்.

மயூரன் வழக்கில், மரணதண்டனை வழங்கிய நீதிபதிகள் அந்த தண்டனையை ரத்துச் செய்து அதனை 20 வருட சிறைத்தண்டனையாக மாற்ற ஒரு மில்லியன் டொலரைக் கோரினார்கள் என்ற தகவலை மொகமெட் ரிவான் ஏற்கனவே வெளியிட்டு இருந்தார்.

இதனை சகித்துக் கொள்ள முடியாத இந்தோனேசிய அரசு அவரையும் தற்போது கைது செய்து சிறையில் அடைத்துள்ளது.

இதேவேளை சர்வதேச சட்டம் மற்றும் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தோடு ஒரு உடன்படிக்கையில் இந்தோனேசியா கைச்சாத்திட்டுள்ளது. 2006-ம் ஆண்டு இந்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் இந்தோனேசிய அரசு கைச்சாத்திட்டுள்ளது.

இதன் அடிப்படையில் பாரிய மற்றும் படுமோசமான குற்றங்களை புரிந்தவர்களுக்கு மட்டுமே , மரண தண்டனை வழங்க முடியும் என்று சர்வதேச சட்டம் கூறுகிறது. ஆனல் அதனை தற்போது உள்ள இந்தோனேசிய அரசு மீறிவிட்டதாக அவுஸ்திரேலியா குற்றஞ் சாட்டியுள்ளது.

அதுமட்டும் அல்லாது அவுஸ்திரேலியா இதனை விட்டபாடாக இல்லை. சர்வதேச நீதிமன்றில் , இந்தோனேசியாவுக்கு எதிராக வழக்கு தொடர ஆராய்ந்தும் வருகிறது.

இது தொடர்பான பிரேரணை ஒன்று நாளை அவுஸ்திரேலிய பாராளு மன்றில் கொண்டுவரப்படவுள்ளது. அது நிறைவேறும் பட்சத்தில் அவுஸ்திரேலியா சட்ட நடவடிக்கையில் இறங்கும் என்று எதிர்பார்கப்படுகிறது.

மயூரன் சுகுமாரன் மற்றும் ஆண்ட் ரூசான வடயம் இவ்வளவு பெரிய பூதாகரமாக மாறும் என்று இதுவரை இந்தோனேசியா எண்ணிப் பார்க்கவில்லை. அவர்கள் நினைத்ததை விட சிக்கல் தற்போது பெரிதாகியுள்ளது.

இதற்கு முழுக்காரணம் அந் நாடு 2006 ஆம் ஆண்டு சர்வதேச ஒப்பந்தம் ஒன்றில் கைச்சாத்திட்டது தான். எங்கிருந்தோ அதனை தூசி தட்டி தற்போது கையில் எடுத்துள்ளது அவுஸ்திரேலியா. அத்தோடு உள்ளூர் சட்டத்தரணியை கைது செய்துள்ளதையும் அவுஸ்திரேலிய வன்மையாக கண்டித்துள்ளது.

உள்ளூர் சட்டத்தரணியான மொகமெட ரிவான், நீதிபதிகள் பணம் பெற்றுக் கொள்ள பேரம் பேசினார்கள் என்றும் அது தனக்கு தெரியும் என்றும் கூறியுள்ளார்.

பணத்தைப் பெற்றுக் கொண்டு தண்டனையை 20 வருடங்களாக குறைக்க அவர்கள் எத்தணித்தும் உள்ளார்கள். இச்செய்தியானது இந்தோனேசிய அரசின் முகத்தில் கரியைப் பூசியதைப் போன்றுள்ளது. (செ)

## பொதுத் தேர்தலில்...

படுகிறது.

முன்னாள் ஜனாதிபதிக்குரிய அதிகாரங்களை தாம் இழக்க நேரிடும் என்ற காரணத்திலேயே பொதுத் தேர்தல் போட்டியை மகிந்த தவிர்க்க விரும்புவதாக அறியமுடிகின்றது.

எப்படியிருப்பினும் 19-ம் திருத்த சட்ட மூலத்தை சமர்ப்பிப்பதற்காக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பாராளுமன்றத்தினுள் இருந்த போது, முன்னாள் ஜனாதிபதியின் ஆதரவாளர்களாக செயற்பட்ட உறுப்பினர்கள் பலர் ஜனாதிபதிக்கு ஆதரவு தெரிவித்துள்ளனர்.

மகிந்தவின் ஆதரவாளர்கள் இவ்வாறு திடீரென ஜனாதிபதிக்கு ஆதரவு தெரிவித்தமை மூலம் மேலும் ஒரு மகத்தான வெற்றியை ஜனாதிபதி பெற்றுள்ளார்.

அதேவேளை மகிந்தவுக்கான பாராளுமன்ற ஆதரவு முழுவதுமாக சீர்குலைந்துள்ளது.

இவ்வாறு மகிந்தவின் ஆதரவாளர்கள ஜனாதிபதியுடன் இணைந்த காரணத்தினாலே கிருலப்பனையில் ஏற்பாடு செய்யப்பட்ட மே தின பேரணியில் மகிந்த கலந்துக்கொள்ளவில்லை என கூறப்படுகின்றது.

அத்துடன் எதிர்வரும் பொதுத்தேர்தலில் முன்னாள் ஜனாதிபதியை முன்னிறுத்தி தனிக் குழுவாக செயற்படவிருந்த குழுவினரின் தேர்தலில் போட்டியிடும் யோசனையையும் பலமிழந்த நிலையில் உள்ளது.

இதேவேளை நாட்டில் இடம்பெற்ற ஊழல் மோசடிகள் தொடர்பான விசாரணைகள் தண்ட னைகளிலிருந்து தனது சகோதரர்களையும் குடும்பத்தினரை யும் பாதுகாக்க முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ பல வழிகளிலும் போராடி முயன்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (செ)

## அமெரிக்காவில்...

எமது விசாரணையாளர்களும் உங்களின் விசாரணையாளர்களுடன் இணைந்து பணியாற்றத் தயாராகவுள்ளனர்.

எந்தவொரு பதுக்கப்பட்ட சொத்து அமெரிக்காவில் இருந்தாலும், அது உண்மையான உரிமையாளரி டம் ஒப்படைக்கப்படும் என்று ஜோன் கெரி மேலும் தெரிவித்துள்ளார். (செ)



களனி ரஜமஹா விகாரைக்கு நேற்றையதினம் சென்ற அமெரிக்க இராஜாங்க செயலாளர் ஜோன் கெரி வெசாக் தின நிகழ்விலும் கலந்து கொண்டார்.

அத்துடன் இலங்கையில் அமைக்கப்படவுள்ள அமெரிக்க தூதரகத்திற்கான அடிக்கல்லையும் கெரி நாட்டி வைத்தார் என்பது குறிப்பிடத்தக்கது.


## கண்ணீர் அஞ்சலி

எமது கல்வி நிறுவனத்தின் ஆங்கில ஆசிரியரான **திரு A.D அரியரஞ்சன்** அவர்களின் பாசமிகு தாயார்

**அமரர் விக்டர் அரியரத்தினம் எலிசபெத் அபிராமிப்பிள்ளை**

(ஓய்வுபெற்ற ஆசிரியை)

அவர்கள் 02.05.2015 ஆம் திகதி காலமானார். அன்னாரின் மறைவினால் துயருறும் குடும்பத்தாருக்கு ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக் கொள்கின்றோம்.

021 226 3321
www.raveensemc.com

Raveens EMC
கல்விச் சமூகம்,
கரவெட்டி.

(சி-894)

அதிபர் சேவை தரம் 3
போட்டிப் பரீட்சைக்கான விசேட கருத்தரங்கு

புதிய பிரிவு II ஆரம்பம்:-
புதன் 06.05.2015 மாலை 5 மணி
புதன்-வியாழன் மாலை 5-7 மணி வரை
பிரிவு I ஒவ்வொரு ஞாயிறும் 1-5 மணி வரை

ஒவ்வொரு பிரிவிலும் 100 பேர் மட்டுமே அனுமதிக்கப்படுவர்

தொ.பே:-0766883394

யாழ்ப்பாணக் கல்லூரி பட்டப்படிப்புகள் பிரிவு
(யாழ்.ஆஸ்பத்திரி வீதி, கொமர்ஷல் வங்கி அருகில்)

(சி-897)


## மரண அறிவித்தல்

### திருமதி இராமலிங்கம் நாகம்மா(கப்பல்)



ஊர்காவற்றுறையை பிறப்பிடமாகவும் மந்திகை சிலையடியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராமலிங்கம் நாகம்மா 03.05.2015 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலன் நாகி தம்பதியினரின் அன்பு மகளும், காலஞ்சென்ற இராமலிங்கம் அவர்களின் பாசமிகு மனைவியும், உதயகுமார் (பரிசாரகர் வைத்தியசாலை-வல்வெட்டித்துறை), ஜெயநந்தினி, சிவகுமார் (பரிசாரகர் வைத்தியசாலை-வல்வெட்டித்துறை), சுபாசினி சசிகுமார் (பிரதேச சபை- உடுப்பிட்டி), ஜெயதர்சினி, ராசகுமார் (பிரதேசசபை-மன்னார்), ஜெயவதனி ஆகியோரின் அன்புத் தாயாரும், ரேணுகா, ரூபவதி, கலைவாணி, மரியதாஸ், மதியழகன், தீபன், ரகு, சுசி ஆகியோரின் மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (04.05.2015) திங்கட்கிழமை பகல் 2 மணியளவில் அவரது இல்லத்தில் நல்லடக்க ஆராதனை நடைபெற்று பூதவுடல் நல்லடக்கத்திற்காக ஆனைவிழுந்தான் சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

சிலையடி,
மந்திகை.

தகவல்:-குடும்பத்தினர்
0776941661

(சி-895)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 20ம் திருத்த சட்டம் 19ம் திகதி மன்றில்!

தேர்தல் முறைமை மாற்றம் குறித்த 20 ஆம் திருத்தச் சட்டமூலம் எதிர்வரும் 19 ஆம் திகதி நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்பட உள்ளதாக அரசாங்கத்தின் சிரேஷ்ட பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

புதிய தேர்தல் முறைமையின் அடிப்படையில் நாடாளுமன்ற உறுப்பினர்களின் மொத்த எண்ணிக்கை 255 ஆக உயர்த்தப்படவுள்ளது.

இதேவேளை விருப்பு வாக்கு முறைமை இல்லாதொழிக்கப்படவுள்ளது.அத்தோடு தொகுதிவாரி மற்றும் விகிதாசார அடிப்படையில் தேர்தல் நடத்தப்படவுள்ளது.

மேலும் தொகுதிவாரி, தேசிய விகிதாசாரம், மாவட்ட விகிதாசாரம் ஆகியவற்றின் அடிப்படையில் தேர்தல் நடத்தப்பட உள்ளதாக பேச்சாளர், கொழும்பு ஊடகமொன்றுக்குத் தெரிவித்துள்ளார்.

20 ஆம் திருத்தச் சட்டம் குறித்த யோசனை ஏற்கனவே அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை புதிய தேர்தல் முறைமையினால் சிறுபான்மை மக்களின் அரசியல் பிரதிநிதித்துவம் வீழ்ச்சியடையும் என சிறுபான்மை கட்சிகள் அதிருப்தி வெளியிட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

அனைத்து இன சமூகங்களுக்கும் நியாயம் கிட்டும் வகையில் தேர்தல் முறைமை மாற்றம் அறிமுகம் செய்யப்படும் என அரசாங்கம் அறிவித்துள்ளது. (இ)

## இலங்கைக்கு விஜயம் மேற்கொள்ளும் அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா?

அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா, இலங்கைக்கு விஜயம் மேற்கொள்வதற்கான சாததியங்கள் உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இலங்கைக்கு இரண்டு நாட்கள் விஜயம் மேற்கொண்டுள்ள அமெரிக்க இராஜாங்க செயலாளர் ஜோன் கெரி இதனைத் தெரிவித்துள்ளார்.

வெளிவிவகார அமைச்சில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இந்தத் தகவலை வெளியிட்டார்.

அமெரிக்க ஜனாதிபதியின் ஆசிய நாடுகளுக்கான விஜயத்தின் போது, இலங்கைக்கும் விஜயம் மேற்கொள்ளுமாறு பரிந்துரை செய்யவுள்ளேன் என அமெரிக்க இராஜாங்க செயலாளர் கூறியுள்ளார்.

இதேவேளை, தனது இலங்கைக்கான விஜயம் நாட்டின் உள்விவகாரங்களில் தலையிடுவதற்கல்ல. நாட்டின் நல்லாட்சி, ஜனநாயகம் தொடர்பில் ஏற்பட்டிருக்கும் மகிழ்ச்சியின் காரணமாகவே என கெரி மேலும் தெரிவித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)


இலங்கை வேந்தன் கலைக்கல்லூரி

நடாத்தும்

**இயல் இசை நாடக விழா- 2015**

**இடம்:-இலங்கைவேந்தன் கலைக்கல்லூரி கலையரங்கம்**
**காலம்:- 30.04.2015-04.05.2015 நேரம்:- பி.ப. 4.00 மணி**
04.05.2015 ஐந்தாம் நாள்

தலைவர்
திரு.இ.சர்வேஸ்வரா
(உதவிப் பதிவாளர், மருத்துவபீடம், யாழ்ப்பாணம்)

பிரதம விருந்தினர்
திருமதி மதிவாணி விக்னராஜா
(உதவிக் கல்விப் பணிப்பாளர் (அழகியல்), வடமாகாண கல்வித் திணைக்களம்)

நாச்சிமார் கோவிலடி சிவதாஸ் பிரபா கரன் குழுவினர் வழங்கும்
மங்கல இசை

மங்கல விளக்கேற்றல்
திரு.S.பரராஜசிங்கம்(உரிமையாளர்-நாராயணா ஹாட்வெயர்ஸ் ரேடர்ஸ்)
திரு.திருநாவுக்கரசு இரகுநாதன் (உரிமையாளர் -பெட்டா ஏஜென்ஸ்)
திரு.அன்பழகன் (இயக்குநர்-அன்பொளி கல்வி நிறுவனம்)

தேவாரம்- செல்வன்.பேரானந்தராஜா டினேஷன்

ஆசியுரை: சிவஸ்ரீ. சபா.வாசுதேவக் குருக்கள்
(தலைவர், சர்வதேச இந்துமதக் குருமார் ஒன்றியம், யாழ்.மாவட்டம்)

வாழ்த்துரை: திரு.செ.பிரணவநாதன்
(ஆணையாளர்,யாழ்.மாநகர சபை)

சைவ வித்தியா விருத்திச் சங்க கருணை இல்ல மாணவிகள் வழங்கும்
நாட்டியாஞ்சலி
நட்டுவாங்கம்:திருமதி யாழினி ரவீந்திரன்
பாட்டு: நா.சிந்துஜா
வயலின்: திருமதி.இந்துமதி தயாபரன்
மிருதங்கம்: திரு.மு.சிவகுமார்

ஸ்ரீகல்கி பகவன் இசைப்பயிலகம் வழங்கும்
வாத்திய விருந்து
வயலின்:திரு.கிருஸ்ணசாமி பத்மநாதன்
செல்வி. காயத்திரி பத்மநாதன்
வீணை: செல்வன். பேரானந்தராஜா டினோஷன்
மிருதங்கம்:திரு.பத்மநாதன் சியாம கிருஸ்ணா
மோர்சிங்:திரு.கந்தசாமி நந்தகுமார்
கடம்: திரு.குமாரசாமி ரவிசங்கர்

தேசிய மட்டத்தில்முதலாம் இடம் பெற்ற யாழ்.இந்துக்கல்லூரி மாணவர்கள் வழங்கும்
'தக்கன் வதம்'
வில்லிசை

நர்த்தனஷேந்திரா தயாரித்து வழங்கும்
'அக்கினி உதயம்'
நட்டுவாங்கம்:ஸ்ரீமதி பிரியதர்சினி வாகீசன்
பாட்டு: திரு.அ.அமிர்தலோஜன்
திரு.அ.அமிர்தசிந்துஜன்
திரு.சி.விபீஷன்
வயலின்: திரு.அ.ஜெயராமன்
மிருதங்கம்: திரு.க.நந்தகுமார்
ஓகன்: திரு.M.மனுசங்கர்

கலைஞர்கள் கௌரவிப்பு
பிரதம விருந்தினர் உரை

நாட்டார் வழக்கியல் கழகம் வழங்கும்
சத்தியவான் சாவித்திரி
(இசை நாடகம்)

நன்றியுரை

**US Hotel**
**Hospital Road,**
**Jaffna.**

கலைஞர்கள், ரசிகர்கள், ஆர்வலர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

63, கல்லூரி வீதி,
நீராவியடி,
யாழ்ப்பாணம்.

இலங்கைவேந்தன் கலைக்கல்லூரியினர்

அனுமதி இலவசம்



உ

முத்துமாரி அம்மன் துணை



**வல்லையின் இந்திர விழா**

வரலாற்றுச் சிறப்பு மிக்க
வல்வெட்டித்துறை ஸ்ரீமுத்துமாரி அம்மன் தீர்த்த உற்சவத்தை
முன்னிட்டு வல்வை மக்களால் இன்றைய தினம் (04.05.2015)
திங்கட்கிழமை மிகச்சிறப்பாக நடைபெறுகின்ற

**இந்திர விழா**

3 கிலோமீற்றர் தூரத்திற்கு வீதிச் சோடனைகள்
வானுயர தெய்வ உருவங்கள் (போட்டிக்கோ)
அதி உச்ச மின் அலங்காரங்களுடன் மின்னொளிகள்
புகைக்கூடுகள் வான் நோக்கிப் பறக்க விடுதல்
சமநேரத்தில் 10 மேடைகளில் கலை நிகழ்வுகள்
இன்னும் பல கண்கவர் காட்சிகள்/ கலை அம்சங்கள்

என்பன நடைபெறவுள்ளன என்பதை மிகவும் மகிழ்வுடன் அறியத் தருகின்றோம்.

முக்கிய குறிப்பு: 3 பிரதான வீதிகளிலும் சைக்கிள் உட்பட வாகன பாதுகாப்பு நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

இவ்வண்ணம்
வல்வை மக்கள் சார்பில்
வல்வை நெடியகாடு மோர்மட வரவேற்புக்குழு


## இராசி பலன்

04.05.2015
(சித்திரை 21, திங்கட்கிழமை)
சூரிய உதயம் காலை 5.57 மணிக்கு
பூரணை முற்பகல் 9.23 மணிவரை
சுவாதி முற்பகல் 10.42 மணிவரை
இராகுகாலம் 7.26-8.56 மணிவரை
சுபநேரம் 11.56-1.26 மணிவரை
திருநாவுக்கரசு நாயனார் குருபூசை

வளவன்

**மேடம்**
தொலைபேசி மூலம் மகிழ்ச்சியான தகவல்கள் வந்து சேரலாம், எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும், விருந்தினர் வருகையுண்டு, வழிபாட்டால் அதிர்ஷ்ட வாய்ப்புக்களைப் பெருக்கிக் கொள்ள வேண்டிய நாள்.

**இடபம்**
உடல்நலம் சீராகும், பிரபலமானவர்களின் சந்திப்பால் பெருமைகள் வந்து சேரலாம், செய்தொழிலில் சிறப்புகள் ஏற்படும், காரிய அனுகூலமுண்டு, போசன சுகமுண்டு.

**மிதுனம்**
பிள்ளைகளின் வருங்கால நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், சான்றோர்களின் சந்திப்பு இடம்பெறலாம், குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறும், வாகன சுகமுண்டு.

**கடகம்**
நம்பிக்கைகள் நடைபெற தும்பிக்கையானை வழிபட வேண்டிய நாள், பெற்றோர் மீது பிரியம் கூடும், தூரதேசத்திலிருந்து சுப தகவல்கள் வந்து சேரலாம், தொழில் மேன்மையுண்டு.

**சிம்மம்**
பணத் தேவைகள் பூர்த்தியாகும் நாள், நண்பர்கள் நம்பிக்கைக்குரியவர்களாக நடந்து கொள்வர், அரசியல் செல்வாக்கு மேலோங்கும் நாள், எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள்.

**கன்னி**
உடல்நலம் சீராகி உற்சாகத்தோடு பணிபுரிவீர்கள், பணத் தேவைகள் பூர்த்தியாகும் நாள், மக்கள் போற்றும் வாழ்வமைய விக்கினேஸ்வரனை வழிபட வேண்டிய நாள், வாக்கு மேன்மையுண்டு.

**துலாம்**
தொழில் ரீதியான பயணங்கள் இடம்பெறலாம், குடும்பத்தில் பெரியவர்களின் சொற்களைக் கேட்டு நடப்பீர்கள்,கொடுக்கல்-வாங்கல்கள் ஒழுங்காகும், சான்றோர்களின் சந்திப்பு இடம்பெறலாம்.

**விருச்சிகம்**
உறவினர் வருகையுண்டு, காரியங்களில் வெற்றிபெற கணபதியை வழிபட வேண்டிய நாள், தேவையற்ற மனச்சஞ்சலங்களைத் தவிர்ப்பது நல்லது, அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர்.

**தனுசு**
அதிர்ஷ்ட வாய்ப்புக்கள் தேடி வர லாம், பொதுவாழ்வில் புகழ்கூடும், செய்தொழில் மேன்மையுண்டு, வருமானம் திருப்திதரும் வகையில் அமையும், சொன்ன சொல்லைக் காப்பாற்றி மகிழ்வீர்கள்.

**மகரம்**
கனவுகள் நனவாக கற்பக மூர்த்தியை வழிபட வேண்டிய நாள், பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம்பெறலாம், பெண்களால் பெருமைகள் வந்து சேரலாம், காரிய அனுகூலமுண்டு.

**கும்பம்**
தொழிலில் அதிகாரிகளின் ஆதரவைப் பெறுவீர்கள், பயணங்களால் பலனுண்டு, பிரியமானவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், இறைவழிபாட்டால் இன்பம் காண வேண்டிய நாள்.

**மீனம்**
உறவினர்கள் வழியில் சுபசெலவுகளைச் சந்திக்கலாம், தேகநலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், குடும்பத்தினரிடம் கோபமாகப் பேசிவிட்டு பின்னர் மனம் வருந்தும் சூழ்நிலை ஏற்படலாம்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

கிளிநொச்சியில்

# மத்திய வங்கியின் கிளை

இலங்கை மத்திய வங்கியின் பிராந்திய செயலகம் ஒன்று நாளை மறுதினம் புதன்கிழமை கிளிநொச்சியில் திறந்து வைக்கப்படவுள்ளது.

கிளிநொச்சி அறிவியல் நகரத்தில் ஸ்தாபிக்கப்பட்டுள்ள இந்த செயலகம் உத்தியோகபூர்வமாக மீள் குடியேற்றம், மீள் நிர்மாணம் மற்றும் இந்து கலாச்சாரத்துறை அமைச்சர் டி.எம்.சுவாமிநாதனினால் திறந்து வைக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக கொள்கை திட்டமிடல் பொருளாதார துறை பிரதி அமைச்சர் ஹர்ஷா டீ சில்வா கலந்து கொள்வார்.

இது தவிர, இலங்கை மத்திய வங்கியின் ஆளுனர் அர்ஜுனா மகேந்திரன உள்ளிட்ட பல பிரமுகர்கள் கலந்து கொள்வார்கள் என நம்பப்படுகின்றது.

அதேவேளை, கொழும்பு பங்கு சந்தையின் பரிவர்தனை நடவடிக்கைகள், நல்லாட்சி மற்றும் புதிய வாய்ப்புகளை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இலங்கை வர்த்தக சம்மேளனத்தினால் இன்று திங்கட்கிழமை சம்மேளன கேட்போர் கூடத்தில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள கருத்தரங்கில் இந்த விடயங்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மன்னார் எரிவாயு 2020-ல் பயன்படும்

மன்னாரில் கிடைத்துள்ள இயற்கை எரிவாயு மற்றும் மின் உற்பத்தி ஆகியவற்றை 2020-ம் ஆண்டு பயன்பாட்டிற்கு எடுத்துக் கொள்ளவுள்ளதாக மின்சக்தி எரிசக்தி அமைச்சர் பட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் கடந்த வாரம் மாநாடொன்றில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

பெற்றோலியத்துறையின் விநியோகம, தரம், விலை ஆகியவற்றில் காணப்படுகின்ற பிரச்சினை குறித்து ஆராய்வதற்கான மாநாடு கொழும்பில் நடைபெற்றது.

இலங்கை மக்கள் பயன்பாட்டு ஆணைக்குழுவினால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த மாநாட்டில் பெற்றோலிய துறையின் எதிர்காலம் குறித்து மின்சக்தி எரிசக்தி அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க கருத்து தெரிவித்தார்.




# இலங்கையின் பொரு. வளர்ச்சி 7.4%

இலங்கையின் பொருளாதார வளர்ச்சி 7.4 சத வீதத்தால் அதிகரித்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை மத்திய வங்கியினால் வெளியிடப்பட்ட 2014ஆம் ஆண்டிற்கான அறிக்கையில் இந்த தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த காலப்பகுதியினில் 7.8 சத வீத வளர்ச்சி எதிர்பார்க்கப்பட்ட போதிலும் 7.4 சத வீதத்தையே எட்டியுள்ளதாக அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

சர்வதேச பொருளாதாரத்தில் அபிவிருத்திகள் காணப்பட்ட நிலையில் இலங்கையின் பொருளாதார வளர்ச்சி ஸ்திரத்தன்மையில் காணப்படுவதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

எப்படியிருப்பினும் கால நிலை சீர்கேடு காரணமாக விவசாய உற்பத்தி பாதிப்படைந்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, தொழிற்துறை மற்றும் சேவைத்துறையில் வளர்ச்சி ஏற்பட்டிருப்பதாகவும் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.


2014ஆம் ஆண்டிற்கான மத்திய வங்கியின் அறிக்கை கடந்த வாரம் இலங்கை மத்திய வங்கியின் ஆளுனர் அர்ஜுனா மகேந்திரனினால், நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்காவிடம் உத்தியோக பூர்வமாக கையளிக்கப்பட்டது.

# துணிவே தொழில்: இலக்கை எட்ட எது தேவை?

ஒரு வெற்றியாளராக உருவாக நமக்கு லட்சியமும் இலக்கும் இருந்தால் போதுமா? இவை இருந்தாலே வெற்றி வசப்படுமா என்று கேட்போர் பலர் உண்டு. இவை இரண்டும் இருப்போருக்கு அடுத்த கட்ட தேவைதான் திட்டமிடுதல். எந்த ஒரு வேலையையும் திட்டமிடுவது முக்கியம். அதேபோல தொழில் தொடங்குவோருக்கு திட்டமிடுதல் மிக மிக அவசியம்.

திட்டமிடுதல் என்றால் என்ன? ஒரு பணியை நிறைவேற்ற வேண்டும் என்றால் நமக்கு அதற்குரிய ஆள் பலமும், இலக்கை எட்டுவதற்கான கால அவகாசமும் தேவைப்படும்.

உதாரணத்துக்கு நீங்கள் தொழில் தொடங்கி நடத்திக் கொண்டிருக்கிறீர்கள் என்று வைத்துக் கொள்ளுங்கள். உங்கள் நிறுவனத்தின் ஆண்டு வருமானம் ரூ. 50 லட்சம் என வைத்துக் கொள்வோம். நடப்பு நிதிஆண்டில் உங்கள் நிறுவனத்தின் வருமானத்தை 10 மடங்கு அதிகரிக்கச் செய்ய வேண்டும் என்று ஆசைப்படுகிறீர்கள். அதையே இலக்காகவும் வைக்கிறீர்கள். ஆனால் இலக்கை வைத்தால் மட்டும் போதாது.



நீங்கள் நிர்ணயித்த காலம் ஓராண்டு. வருமானத்தை 10 மடங்கு அதிகரிக்கச் செய்ய என்ன செய்ய வேண்டும். இத்தகைய இலக்கை எட்டுவதற்கு Smart Goal என்பர். ஸ்மார்ட் என்றால் என்ன தெரியுமா? S for specific, M for Measurable, A for Achievable, R for Realistic and T for Time bound.

மேலாண்மைக் கல்வி மையங்களில் பெரும்பாலும் ஸ்மார்ட் கோல் என்பதைத் தான் பெரிதும் சொல்லித் தருவார்கள்.

இதன்படி 10 மடங்கு வருமானம் ஈட்ட வேண்டும் என தெளிவாக முடிவு செய்துள்ளது specific ஆகும். அடுத்தது measurable என்பது எவ்வளவு காலத்தில் அதை அடைவது என்பதை தீர்மானிப்பதாகும்.

யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்கு 10 மணி நேர ரயில் பயணம் என்றால் அந்த ரயில் சரியான வேகத்தில் எவ்வித இடையூறுமின்றி (கிராசிங்) இல்லாமல், ஒவ்வொரு ரயில் நிலையத்திலும் நிற்க வேண்டிய நேரத்தில் நின்று, புறப்பட வேண்டிய சமயத்தில் சரியாக புறப்பட்டுச் சென்றால் மட்டுமே 10 மணி நேரத்தில் கொழும்பைச் சென்றடையும். அதைப் போல இலக்கை எட்டுவதற்கு எத்தனை காலம் ஆகும், அதை எவ்விதம் அடையலாம் என்பதை அளவீடு செய்ய வேண்டும்.

நிறுவனங்களின் வளர்ச்சியை ஒவ்வொரு காலாண்டிலும் மதிப்பீடு செய்வர். அதன்படி முதல் காலாண்டில் ஒரு குறிப்பிட்ட தொகைக்கான வளர்ச்சி, அடுத்த காலாண்டு, மூன்றாம் காலாண்டு மற்றும் நான்காம் காலாண்டில் இலக்கை எட்டுவது என தீர்மானித்து செயல்பட வேண்டும்.

நிறுவனங்களின் வளர்ச்சியை அளவீடு செய்வதன் மூலம் குறிக்கோள் மற்றும் இலக்கை எட்ட முடியுமா? என்பதைப் பார்க்கலாம். இவ்விதம் அளவீடு செய்யாவிடில் இலக்கை எட்டுவது சாத்தியமாகாது.

உதாரணத்துக்கு நீங்கள் நடத்தும் தொழில் அனைத்து காலத்துக்கும் ஏற்றதா அல்லது ஒரு குறிப்பிட்ட காலத்துக்கு மட்டுமானதா அதாவது சீசனல் தொழிலா என்று பார்க்க வேண்டும். நீங்கள் குடை வியாபாரம் செய்கிறீர்கள் என்று வைத்துக் கொள்வோம். மழைக் காலத்தில் குடை வியாபாரம் அமோகமாக இருக்கும். கோடைக் காலத்தில் சற்று பரவாயில்லை போலிருக்கும்.

எஞ்சிய காலங்களில் வர்த்தகம் சொல்லிக் கொள்ளும்படி இருக்காது. அப்படியெனில் எந்த காலகட்டத்தில் உங்கள் இலக்கு அதிகமாக இருக்க வேண்டும் என நிர்ணயிக்க வேண்டும். மழைக் காலத்தில் மட்டும் இப்போது ரூ. 50 லட்சம் உள்ள வர்த்தகத்தை ரூ. 5 கோடியாக உயர்த்த முடியுமா? என்று பார்க்க வேண்டும்.

அடுத்தது Achievable, அதாவது நீங்கள் நிர்ணயித்த இலக்கு எட்டக் கூடியதுதானா? என்று ஒரு முறைக்கு பல தடவை உங்களை நீங்களே கேட்டுக் கொள்ளுங்கள். ரூ. 50 லட்சமாக உள்ள உங்கள் வருமானம் 10 மடங்கு உயர வேண்டுமெனில் ஓராண்டில் உங்கள் வருமானம் ரூ. 5 கோடியாக உயர வேண்டும். இந்த அளவுக்கு உங்கள் தொழிலின் வர்த்தக வாய்ப்பு உள்ளதா? இப்போதைய சூழலில் இது சாத்தியமா என்று ஆராய வேண்டும்.

உங்களது தொழில் எல்லை சென்னை மற்றும் அதைச் சுற்றித் தான் உள்ளது. புதிய இலக்கை எட்ட வேண்டுமெனில் மதுரை, கோவை உள்ளிட்ட நகரங்களுக்கு விரிவுபடுத்த வேண்டும். Realistic இதுதான் நடைமுறை சாத்தியம். நிர்ணயித்துள்ள இலக்கை எட்ட தற்போது நம்மிடம் உள்ள 10 ஊழியர்களின் துணையோடு எட்ட முடியுமா? என்று ஆராய வேண்டும். அடுத்தது timebound அதாவது கால வரையறைக்குட்பட்டது. 12 மாதத்திற்குள் இந்த இலக்கை எட்ட வேண்டும் என நிர்ணயிப்பதுதான் அது. இலக்கை எட்டும் சிறிய மைல் கல்லாக இருப்பதுதான் Smart.

இத்தகைய இலக்கை நிர்ணயிப்பதே Goal Setting. இதை எவ்விதம் நிர்ணயிப்பது என்பதை வரும் வாரங்களில் பார்க்கலாம்.?

# முதல் செலவு: திட்டமிடுதல் கஷ்டமில்லை

இயற்பியலில் நியூட்டனின் 3 விதிகளில் 3-வது விதி (வினை/எதிர்வினை பற்றியது) மிகவும் புகழ்பெற்றது. ஆனால் முதலீடு, நிதி நிர்வாகம் ஆகியவற்றைப் பொறுத்தவரை இவ்விதிகளில் மூன்றாவதை விட முதலாவது விதியே முக்கியமானது. அது ஒரு மிக எளிமையான விதி - ஒரு ஆரம்ப உந்து சக்தி இல்லாவிட்டால் எந்த ஒரு பொருளும் இருக்கும் இடத்திலேயே இருக்கும் என்பதுதான் அந்த விதி. இதை "செயலின்மை" விதி என்று சொல்வார்கள்.

**முட்டுக்கட்டை**

இதற்கும் முதலீடுகளுக்கும் என்ன சம்பந்தம்? முதலீடுகள் செய்ய முனைபவர்களில் பெரும்பான்மையினரை ஆட்கொண்டிருப்பது இந்த செயலின்மைதான். குறிப்பாக, நீண்டகால அடிப்படையில் செய்ய வேண்டிய முதலீடுகள் என்றால் 'அதெல்லாம் சும்மா செய்ய முடியாது, திட்டமிட்டுச் செய்ய வேண்டிய விடயம்" என்று ஒரு முட்டுக்கட்டை உருவாகிவிடும். இந்த திட்டமிடுதலைச் செய்வதற்கு நேரமும் வாய்க்காது, அதில்லாமல் முதலீடுகள் செய்யவும் தயக்கம் இருக்கும். இதனால், நியூட்டனின் அசையாத பொருட்களைப் போல நமது முதலீட்டுத் திட்டம் தொடங்கப்படாமலேயே தேங்கி நிற்கும்.

**எளிய முறைகள் போதும்**

திட்டமிடுதல் என்பது முக்கியம் தான், மறுப்பதற்கில்லை. ஆனால், ஒரே வீச்சில் நமது வாழ்க்கையையே ஒரு வரைபடமாக்கி முழுமையாக தீர்மானித்துக் கொண்ட பிறகுதான் முதலீடுகளைத் தொடங்க வேண்டும் என்று அவசியமில்லை. சில எளிய முறைகளைப் பயன்படுத்தினால் போதும், சுலபமாக ஒரு தோராயமான திட்டம் ஒன்றை வகுத்துக் கொள்ளலாம். அதன் அடிப்படையில் முதலீடுகளைத் தொடங்கலாம். பின்னர், கொஞ்சம் நமது திட்டங்களில் ஒரு முழுமையைக் கொண்டு வந்து கொள்ளலாம்.

**நிதிவளம் பெருக...**

இப்படிச் செய்வதை ஏன் பரிந்துரைக்கிறோம் என்றால், முதலீடுகளைத் தொடங்குவதன் முக்கியத்துவத்தை மீண்டும் வலியுறுத்தத்தான். நீண்டகால முதலீடுகள் என்பது காலத்தே தொடங்கப்பட வேணடிய ஒன்று. எவ்வளவு விரைவில் தொடங்குகிறோமோ அவ்வளவுக்கு அவ்வளவு நல்லது.

சரி, ஆரம்பிப்பதற்கு ஏற்றவாறு ஒரு எளிமையான திட்டத்தினை வகுத்துக் கொள்வது எவ்வாறு? இதற்கான சில எளிய முறைகள் என்னென்ன?

**குறிக்கோள் அவசியம்**

இதற்கு நாம் புரிந்து கொள்ள வேண்டிய விடயம் குறிக்கோளுடன முதலீடு செய்வது. நம்மில் பெரும்பான்மையானவர்கள் நிதி வள முதலீடு என்பதை ஒரு மேம்போக்காக மட்டுமே செய்கிறோம். கையில் கொஞ்சம் சேமிப்பு அல்லது மீள் தொகை இருக்கிறது என்றால் அதை ஒரு வங்கி வைப்பு நிதியில் 'போட்டு வைக்கலாமே" என்ற அளவில்தான் யோசிக்கிறோம்.

**தீர்மானித்தல் அவசியம்**

நாம் எதற்கு எந்த முதலீட்டினைச் செய்கிறோம் என்பதைத் தீர்மானித்த பின் முதலீடு செய்வதே இதற்கு மாற்று. அதற்கு முன் நாம் நமக்கென சில நிதிசார் குறிக்கோள்களை வகுத்துக் கொள்ள வேண்டும். இவை நீண்டகால குறிக்கோள்களாக இருத்தல் நல்லது.

நாம் அனைவருக்குமே நிதிசார் குறிக்கோள்கள் இருக்கத்தான் செய்கின்றன. நாம் அனைவருமே ஒரு நாள் பணியிலிருந்து ஓய்வு பெறப் போகிறோம். அதன் பின்னர் வாழ்க்கையை குறைவின்றி நடத்துவதற்கான வருமானத்திற்கு வழி தேவை.

நமது எளிமையான நிதித் திட்டம் என்பது முதலில் இத்தகைய குறிக் கோள்களில்தாம் ஆரம்பிக்கின்றது. நாம் செய்ய வேண்டிய முதல் வேலை நமக்குத் தெரிந்த நம் வாழ்க்கையின் நிதிசார் குறிக்கோள்களைப் பட்டியலிடுவதுதான். ஒவ்வொன்றையும் சென்றடைவதற்கு எத்தனை காலம் இருக் கிறது என்பதையும் குறித்துக் கொள்ள வேண்டும். குறிக்கோள்களை அடையாளப்படுத்தி இவற்றிற்காக முதலீடு செய்யப் போகிறோம் என்று தீர்மானம் செய்து கொண்டால் போதும்.

அதாவது காரணமற்ற முதலீடுகள என்பதை அறவே செய்யக்கூடாது.

முதலீடுகளைத் தொடங்குவதற்கு இந்த முதல் அடிகள் போதுமானவை. குறிக்கோள்களையும், அவற்றிற்கான கால அளவையும் நிர்ணயித்தல், பின்னர் முதலீடுகளை அக்குறிக்கோள்களில் ஏதேனும் ஒன்றுக்கென ஒதுக்கீடு செய்தல் - இவ்விரண்டையும் செய்தால் நாம் ஒரு திட்டமிட்ட முறையில் நமது முதலீடுகளைத் தொடங்கி விட்டோம், நடத்துகிறோம் என்று முறையாகிவிடும்.

நீங்கள் இந்த எளிய முறையைப பயன்படுத்தித் தொடங்கி விட்டீர்களேயானால், நீங்கள் போட்ட திட்டம் [illegible] அடையக் காண்பீர்கள். உங்கள் நிதி வளமும் பெருகக் காண்பீர்கள்...?

## பங்குச் சந்தை விபரம்

CSE COLOMBO STOCK EXCHANGE

(வார இறுதியில்)

| துறை | கடந்த வாரம் | இந்த வாரம் |
|---|---|---|
| அனைத்துப் பங்கு விலைச்சுட்டி | 7,129.78 | 7,179.00 ⇧ |
| எஸ் & பி 20 சுட்டி | 4,023.26 | 4,053.45 ⇧ |

விலை அசைவுகளின் அடிப்படையில் | புரள்வு (ரூபா.மில்.) 3,202.739

**உயர்வடைந்த பங்குகள்(ரூ.):** பிசி ஹவுஸ்(0.30), பன்சி றெஸ்சோட்(12.60), றம்பொட போல்ஸ்(34.30), அபான்ஸ் பினான்சியல்(31.30), பிசி பார்மா(1.30).

**சரிவைக் காட்டிய பங்குகள்(ரூ.):** புளூ டைமன்ஸ்(ஹ)(0.60), சுவர்ணமஹால் பினான்ஸ்(2.00), பிடிஎல்(92.50), லைற்ஹவுஸ் ஹோட்டல்(55.20), சிரிலாண்ட்(35.40).

மேலதிக தகவல்கள்: www.cse.lk

## வெளிநாட்டு நாணயமாற்று வீதம்


(வார இறுதியில்)

| நாணயம் | கொ/வு விலை ரூபா. | வி/னை விலை ரூபா. |
|---|---|---|
| ஐக்கிய அமெரிக்க டொலர் | 132.64 | 135.46 |
| பவுண்ட்(ஐக்கிய இராச்சியம்) | 203.92 | 209.74 |
| யூரோ (ஐரோ.ஒன்றியம்) | 146.59 | 151.44 |
| சுவிஸ் பிராங் | 140.19 | 145.14 |
| கனேடிய டொலர் | 109.61 | 113.24 |
| அவுஸ்திரேலிய டொலர் | 105.02 | 109.24 |
| சிங்கப்பூர் டொலர் | 99.98 | 103.21 |
| ஜப்பான் யென் | 1.11 | 1.14 |
| இந்திய ரூபாய் | சுட்டி விலை 2.09 | |
| ஐக். அரபு இராச்சிய டிராம் | சுட்டி விலை 36.18 | |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# கம்பன் விழா - 2015 நான்காம் நாள் நிகழ்வில் கம்பன் புகழ்விருது மன்னார் ஆயருக்கு வழங்கல்




(கொழும்பு)

கொழும்பு கம்பன்கழகம் நடத்தும் கம்பன் விழா–2015 கொழும்பு இராம கிருஷ்ணன் மிஷன் மண்டபத்தில் தினமும் காலை, மாலை அமர்வுகளாக முதலாம் திகதி தொடக்கம் 4 ஆம் திகதி வரை நடத்தப்படு கின்றது.

இந்த விழாவின் 4 ஆம் நாள் நிகழ்வு இன்று காலை 9.30 மணிக்கு மேல் மாகாண சபை உறுப்பினர் சண்.குக வரதன் தம்பதியரின் மங்கல விளக்கேற்றலுடன் ஆரம்ப மாகும். இதில் செல்வி வைஷ்ணவி யோகராஜாவின் கடவுள் வாழ்த்து இடம்பெற்று பேராசிரியர் எஸ்.தில்லைநாதனின் தலைமையுரையையடுத்து சட்டத் தரணி ஜி.இராஜகுலேந்திரா வின் தொடக்கவுரை இடம் பெறும்.

இதேவேளை டத்தோ எம். சரவணனின் (மலேசியா) 'கம் பனைப்போல்' என்னும்பொருளில் இலக்கிய பேருரை இடம் பெறும்.

இதேவேளை 'மனத்துக்கண் மாசிலன் ஆதல்' என்னும் பொருளில் நடுவர் இல. கணேசன் முன்னிலையில் (தமிழ்நாடு) குறளரங்கு இடம் பெறும்.


இதில் 'பெண்ணெனமனத் திடை!'– ஸ்ரீபிரசாந்தன், அல் வழி என் மனம் ஆகுமோ?– இரெ.சண்முகவடிவேல், 'நெஞ் சினால் பிழைப்பிலாள்!' – பு.சி.கணேசன், 'துரிசிலாத் திருமனத்தான்!'–த.இராமலிங் கம், 'அற்றம்நீத்த மனத்தினன்!' – இ.ஜெயராஜ் ஆகியோர் உரை நிகழ்த்துவார்கள்.


மாலை அமர்வு வைத்திய நிபுணர் டாக்டர் எஸ். ஆனந்தராஜா தம்பதியரின் மங்கள விளக்கேற்றலுடன் ஆரம் பமாகும். ரி. கருணாகரனின் கடவுள் வாழ்த்து இடம்பெறும்.

மீள்குடியேற்றம், மீள் கட்டமைப்பு, இந்து சமய அலுவல்கள் அமைச்சர் டி.எம். சுவா மிநாதன் தலைமையுரை நிகழ்த்துவார். தொடர்ந்து மேல் மாகாண சபை ஆளுநர் கே. சி. லோகேஸ்வரன் தொடக்க வுரை நிகழ்த்துவார்.

இதில் 'இராமன் சொல்லறம் துறந்தது குற்றம்' என்னும் பொருளில் நடுவர் பு.சி. கணேசன் தலைமையில் வழக்காடு மன்றம் இடம்பெறும். அன்னைக்கு அளித்த வாக்கைத் துறந்தமை? 'தாங்கரும் தவம் மேற்கொண்டு' வாதி– த.இராமலிங்கம், பிரதி வாதி– இ. ஜெயராஜ், மனைவிக்கு அளித்த வாக்கைத் துறந்தமை! 'சிந்தையாலும் தொடேன்' வாதி– தி.திருநந் தகுமார், பிரதிவாதி இரெ. சண் முகவடிவேல் ஆகியோர் நிகழ்த் துவார்கள்.


இதனையடுத்து கம்பன் புகழ் விருது மன்னார் ஆயர் இராயப்பு யோசப் ஆண்டகைக்கு வழங்கப்படும். இதனையடுத்து சான்றோர் கௌரவம் இடம்பெறும். கௌரவம் பெறும் சான் றோர்கள் வடமாகாண சபை அவைத் தலைவர் சீ.வீ.கே. சிவஞானம், அறங்காவலர் தேச மான்ய கே. துரைச்சாமி செட்டியார், வானொலி அறி விப்பாளர் செல்வி சற்சொரூ பவதிநாதன், நவசமசமாஜக் கட்சித் தலைவர் தேசமான்ய விக்கிரமபாகு கருணாரட்ண, கல்வியாளர் அல்ஹாஜ் எம்.வை. எம். முஸ்லிம், இராமநாதன் இந்து மகளிர் கல்லூரி அதிபர் திருமதி கோதை நகுல ராஜா ஆகியோருக்கு வழங் கப்படவுள்ளது. (இ)
















இவர்களுக்கு மணமகள் தேவை — கல்யாண மாலை — இவர்களுக்கு மணமகன் தேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: சுவாதி<br>கி.பா: 9 3/4<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: O/L/ சொந்த தொழில்<br>தொ.இ: B/4426 | பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: உத்தரட்டாதி<br>கி.பா: 58<br>உயரம்: 4'10"<br>தகைமை/தொழில்: BSC/ அரச தொழில்<br>தொ.இ: G/4429 |
| பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம்: அவிட்டம்<br>கி.பா: 34 செவ் 1 இல்<br>தகைமை/தொழில்: O/L/ சொந்த தொழில்<br>தொ.இ: B/4427 | பிறப்பு: 1977 இந்து<br>நட்சத்திரம்: பூசம்<br>கி.பா: 24<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்: A/L சுவிஸ் PR<br>தொ.இ: G/4432 |
| பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: புனர்பூசம்<br>கி.பா: 44 செவ் 7 இல்<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்: A/L/ தனியார் தொழில்<br>தொ.இ: B/4428 | பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: விசாகம்<br>கி.பா: 54 செவ் 7 இல்<br>தகைமை/தொழில்: A/L/ தனியார்<br>தொ.இ: G/4433 |
| பிறப்பு: 1979 இந்து<br>நட்சத்திரம்: சுவாதி<br>கி.பா: 62<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்: BSC, MSC/ விரிவுரையாளர்<br>தொ.இ: B/4430 | பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: கார்த்திகை<br>கி.பா: 57<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்: A/L ஆசிரியர்<br>தொ.இ: G/4439 |

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறந்திருக்கும்.
(ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம்)

## கல்லூரிகளுக்கிடையிலான விஞ்ஞானப் போட்டி நிகழ்ச்சி

தமிழ் மாணவர்களின் விஞ் ஞான அறிவினை மேம்ப டுத்தும் நோக்குடன் யாழ்ப் பாண விஞ்ஞான சங்கம் கடந்த காலங்களில் நடத்தி வந்தது போன்று இவ்வருட மும் வடமாகாண பாடசாலை களுக்கிடையேயான விஞ் ஞானப் போட்டி நிகழ்ச்சி களை நடத்தியுள்ளது. இதற் கான பரிசளிப்பு நிகழ்வு எதிர் வரும் 7ஆம் திகதி வியாழக் கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு இயற்கை விஞ்ஞான கட்டடத் தொகுதியில் (1B) நடைபெறவுள்ளது. பரிசில்கள் பெறும் மாணவர் விபரம் ஏற்கனவே அந்தந்தப் பாடசா லைகளுக்கு அனுப்பி வைக் கப்பட்டுள்ளது. பரிசில்கள் பெறும் மாணவர்கள் இந்நிக ழ்வில் தவறாது கலந்து கொள் ளுமாறு யாழ்.பல்கலைக் கழக விஞ்ஞானபீட தாவரவி யல்துறை பொதுச் செய லாளர் கலாநிதி ப.செவ்வேள் அறிவித்துள்ளார். (இ-3)

## 'அ'புரம் சிறையிலிருந்து 40 கைதிகள் விடுதலை!



அநுராதபுரம் சிறைச்சா லையில் தடுத்து வைக்கப்பட் டிருந்த 40 சிறைக் கைதிகள் நேற்று பொது மன்னிப்பின் கீழ் விடுதலை செய்ய ப்பட்டு ள்ளனர்.

சிறு குற்றச்சாட்டுக்களின் அடிப்படையில் கைது செய் யப்பட்டு நீதி மன்றத்தினால் தண்டப்பணம் விதிக்கப்பட்டு அதனை செலுத்த முடியாத நிலையில் சிறைவாசம் அனுபவித்து வந்தவர்களே நேற்று விடுதலை செய்யப் பட்டுள்ளனர்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் பணிப்புரை யின் கீழேயே இவர்கள் அனை வரும் விடுதலை செய் யப் பட்டுள்ளனர் என சிறை அதி காரிகள் தெரிவித்துள் ளனர். (இ)

## மாணவனின் உடல் இலங்கைக்கு

ரஷ்ய தலைநகர் மொஸ் கோவில் உள்ள மருத்துவ பல் கலைக்கழகம் ஒன்றின் விடு தியில் ஏற்பட்ட தீயில் சிக்கி உயிரிழந்த இலங்கை மாணவ னின் உடல் நேற்று இலங்கை க்கு கொண்டு வரப்பட்டது. மாணவர் விடுதியில் கடந்த மாதம் 23 ஆம் திகதி இரவு ஏற்பட்ட தீ விபத்தில் படுகாயம டைந்த மிஹிரி உவிந்து என்ற இந்த மாணவன் வைத் தியசாலையில் அனுமதிக்கப் பட்டிருந்த நிலையில் உயிரி ழந்தார்.

மாணவர் விடுதியின் 16 ஆவது மாடியில் எரிவாயு ஒழு க்கு காரணமாக ஏற்பட்ட இந்த தீ விபத்தில் 40 மாணவர் கள் காயமடைந்ததாக ரஷ்ய ஊடகங்கள் தெரிவித்துள் ளன. (இ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ராணுவத்தினர் வெளியேறினர்

(கரணவாய்)

**வடமராட்சி கரவெட்டி விநாயகர் வித்தியாலயத்தில் நிலைகொண்டிருந்த இராணுவத்தினர் அங்கிருந்து வெளியேறியுள்ளனர்.**

கடந்த 8வருடங்களுக்கு மேலாக அங்கு நிலைகொண்டிருந்த இராணுவத்தினர் கடந்த 30ஆம் திகதி வியாழக்கிழமை காலை அங்கிருந்து வெளியேறியுள்ளனர்.

மேற்படி பாடசாலை சுமார் ஒரு ஏக்கர் பரப்பளவு விஸ்தீரணத்தைக் கொண்டது. அத்துடன் அங்கு தரம் 5 வரை மாணவர்கள் கல்வி பயின்று வந்திருந்தனர்.

இந்நிலையில் மேற்படி பாடசாலை யுத்த காலத்தில் இராணுவத்தினரால் கையகப்படுத்தப்பட்டிருந்தது.

இவ்வாறு இராணுவத்தினரின் பாவனையில் இருந்து வந்த மேற்படி பாடசாலையே தற்போது இராணுவத்தினரால் விடுவிக்கப்பட்டுள்ளது.



இதேவேளை மேற்படி பாடசாலையை மீள ஆரம்பிக்குமாறு அப்பகுதி பொதுமக்கள் கோரிக்கை விடுத்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-3-60)

## சான்றிதழ் வழங்கல்

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் நடத்தப்பட்ட யோகாசனம் மற்றும் தியான வகுப்புக்களில் கலந்துகொண்டு கற்கை நெறியை பூரணமாக பூர்த்தி செய்தோருக்கு சான்றிதழ்கள் வழங்கப்படவுள்ளன.

இதேவேளை கடந்த வருடத்திலிருந்து இற்றைவரை கற்கைநெறியைப் பூர்த்தி செய்தவர்கள் நல்லூர் நாவலர் மணிமண்டபத்தில் பெயர்களைப் பதிவு செய்யுமாறு இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அபிவிருத்தி உத்தியோகத்தர் கேட்டுள்ளார். (இ-3)

## அச்சம் தவிர் திரைப்படம் நாளை யாழில்

ஈழத்து கலைஞர்களின் முயற்சியில் முற்று முழுதாக யாழ்ப்பாணத்தில் தயாரிக்கப்பட்ட அச்சம் தவிர் முழு நீளத்திரைப்படம் நாளை செவ்வாய்க்கிழமை மாலை 6.30 மணிக்கு சிறப்புக் காட்சியாகவும் எதிர்வரும் புதன், வியாழக்கிழமைகளில் பிற்பகல் 2.30 மணிக்கும் மாலை 6.30 மணிக்கும் யாழ். செல்வா திரையரங்கில் திரையிடப்படவுள்ளது.

சுபாகரனின் தயாரிப்பிலும் கவிமாறன் சிவாவின் இயக்கத்திலும் சயந்தன், உமா, தீலிப் மற்றும் ஏனையோரின் நபடிப்பிலும் இத் திரைப்படம் உருவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-3)

## சமுர்த்தி நிவாரண மீளாய்வு தொடர்பில் பரிசீலித்து நடவடிக்கை எடுக்க பணிப்பு

யாழ்ப்பாணம் குருநகர் பகுதியில் சமுர்த்தி நிவாரண மீளாய்வு தொடர்பாக நேரடியாகச் சென்று அவற்றை பரிசீலித்து உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு யாழ்.பிரதேச செயலருக்கு பணிப்புரை வழங்கியுள்ளதாக யாழ்மாவட்ட அரசஅதிபர் நா.வேதநாயகன் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் குருநகர் பகுதியில் உள்ள சில குடும்பங்களுக்கு சமுர்த்தி நிவாரண கொடுப்பனவு நிறுத்தப்பட்டமை தொடர்பாக அவரிடம் கேட்டபோது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதேவேளை இந்த விடயம்தொடர்பாக யாழ்.மாவட்ட வாழ்வின் எழுச்சி திணைக்கள பணிப்பாளரை தொடர்பு கொண்டு கேட்டபோது நாடு முழுவதும் ஏப்ரல் மாதத்தில் இருந்து சமுர்த்தி பயனாளிகளின் விபரங்கள் ஐந்து பேர் அடங்கிய குழு ஒன்றால் மீளாய்வு செய்யப்படுகின்றது.

பிரதேச சமுர்த்தி உத்தியோகத்தர், கிராம உத்தியோகத்தர், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்,கட்டுப்பாட்டு சபை உறுப்பினர், பிரதேச செயலரால் நியமிக்கப்பட்ட ஒருவர் என ஐந்து பேரும் அந்த விபரத்தை மீளாய்வு செய்து உறுதிப்படுத்த வேண்டும்.

அவர்களால் உறுதிப்படுத்தப்பட்ட விபரம் இறுதியில் என்னிடம் அனுப்பப்படும். அவற்றில் தவறுகள் இருப்பின் மறுபடியும் மீளாய்வு செய்வதற்கு நான் அனுப்பி வைப்பேன்.

ஆனால் யாழ்ப்பாணம் குருநகர் பகுதியில் சமுர்த்தி பயனாளிகளின் தெரிவில் உரிய நடைமுறை பின்பற்றப்படவில்லை என எனக்கு முறைப்பாடு மக்களால் தெரியப்படுத்தப்பட்டது. இது தொடர்பாக நடவடிக்கை மேற்கொள்வதற்கு அரசாங்க அதிபருக்கு தெரியப்படுத்தி உள்ளேன் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-9)

## கடற்பாசி வளர்ப்பு வடக்கில் அதிகரிப்பு

### யாழ்.மாவட்ட அதிகாரி தகவல்

வடமாகாணத்தில் உள்ள கரையோர மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்காக யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார் அகிய பிரதேசங்களில் கடற்பாசி வளர்ப்பு முறை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக யாழ். மாவட்ட நீர்வாழ் உயிரின வளர்ப்பு விரிவாக்கல் அதிகாரி எஸ்.சலீபன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

வடமாகாணத்தில் உள்ள யாழ். மாவட்ட தீவகப் பகுதிகள், கிளிநொச்சி மாவட்ட பூநகரி பிரதேச செயலர் பிரிவு, மன்னார் ஆகிய பிரதேசங்களில் உள்ள கடற்கரை பகுதிகளில் 2013ஆம் ஆண்டு கடற்பாசி வளர்ப்பு முறை பரீட்சார்த்தம் மேற்கொள்ளப்பட்டு 2014ஆம் ஆண்டு வர்த்தக ரீதியாக ஆரம்பிக்கப்பட்டது.

இந்த தொழிலை தற்போது 350 இற்கு மேற்பட்ட மீனவ குடும்பங்கள் மேற்கொண்டு வருகின்றன. இவர்களுக்கு முதற்கட்டமாக வாழ்வின் எழுச்சி திட்டத்தின் ஊடாகவும் அரச சார்பற்ற நிறுவனங்களின் ஊடாக வும் உதவிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

கடற்பாசிமூலம் கரயினன் எனும் பதார்த்தம் பிரித்தெடுக்கப்பட்டு அதில் இருந்து மருத்துவ பொருட்கள் உற்பத்தி,அழகு சாதன பொருட்கள் உற்பத்தி (முகப்பூச்சுக்கள்), செல்லப்பிராணிகளின் உணவு போன்றவை உற்பத்தி செய்யப்படுகின்றன.இது வெளிநாட்டுக்கு ஏற்றுமதியை மேற்கொள்ளும் தொழில் ஆகும்.

தற்போது இத் தொழிலை மேற்கொள்ள பலர் ஆர்வம் காட்டி வருகின்றனர். கடற்கரை பிரதேசங்களில் 4அடி, 5அடி நீர்ப்பரப்பில் மீன்பிடி தொழிலுக்கு இடையூறு இல்லாமல் இந்த தொழில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

பாசி வளர்ப்பை மேற்கொள்ள ஆர்வம் உடையவர்கள் மீனவ கூட்டுறவு சங்கங்கள், கிராமிய அமைப்புக்களின் ஊடாக கடற்றொழில் நீர்வள உயிரியல் விரிவாக்கல் திணைக்களத்தின் ஊடாக எம்மை தொடர்பு கொண்டு பயிற்சிகளையும் உதவிகளையும் பெற்றுக் கொள்ள முடியும்.

இந்த தொழிலை ஆர்வத்துடன் தொடர்ந்து செய்வதால் இலகுவான முறையில் மேலதிக வருமானத்தை மீனவ சமுதாயம் பெற்றுக் கொள்ள முடியும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-9)




## மஹோற்சவ விஞ்ஞாபனம் சனி ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

கைதடி அருள்மிகு ஸ்ரீ கற்பக விநாயகர் தேவஸ்தான வருடாந்த மஹோற்சவ விஞ்ஞாபனம் எதிர்வரும் 9 ஆம் திகதி சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி பத்துத் தினங்கள் இடம்பெறும். (இ)

## பணிப்புறக்கணிப்பு ஒத்திவைக்கப்பட்டது

(யாழ்ப்பாணம்)

யாழ்.தூர சேவைப் பேருந்து உரிமையாளர் சங்கத்தால் கடந்த காலங்களில் நடைமுறையில் இருந்த தனியார் போக்குவரத்து சேவைக்கு 60வீதமும் இலங்கைப் போக்குவரத்து சபைக்கு 40 வீதமும் என்ற நடைமுறையை இலங்கைப் போக்குவரத்துசபை மீறிச் செயற்படுகிறது.

இதனால் ஏற்படும் முரண்பாடு தொடர்பாக கடந்த 29ஆம் திகதி யாழ்.மாவட்ட அரசாங்க அதிபருடன் நடந்த கலந்துரையாடலில் வடமாகாணத்திற்கிடையிலான பேருந்து சேவைகளை ஆற்றும் மன்னார், கிளிநொச்சி, வவுனியா, முல்லைத்தீவு ஆகிய மாவட்ட சங்கங்களின் ஒத்துழைப்புடன் இணைந்து நேர அட்டவணை தயாரித்தாலே பேச்சுவார்த்தை வெற்றி பெறும் என்ற கருத்து சகல தரப்பினராலும் முன்வைக்கப்பட்டது.

அதனை ஏற்றுக்கொண்ட அரச அதிபர் எதிர்வரும் 8 ஆம் திகதி முற்பகல் 10மணிக்கு சம்பந்தப்பட்டவர்களை அழைத்து கலந்துரையாடி முடிவு எடுக்கப்படும் என அறிவித்துள்ளார்.

8ஆம் திகதிய கலந்துரையாடலிலும் வடமாகாண தூர சேவைச் சங்கங்களின் 60 இற்கு 40என்ற கோரிக்கை தீர்க்கப்படாது விட்டால் 11.04.2015 ஆம் திகதி கிளிநொச்சி மாவட்ட தீர்மானத்தின்படி எதிர்வரும் 11ஆம் திகதி திட்டமிட்டபடி பணிப்புறக்கணிப்பு போராட்டம் நடைமுறைப்படுத்தப்படும் என யாழ் தூர சேவை உரிமையாளர் சங்கம் அறிவித்துள்ளது. (இ-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தின் 22 ஆவது வருடாந்த அமர்வுகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தின் 22 ஆவது வருடாந்த அமர்வுகள் எதிர்வரும் 5, 6 மற்றும் 7 ஆம் திகதிகளில் யாழ்.பல்கலைக்கழக விஞ்ஞானபீடத்தின் இயற்கை விஞ்ஞான விரிவுரை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

முதலாம் அமர்வு 5 ஆம் திகதி காலை 8.30 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது. இவ் அமர்வுக்கு யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தின் தலைவர் பேராசிரியர் திருமதி சி.குகநாதன் தலைமை தாங்குவார். இவ்வருடம் ஆரம்ப அமர்வில் களனி பல்கலைக்கழக மருத்துவ பீடாதிபதி பேராசிரியர் நிலாந்தி டி.சில்வா கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

இவ்வருடத்திற்கான பேராசிரியர் கந்தையா பாலசுப்பிரமணியம் தங்கப்பதக்கத்தினை பேராசிரியர் நிலாந்தி டி.சில்வா பெற்றுக் கொள்வதுடன் இத்தங்கப்பதக்கத்திற்கான விரிவுரையினை "குடற்புழுக்களும் மனிதனின் நிலையும்" என்ற தலைப்பில் ஆற்றவுள்ளார். மேலும் இவ்வமர்வில் பிரிவு B இனால் பிரசுரிக்கப்படும் "பிரயோக விஞ்ஞானச்சுடர்" எனும் சஞ்சிகையும் வெளியிடப்படவுள்ளது.

தொடர்ந்து 2, 3 மற்றும் 4 ஆம் அமர்வுகள் 5 ஆம் திகதியும் 5, 6 ஆம் அமர்வுகள் 6 ஆம் திகதியும் 7,8 ஆம் அமர்வுகள் 7 ஆம் திகதியும் நடைபெறவுள்ளது. 7 ஆம் திகதி பிற்பகல் 2 மணிக்கு புதிய தலைவர் கலாநிதி க.தபோதரனின் தலைமையுரை நிகழவுள்ளது. அவரின் உரையினைத் தொடர்ந்து பாடசாலை மட்டத்தில் நடைபெற்ற விஞ்ஞான நிகழ்ச்சியில் வெற்றியீட்டிய பாடசாலை மாணவர்களுக்கான பரிசில்கள் வழங்கும் வைபவம் இடம்பெறும்.

யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தின் அமர்வுகளில் பங்குபற்றி சிறப்பிக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம் என அதன் செயலாளர் கலாநிதி ப.செல்வேள் அறிவித்துள்ளார். (இ-3)




# பலரையும் பழிவாங்கியமையினாலேயே மகிந்த அரசியல் அநாதையாகியுள்ளார்

## சரத் பொன்சேகா சாடல்

(கொழும்பு)

**நாட்டின் முக்கிய பொறுப்புகளில் இருந்த தம்மை போன்ற பலரை பழிவாங்கியமையினாலேயே முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இன்று அரசியல் களத்தில் அநாதையாகியுள்ளதாக ஜனநாயக கட்சியின் தலைவர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.**



சர்வதேச தொழிலாளர் தினத்தை முன்னிட்டு ஊழல் இல்லா நாடு என்ற தொனிப்பொருளில் ஜனநாயக கட்சியின் மேதின பொதுக் கூட்டம் நாரஹேன்பிட்டி ஷாலிகா மைதானத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் பங்கேற்று உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நிகழ்வின் ஆரம்ப கட்டமாக கொழும்பு ராஜகிரிய சந்தியிலிருந்து முன்னெடுக்கப்பட்ட பேரணி பொறளை ஊடாக நாரஹேன்பிட்டி மைதானத்தை வந்தடைந்தது.

பேரணியில் நூற்றுக்கணக்கானோர் கலந்து கொண்டதுடன் ஊழல் இல்லாத நாடு வேண்டும், மக்களை ஏமாற்றாத ஆட்சியாளர்கள் வேண்டும் என்றவாறு கோசங்கள் எழுப்பப்பட்டன.


இதன்போது பேரணியில் ஜனநாயக கட்சியின் தலைவர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா, அவரது பாரியார் அனோமா பொன்சேகா உட்பட கட்சியின் முக்கியஸ்தர்கள் பலரும் கலந்து கொண்டிருந்தனர.

இதன்போது தொடர்ந்தும் உரையாற்றிய சரத் பொன்சேகா, முன்பு நான் 3 முறை யுத்த பூமியில் தாக்குதலுக்கு இலக்கான போதிலும் மீண்டும் என்னை தயார் படுத்தி கொண்டு யுத்தத்திற்கு சென்றேன். ஆனால் எதிர்பாராத விதத்தில் நான் அரசியல் பழிவாங்கல்களுக்கு உள்ளான போது தான் புரிந்தது யுத்த வெற்றியை அடைய முடியாது நீண்ட காலம் தடுத்தவர் மகிந்தவென்று.

அவ்வாறு தெரிந்த போது யுத்தம் நிறைவடைந்தது. நான் சிறையில் அடைக்கப்பட்டேன். அன்று அமைதியாக இருக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. ஆனால் இன்று என் நிலை கண்டால் மகிந்தவுக்கு மூச்சுத்திணறக் கூடும்.

நான் மட்டுமல்ல, நாட்டிற்காக உழைத்த பல முக்கியஸ்தர்கள் பழிவாங்கப்பட்டனர். அதனால் தான் இன்று மகிந்தவுக்கு அரசியல் களத்தில் அநாதையாக வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. மகிந்தவின் எண்ணங்கள் பல இன்று நிறைவேறாது போயுள்ளன. அவர் எதிர்பார்த்த மோசமானதொரு ஆட்சிக்கு மாறானதொரு ஆட்சியே இன்று இடம் பெறுவதால் அதனை கண்டு மகிந்த நோயாளியாக மாறியுளளார்.

முன்பு மகிந்தவின் கோரிக்கைகளுக்கு நான் இணங்காத காரணத்தினால் ராவணா பலய அமைப்பினை கொண்டு என்னை மிரட்டிய மகிந்தவோடு முரண்படுவது மலையொன்றில் தலையை தானே முட்டிக் கொள்வது போன்று இருந்தது. ஆனால் இன்று நான் விஸ்வரூபம் எடுத்துள்ளதால் மகிந்த எனக்கு எறும்புக்கு நிகரான உருவமாக விளங்குகிறார் என மேலும் தெரிவித்துள்ளார். (இ)



கரவெட்டி வெள்ளன் பிள்ளையார் கோவில் தேர்த்திருவிழா நேற்று முன்தினம் நடைபெற்றது. (படம்; - கரணவாய் செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 16 கோரிக்கைகள் அடங்கிய மகஜர் யாழ்.அரசாங்க அதிபரிடம் கையளிப்பு

(கரணவாய்)

வடமராட்சி கிழக்கு அபிவிருத்தி அமைப்பினால் 16 கோரிக்கைகள் அடங்கிய மகஜர் ஒன்று யாழ். அரச அதிபரிடம் கையளிக்கப்பட்டுள்ளத்.

கடந்த வியாழக்கிழமை மருதங்கேணியில் யாழ்.மாவட்ட செயலகத்தினால் ஒழுங்கு செய்யப்பட்ட நடமாடும் சேவையில் கலந்து கொண்ட யாழ்.அரசதிபரிடம் இம்மகஜர் கையளிக்கப்பட்டுள்ளது.

வடமராட்சி கிழக்குப் பிரதேசத்தின் அபிவிருத்தியும் சுற்றுச் சூழல் பாதுகாப்பு சம்பந்தமான முறையீடும் என்ற தலைப்பிடப்பட்ட அம் மகஜரில்,

யாழ்.குடாநாட்டு குடிநீர் தேவைக்காக மருதங்கேணி பிரதேச கடலிலிருந்து நீர் பெற்று சுத்திகரிப்பு செய்யப்பட்டு விநியோகிக்கப்பட இருப்பதாக அறிகிறோம்.

இந் நடவடிக்கையினால் இப்பகுதியில் சுற் றுச்சூழலுக்கு ஆபத்து ஏற்படும் எனவும் மீன்பிடி பாதிக்கப்படும் எனவும் மக்கள் மத்தியில் அச்சம் காணப்படுகிறது. எனவே இவ்விடயம் சம்பந்தமாக அப்பகுதி மக்களின் அபிப்பிராயத்தைப் பெற்றும் சுற்றுச்சூழல் சம்பந்தமான ஆய்வு அறிக்கையினை பகிரங்கப்படுத்தியும் நடை முறைப்படுத்த வேண்டுமெனவும் அத்தட்டம் மேற்கொள்வதனால் அப்பிரதேசத்திற்கு பாதிப்பு ஏற்படும் பட்சத்தில் அதனை இடைநிறுத்த வேண்டும் அல்லது கடற்றொழிலாளர்களுக்கு நட்டஈடு வழங்கப்படுமென உத்தரவாதம் அளிக்கப்பட வேண்டும்.

மருதங்கேணி கிராமிய வைத்திய சாலை, அம்பன் மருந்தகம் ஆகியன தரமுயர்த்தப்படுவதுடன் அவைக்குரிய ஆளணி பௌதீக வளங்கள் வழங்கப்பட வேண்டும்.

வடமராட்சி கிழக்கு என தனியான பிரதேச சபை ஏற்கனவே சிபார்சு செய்யப்பட்டதற்கிணங்க உருவாக்கப்பட்டு அப்பகுதியின் அபிவிருத்தி துரிதப்படுத்தப்பட வேண்டும்

வடமராட்சி கிழக்கு பிரதேசத்திலுள்ள கனியவளம் (மணல்) கண்டல்தாவரம், சவுக்கு, பனை என்பன அழிக்கப்படுவது உடனடியாக நிறுத்தப்படல் வேண்டும். அப்பிரதேசத்தில் தடைசெய்யப்பட்டிருப்பது தொடர்ந்து நீடிக்கப்பட வேண்டும்.

பனை அபிவிருத்தி சபையினால் முன்பு மாமுனையில் பராமரிக்கப்பட்டு வந்த பனந்தோப்பு பாதுகாக்கப்பட்டு அது அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும்.

தென்னிந்திய, தென்னிலங்கை மீனவர்கள் வடமராட்சி கிழக்கு கடலில் அத்துமீறி நுழைந்து கடல் வளங்களை அழிப்பதும் எமது கடற்றொழிலாளர்கள் மீது தாக்குதல் நடத்துவதையும் தடுக்க உடனடி நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.

சுனாமியினால் போரால் தமது கடற்றொழில் உபகரணங்களை இழந்த அனைத்து கடற்றொழிலாளர்களுக்கும் கடற்றொழில் உபகரணங்கள் வழங்கி அவர்களின் வாழ்வாதாரம் உயர நடவடிக்கை எடுக்கப்படவேண்டும். 1980 முன் தாளையடியில் இயங்கி வந்த மீன்பிடி இலாகா அலுவலகம் மீண்டும் இயங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

போர் நடவடிக்கையினால் கடந்த காலங்களில் கைவிடப்பட்டிருந்த வயல்கள், பயிர்ச்செய்கை நிலங்களில் பயிர்ச்செய்கை நடவடிக்கைகளை மேற்கொள்ள விவசாயிகளிடம் விழிப்புணர்வு மானியங்கள் மீள் நடுகை ஊக்குவிப்புக்கள் வழங்கப்பட வேண்டும்.

காணிகள் அற்ற அனைவருக்கும் அரச காணிகள் பகிர்ந்தளிக்கப்படல்வேண்டும்.சுனாமியினால்போரால் வீடுகளை இழந்த அனைவருக்கும் வீடுகள் அமைத்துக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.

தெங்கு பனம் பொருள் கூட்டுறவுச் சங்கம் வடமராட்சி கிழக்குக்கு தனியாக அமைத்து அத்தொழிலாளர்களின் வாழ்வாதாரம் உயர நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

மருதங்கேணியில் தபால் நிலையம் ஒன்று அமைக்கப்பட்டு அப்பிரதேசத்தில் தபால் நிலையம் இல்லாத குறைபாடு நீக்கப்பட வேண்டும்.

போரால் பாதிப்படைந்துள்ள அங்கவீனர்கள், விதவைகள், பிள்ளைகள் ஆகியோரின் மறுவாழ்வுக்கு விசேட செயலணி அமைக்கப்பட்டு அவர்களின் மறுவாழ்வுக்கும் கல்விக்கும் ஊக்கமளிக்கப்பட வேண்டும் உள்ளிட்ட 16 கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டுள்ளது. (இ-3-60)

## பூநகரி கடற்றொழிலாளர் சமாசத்திற்கு

# 3.2 மில்லியன்ரூபா செலவில் பல்வேறு உதவித்திட்டங்கள்

### சர்வதேச தொழிலாளர் அமைப்பின் கள இணைப்பாளர் தெரிவிப்பு

**(கிளிநொச்சி)**

**சர்வதேச தொழிலாளர் அமைப்பின் (ILO) ஊடாக கிளிநொச்சி மாவட்டம் பூநகரி பிரதேசத்தில் அமைந்துள்ள கடற்றொ ழிலாளர் சமாசத்திற்கு பல்வேறு உதவித் திட்டங்கள் வழங்கப்பட்டு வருவதாக சர்வ தேச தொழிலாளர் அமைப்பின் (ILO) கள இணைப்பாளர் எஸ்.தபேசன் தெரிவி த்துள்ளார்.**

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

உள்ளூர் பொருளாதார அபிவிருத்தி ஊடாக மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்கோடு இந்நிறுவனம் தனது செயற்பாடுகளை நடைமுறைப்படுத்தி வருகின்றது.

அந்த வகையில் கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ளூர் உற்பத்தியை மேற்கொண்டு வரும் மக்களுக்கு வலுவூட்டும் வகையில் பல்வேறு திட்டங்களை மேற்கொண்டுள்ளோம்.

எமது நிறுவனத்தின் ஊடாக துறை சார்ந்த ஆய்வுகளை இலவசமாக மேற்கொண்டு உற்பத்தியாளர்களுக்கு எந்தவகையில் எவ்வாறான உதவிகளைச் செய்யலாம் என வகைப்படுத்தி அவற்றை ஒழுங்குசெய்து தொழில்வாய்ப்புக்களை ஏற்படுத்திக்கொடுப்பதே எமது நோக்கமாகும்.

இந்த வருடம் பூநகரி சமாசத்தில் உள்ள 6 பயனாளிகளைத் தெரிவு செய்து 3.2 மில்லியன் ரூபா செலவில் மீன் வளர்ப்பு திட்டத்திற்குரிய மீன் உணவுப் பொருட்களை உள்ளூரிலேயே உற்பத்தி செய்வதற்குரிய பயிற்சிகள், உபகரண உதவிகள் என்பனவற்றை வழங்கவுள்ளோம்.

அத்துடன் மீன் வளர்ப்பு, நண்டு பதனிடல், படகு கட்டுமான தொழில், மீனவ சங்கங்களில் முகாமைத்துவம், கணக்கியல் போன்ற துறைகளை வளப்படுத்துதல், இடைத்தரகர் மூலம் கடல் உணவுகளை கொள்வனவு செய்யாமல் நேரடியாக சங்கங்களே தொடர்புகளை மேற்கொள்வதற்குரிய ஏற்பாடுகளையும் அதற்குரிய வாகன வசதிகளையும்பூநகரி சமாசத்திற்குவழங்குவதற்கு ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளோம்.

அத்துடன் கிளிநொச்சி மாவட்ட பூநகரி கடற்றொழிலாளர்கள் சமாசத்தின்கீழ் 16 மீனவ சங்கங்கள் உள்ளன.

இச்சங்கங்களுக்கான உதவிகளையும் தேவைகளையும் கண்டறிந்து சமாசத்தின்ஊடாக வழங்கி வருகின்றோம் எனஅவர் மேலும் தெரிவித்தார். (2-9)

## மத்திய வங்கி

### பிராந்திய அலுவலகத் திறப்பு விழா

(கிளிநொச்சி)

இலங்கை மத்திய வங்கி பிராந்திய அலுவலகத்திறப்பு விழாநாளை மறுதினம் புதன்கிழமை காலை 9.15 மணிக்கு கிளிநொச்சி அறிவியல் நகரில் மீள்குடியேற்ற அமைச்சர் டி.எம்.சுவாமிநாதனினால் திறந்து வைக்கப்படவுள்ளது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினர்களாக கொள்கை அபிவிருத்தி மற்றும் பொருளாதார விவகார அமைச்சர் டாக்டர் ஹர்ஷ டீ சில்வா, மத்திய வங்கி ஆளுநர் அர்ஜுன் மகேந்திரன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர்.

அத்துடன் அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், மாகாண சபைத் தலைவர்கள், பிரதேச செயலாளர்கள், அரசாங்க உத்தியோகத்தர்கள் எனப் பல தரப்பினர் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர். (2)






கிளிநொச்சி இரணைமடு கனகாம்பிகை அம்பாள் தேர்த்திருவிழா நேற்று முன்தினம் பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் புடைசூழ நடைபெற்றதைப் படங்களில் காணலாம். (படங்கள்: கிளிநொச்சி-1 செய்தியாளர்)

## "விழிப்புடன் இருப்போம் விபத்தினை தவிர்ப்போம்"



கிளிநொச்சி மாவட்ட ஹலோ ரஸ்ட் நிறுவனத்தின் நிதியுதவியுடன் சர்வோதயத்தின் அனுசரணையுடன் விழிப்புடன் இருப் போம்- விபத்தினை தவிர்ப்போம் எனும் வீதிநாடகநிகழ்வுதொடர்ச்சியாக நடைபெற்று வருகின்றது.

இதற்கமைய கிளிநொச்சசி கலாலயா நாடகக் குழுவினரின் ஒழுங்குபடுத்தலின்கீழ் நடத்தப்பட்ட மேற்படி வீதி நாடகம் அண்மையில் உருத்திரபுரம் கூழாவெளிச் சந்தியில் நடைபெற்றது. (2-254)

## 11.05 மில்லியன் ரூபா செலவில் குறுளுவேவகுளம் புனரமைப்பு

முரண்பாடுகளால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களுக்கான அவசரகால கருத்திட்டத்தின் (Care project) 11. 5 மில்லியன் ரூபா ஒதுக்கீட்டில் முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள குறுளுவேவ குளம் புனரமைக்கப்பட்டுள்ளது.

இதன்போது குளக்கட்டு மற்றும் வாய்க்கால்கள் புனரமைக் கப்பட்டது.

அத்துடன் அணைக்கட்டு, வான் மட்டம் உயர்த்தப்பட்டது. துருசுகள் திருத்தம், அணைக்கட்டின் மேலான வீதி அமைக்கப்பட்டது. அணைக்கட்டின் சாய்வில் புல் பதித்தல் நடைபெற்றுள்ளது.

இக் குளத்தின் திருத்த[illegible] காரணமாக 45 விவசாய[illegible]ம்பங்கள் பயனடைந்துள்ளன. (2)

## குரங்குக் கூட்டங்கள் அட்டகாசம்; வீடுகளின் கூரைகள் பலத்தசேதம்

### கூடுகள் அமைத்து பிடிக்குமாறு பொதுமக்கள் கோரிக்கை

(கிளிநொச்சி)

கொடிகாமம் நகரங்களை அண்மித்த லவண்யா காளி அம்மன் கோவில் சுற்றுவட்டத்தைச் சேர்ந்த இடங்களில் குரங்குகளின் அட்டகாசம் அதிகரித்து காணப்படுவதால் அங்கு குடியிருப்போரும் குழந்தைகளும் பல்வேறு அசௌகரியங்களை எதிர்கொள்வதாகத் தெரிவிக்கின்றனர்.

குரங்குகளின் அட்டகாசம் கூடுதலாக இங்கு நடைபெற்று வீடுகளின் ஓடுகள், பயன்தரும் பயிர் வகைகள் என்பன சேதமடைந்துள்ளன.

இதேநிலையில் பளைப் பிரதேசத்திலும் கூட்டம் கூட்டமாக வருகை தரும் குரங்குகளின் அட்டகாசத்தினால் பாதிப்புக்கள் ஏற்பட்டுள்ளதாக அப்பகுதி மக்களாலும் கவலை தெரிவிக்கப்படுகின்றது.

ஏற்கனவே குரங்குகளின் அட்டகாசத்தை குறைக்கும் முகமாக வடமராட்சி பகுதிகளில் வனவிலங்கு திணைக்களத்தின் உதவியுடன் கூடுகள் அமைத்து குரங்குகள் பிடிக்கும் நடவடிக்கை அண்மைக்காலங்களில் முன்னெடுக்கப்பட்டிருந்தது.

இதேபோன்று தமது பிரதேசங்களிலும் கூடுகளை அமைத்து குரங்குகளைப் பிடிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவேண்டுமென சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (2-254)

## கற்கிடந்தகுளம் கிராம பிரதானவீதி புனரமைப்பு

மன்னார் கற்கிடந்தகுளம் கிராம பிரதான வீதியை புனரமைக்கும் பணி கடந்த வெள்ளிக்கிழமை வடக்கு மாகாண அமைச்சர் பா.டெனிஸ்வரனினால் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

மன்னார்-மதவாச்சி ஏ-14 பிரதான வீதியின் கற்கிடந்தகுளம் கிராம சந்தியில் இருந்து கற்கிடந்த [illegible] காலமாக புனரமைக்கப்படாது குன்றும் குழியுமாக காணப்படுவதால் அவ்வீதி வழியாக பயணிக்கும் பொது மக்கள் பல்வேறு அசௌகரியங்களை எதிர்நோக்கி வந்தனர்.

இந்த நிலையில் இக்கிராம மக்களின் நலனை கருத்தில் கொண்டு குறித்த வீதியினை புனரமைப்பு செய்வதற்கான நடவடிக்கைகளை வடக்கு மாகாண அமைச்சர் பா.டெனிஸ்வரன் ஆரம்பித்து வைத்தமை குறிப்பிடத்தக்கது. (2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மினிசூறாவளியினால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு உதவிப் பொருட்கள்

## கிளிநொச்சி மாவட்ட அனர்த்த முகாமைத்துவப்பிரிவு வழங்கியது

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் பன்னங்கண்டி மாயவனூர், வட்டக்கச்சி மாவடி அம்மன் புதுக்காடு ஆகிய கிராமங்களில் கடந்த 30 ஆம் திகதி மினி சூறாவளியுடன் கூடிய மழையினால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு கிளிநொச்சி மாவட்ட அனர்த்த முகாமைத்துவப் பிரிவினரால் உதவிப் பொருட்கள் வழங்கப்பட்டுள்ளன.

இது தொடர்பில் தெரியவருவதாவது,

மேற்படி கிராமங்களில் வீசிய மினி சூறாவளியுடன் கூடிய மழையினால் பன்னங்கண்டி கிராமத்தில் தகரங்களினால் அமைக்கப்பட்ட 5 வீடுகளின் கூரைகள் வீசிய கடும் காற்றினால் தூக்கி வீசப்பட்டதுடன் பயன்தரும் மரங்களும் முறிந்தன.



வட்டக்கச்சி மாவடி அம்மன் புதுக்காடு பகுதியில் சீற்றினால் அமைக்கப்பட்ட 11 வீடுகளின் கூரைகள் தூக்கி வீசப்பட்டதுடன் இரண்டு கடைகளின் கூரைகள் சேதமடைந்தன.

மாயவனூர் கிராமத்தில் ஏழு வீடுகள் பலத்த சேதமடைந்ததுடன் இரண்டு வீடுகள் பகுதிச் சேதத்திற்குள்ளாகின.

மேற்படி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு உணவல்லாத பொருட்கள் அடங்கிய பொதிகளும் தற்காலிக கூடாரங்களும் நேற்று முன்தினம் அந்தந்த கிராமங்களில் வைத்து கிளிநொச்சி மாவட்ட அனர்த்த முகாமைத்துவப் பிரிவினரால் வழங்கப்பட்டது.

அத்துடன் அனர்த்தத்தினால் சேதமடைந்த மரங்களை அப்புறப்படுத்தும் நடவடிக்கையையும் அவர்கள் மேற்கொண்டனர் என கிளிநொச்சி மாவட்ட அனர்த்த முகாமைத்துவ உதவிப் பணிப்பாளர் கு.சுகுணதாஸ் அறிவித்துள்ளார். (2-277)

## பதிவுத் திருமண வேலைத்திட்டம் பொன்னகரில் ஆரம்பிக்கப்பட்டது

கிளிநொச்சி மாவட்டத்தில் கட ந்த காலங்களில் பதிவுத் திருமணம் நடைபெறாமல் வாழ்ந்து வரும் தம்பதிகளை பதிவுத்திருமணம் செய்து வைக்கும் வேலைத்திட்டம், கிளிநொசசி மாவட்ட சட்ட உதவி ஆணைக்குழு வின் ஏற்பாட்டில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. நாட்டில் நிலவிய அசாதாரண சூழ் நிலை காரணமாக பதிவுத் திரு மணம் செய்யாத இளம் குடும்பங்களை இனங்கண்டு, கிராம அலு வலர் பிரிவுகளில் குறித்த வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

முதலாவது வேலைத்திட்டம் கடந்த முதலாம் திகதி கிளிநொச்சி பொன்னகர் பகுதியில் ஆரம்பிக்கப்பட்டது. இதன்போது 10 தம்பதிகளு க[illegible]வுத்திருமணம் நடைபெற்றது.

[illegible]ற்றோர்களுக்கு திருமண பதிவு இல்[illegible]மையால் தேசிய அடையாள அட்[illegible] உள்ளிட்ட பல ஆவணங் களை பிள்ளைகள் பெற்றுக் கொள்ள முடியாத நிலை காணப்படுகின் றது. இதனைக் கருத்திற் கொண்டே இந்த வேலைத்திட்டம் ஆரம்பிக்கப் பட்டது. கிளிநொச்சி மாவட்டத்திலு ள்ள அனைத்து கிராமங்களிலும் இந்த வேலை ததிட்டம் படிப்படியாக மேற்கொள்ளப்பட வுள்ளது. பதிவுத் திருமணம் செய்யாதவர்கள்கிராமஅலுவலரிடம்தகவல்கொடுபபதன் மூலம், பதிவுத்திருமணம்செய்து வைக்கப்படுவர் என கிளிநொச்சி மாவட்ட சட்ட உதவி ஆணைக்குழு அலுவலர் ஒருவர் கூறினார். (2)

# முல்லை. கல்வி வலயத்தில் பதவிநிலை வெற்றிடங்கள்

(மல்லாவி)

முல்லைத்தீவு வலயக் கல்வி அலுவலகத்தில் நிலவுகின்ற முறைசாராக் கல்வி பாட உதவிக்கல்விப் பணிப்பாளர், ஆரம்பக் கல்வி உதவிக்கல்விப் பணிப்பாளர் ஆகிய பதவிநிலை வெற்றிடங்கள் மற்றும் 1ஏபி தரப்பாடசாலைகள் நான்கு, 1சி தரப்பாடசாலைகள் இரண்டு ஆகியவற்றிற்கான அதிபர் பதவி நிலை வெற்றிடங்கள் என்பவற்றிற்கு வடக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் செயலாளர் இ.இரவீந்திரனினால் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இது தொடர்பில் அவர் தெரிவிக்கையில்,

கடமை நிறைவேற்றும் பாடரீதியான உதவிக்கல்விப் பணிப்பாளர்கள் பதவி நிலைக்கான விண்ணப்பங்களும் 1ஏபி தர பாடசாலைகளான மு/விசுவமடு மகாவித்தியாலயம், மு/செம்மலை மகாவித்தியாலயம், மு/முல்லைத்தீவு மகா வித்தியாலயம், மு/புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி ஆகியவற்றிற்கும் 1சி தர பாடசாலைகளான மு/இரணைப்பாலை மகா வித்தியாலயம், மு/அளம்பில் றோ.க.மகா வித்தியாலயம் ஆகியவற்றிற்கான அதிபர் வெற்றிடங்களுக்கும் தகுதியானவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இதில் உதவிக்கல்விப் பணிப்பாளர்களுக்கான விண்ணப்ப முடிபுத் திகதி எதிர்வரும் 15 ஆம் திகதி வெள்ளிக்கிழமை ஆகும்.

அதிபர்களுக்கான விண்ணப்ப முடிபுத்திகதி எதிர்வரும் 20ஆம் திகதி புதன்கிழமை ஆகும்.

மேற்படி பதவி நிலை வெற்றிடங்களுக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் முல்லைத்தீவு வலயக்கல்வி அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு சேவை தொடர்பான நிபந்தனைகளையும் மற்றும் மேலதிக தகவல்களையும் பெற்றுக்கொள்ள முடியும்.

அத்துடன் விண்ணப்பதாரிகள் வலயக்கல்வி அலுவலகத்தில் உள்ள விண்ணப்பப்படிவத்தைப் பெற்று பூரணப்படுத்தி வலயக் கல்விப் பணிப்பாளரின் சிபார்சுடன் மேற்படி திகதிகளுக்கு முன்னர் செயலாளர், கல்வி அமைச்சு, வடக்கு மாகாணம், செம்மணி வீதி, நல்லூர், யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைக்குமாறு அவர் கேட்டுள்ளார். (2-15)




# வெசாக் தினத்தை முன்னிட்டு 21 கைதிகள் நேற்று விடுவிப்பு



வெசாக் தினத்தை முன்னிட்டு வவுனியா சிறைச்சாலையில் இருந்து 21 கைதிகள் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

வெசாக் தினத்தை முன்னிட்டு வவுனியா சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த 21 கைதிகள் நேற்று விடுதலை செய்யப்பட்டனர்.

வெசாக் தினத்தை முன்னிட்டு நாடளாவிய ரீதியில் பொது மன்னிப்பு வழங்கி ஆயிரத்து 400 கைதிகள் விடுதலை செய்யப்பட்டுள்ளனர். இதன் ஒரு கட்டமாக வவுனியா சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த மூன்று பெண் கைதிகளும் 18 ஆண் கைதிகளுமாக மொத்தம் 21 பேர் விடுதலை செய்யப்பட்டனர்.

சிறு குற்றங்கள் செய்தோர் மற்றும் நீதிமன்றினால் தீர்ப்பு வழங்கப்பட்ட நிலையில் தண்டப்பணங்களை செலுத்த முடியாது சிறைத் தண்டனை பெற்றோர் ஆகியோரே இவ்வாறு விடுதலை செய்யப்பட்டவர்களாவர். (2-250)

# 3 மாதங்களில் மட்டும் 15 கஞ்சா வழக்குகள்

## கிளிநொச்சி மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் அலுவலகத் தகவலின்படி

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் கசிப்பு உட்பட சட்டவிரோத மதுபான உற்பத்திகளின் செயற்பாடுகள் அதிகரித்துள்ளதாக கிளிநொச்சி மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சர் அலுவலகம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.


இவ்வருடத்தில் கடந்த 3 மாதங்களில் மாத்திரம் 105 சட்டவிரோத மதுபான வழக்குகளும், 15 கஞ்சா வழக்குகளும் பதிவு செய்யப்பட்டுள்ளன.

போதைப்பொருள் தொடர்பில் கஞ்சா மட்டுமே காணப்படுகின்றது.

கிளிநொச்சி மாவட்டத்தில், கடந்த 2012 ஆம் ஆண்டு 316 சட்டவிரோத மதுபான வழக்குகளும், 16 கஞ்சா வழக்குகளும், கடந்த 2013 ஆம் ஆண்டு 468 சட்டவிரோத மதுபான வழக்குகளும், 50 கஞ்சா வழக்குகளும், 2014 ஆம் ஆண்டு 499 சட்டவிரோத மதுபான வழக்குகளும், 64 கஞ்சா வழக்குகளும் பதிவு செய்யப்பட்டுள்ளன.

குற்றச் செயல்களில் சம்பந்தப்படும் குற்றவாளிகள் கைது செய்யப்பட்டு, நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு வருவதாகவும் அலுவலகம் மேலும் தெரிவித்தது. (2)

# கடையைப் பந்தாடிய டிமோ பலத்த சேதத்திற்குள்ளானது



(பனிக்கன்குளம்)

டிமோ வாகனம் விபத்திற்குள்ளாகி வேகக்கட்டுப்பாட்டை இழந்த நிலையில் வீதியோரமாக இருந்த சிறிய கடையொன்றினுள் நுழைந்ததில் கடை முற்றாக சேதமடைந்த அதேவேளை விபத்தில் டிமோ வாகனமும் பலத்த சேதத்திற்குள்ளானது.

இச்சம்பவம் நேற்றுக்காலை ஏ-9 வீதி பனிக்கன்குளம் பகுதியில் இடம்பெற்றுள்ளது. இது தொடர்பில் தெரியவருவதாவது,

மாங்குளத்திலிருந்து கிளிநொச்சி நோக்கி குறித்த வாகனமும் பேருந்தும் பயணித்த வேளை அவை ஒன்றையொன்று முந்திச் செல்ல முற்பட்ட வேளை டிமோ வாகனம் விபத்திற்குள்ளாகி அரு கில் இருந்த தகரத்தினால் அமைக்கப்பட்ட சிறிய கடையொன்றினுள் நுழைந்தது. இதனை அடுத்து கடை முற்றாக சேதமடைந்தது.

இது தொடர்பாக தகவலறிந்த மாங்குளம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டனர். (2-281)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# சிறுவர் அரங்கம்


1131

## மோசமான தொழில்

...அவனைக் கண்டதுமே சோமனின் சப்த நாடியும் ஒடுங்கிவிட்டது. பயத்தில் கை, கால்கள் நடுங்கின. உடனே, குட்டையான திருடன், "ஐயா! நாங்கள் பக்கத்து கிராமத்து வியாபாரிகள். வெல்லம் விற்பதற்காக நகரத்திற்கு வந்தோம். வியாபாரம் முடிந்து இரவு தங்குவதற்காக விடுதியை நோக்கிச் செல்லுகையில், வழி தவறிவிட்டோம். சத்திரத்திற்குச் செல்லும் வழியை தயவுசெய்து காட்டுவீர்களா?" என்று அப்பாவி போல் நடித்தான்.

"ஓகோ! நீங்கள் கிராமத்து ஆசாமிகளா? பாவம்! நாள் முழுதும் மூட்டையைத் தலையில் ஏற்றித் தெருத் தெருவாக அலைந்து களைத்திருப்பீர்கள். அதிருக்கட்டும்! இப்படி நாள் முழுதும் உழைத்து, இவன் எப்படி தொந்தியும், தொப்பையுமாக இருக்கிறான்?" என்று சோமனைக் காட்டிக் கேட்டான். சோமனுக்கு பயத்தில் உயிரே போய் விடும் போலிருந்தது. தான் இன்று சிக்கிக் கொள்வோம் என்று நடுங்கினான.

அதற்குள் உயரமான திருடன் சாமர்த்தியமாக, "ஐயா! நாங்கள் சகோதரர்கள். இவன் என் தம்பி பீமன்! சரியான சோம்பேறி! உழைக்காமல் உண்டு பெருச்சாளிபோல் இருக்கிறான். இன்றுதான் முதன் முதலாக மூட்டை தூக்கி வியாபாரம் செய்ய வந்திருக்கிறான்!" என்றான். அதைக் கேட்டு பலமாகச் சிரித்த காவலன், அவர்களுக்கு சத்திரம் செல்லும் வழியைக் காட்டிவிட்டு, "சரி! நீங்கள் நேராக அங்கு சென்றுவிடுங்கள்! ஒரு மணி நேரம் சென்றபின், நான் அங்கு வந்து நீங்கள் இருக்கிறீர்களா என்று சோதனை செய்வேன்!" என்று எச்சரித்துவிட்டுக் கிளம்பினான்.



சோமனுக்குச் சென்ற உயிர் மீண்டது. ஆயினும், திருட்டுத் தொழில் மீது அக்கணமே வெறுப்பு ஏற்பட்டுவிட்டது. 'சே! ஒவ்வொரு நொடியும் பயப்பட வேண்டி இருக்கிறது. கண்டவரிடமெல்லாம் பொய் பேச வேண்டியிருக்கிறது. காவலர்கள் கையில் மட்டும் அகப்பட்டால், நம்மைப் பின்னி எடுத்து விடுவார்கள். இப்படி பயந்து பயந்து அடி, உதை வாங்கிக் கொண்டு இந்தத் தொழிலை செய்ய வேண்டுமா?' என்று அவனுக்குத் தோன்றியது. மற்ற இருவரும அவனை ஒரு மாளிகைக்கு அழைத்துச் சென்றனர். அது ஒரு வைர வியாபாரியின் வீடு. சோமனை வாயிலில் காவலுக்கு நிறுத்திவிட்டு, அவர்கள் இருவரும் உள்ளே புகுந்த னர். உடனே, தப்பிததோம் பிழைத்தோம் என்று சோமன் தன் வீட்டை நோக்கிப் புறப்பட்டான். சிறிது தூரம் சென்றதும், தான் விட்டுவந்த மாளிகை அருகே ஒரே கலவரமும், ஆரவாரமும் கேட்டு, திடுக்கிட்டுத் திரும்பினான்.


த்ன்னுடன் வந்த திரு டர்களில் ஒருவன் மாட்டிக் கொண்டதையும், தப்பியோடும் மற்றவனை காவலர்கள் துரத்துவதையும் கண்டு, இருட்டான ஒரு சந்தில் ஓடி ஒளிந்து கொண டான்.

சற்று நேரத்தில், காவலர்கள் இரண்டு பேரையும் கைகளைக் கயிற்றி னால் கட்டித் தெருவில் இழுத்துச் சென்றனர். 'கடவுளே! இந்நேரம் நான் சிக்கியிருந்தால், என்னையும் அல்லவா சவுக்கால் அடித்து இழுத்துச் சென்றிருப்பார்கள்! என்ன தவறு செய்ய இருந்தேன்! இனி, திருடுவதைப் பற்றி கனவில்கூட நினைக்கக்கூடாது!' என்று எண்ணியவாறு வீட்டை அடைந்தான்.

மறுநாள் அவன் மனைவி, "நேற்றிரவு, இரண்டு திருடர்களைக் காவலர்கள் துரத்திப் பிடித்து இழுத்துச் சென்றார்கள். தப்பித்து ஓட முயற்சித்த இருவரையும் காவலர்கள் கொன்றுவிட்டார்கள்!" என்றாள்.

சோமன் மனதிற்குள் கடவுளுக்கு நன்றி கூறிவிட்டு, "கடவுளே! இனி, நான் அந்த மோசமான தொழிலைப் பற்றி நினைத்துக்கூடப் பார்க்க மாட்டேன். கிடைத்தது போதும் என்று இப்போது செய்யும் வியாபாரத்தையே தொடர்ந்து செய்வேன்!" என்று பிரார்த்தனை செய்து கொண்டான்.

(முற்றும்)




## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- ➢1493 - திருத்தந்தை ஆறாம் அலெக்சாண்டர் புதிய உலகை ஸ்பெயினுக்கும் போர்த்துக்கல்லுக்கும் பிரித்துக் கொடுத்தார்.
- ➢1494 - கிறிஸ்தோபர் கொலம்பஸ் ஜமெய்க்காவில் காலபதித்தார்.
- ➢1626 - டச்சு பயணி பீட்டர் மின்யூயிட் மான்ஹட்டன் தீவை அடைந்தார்.
- ➢1799 - நான்காம் மைசூர்ப் போர்: திப்பு சுல்தான் பிரிததானியப் படையினரால் கொல்லப்பட்டு ஸ்ரீரங்கப்பட்டணம் கைப்பற்றப்பட்டது.
- ➢1814 - பிரான்ஸ் மன்னன் முதலாம் நெப்போலியன் நாடுகடத்தப்பட்ட நிலையில் எல்பா தீவை அடைந்தான்.
- ➢1855 - அமெரிக்க நாடுகாண் பயணி வில்லியம் வோக்கர் நிக்கராகுவாவைக் கைப்பற்றும் நோக்கில் 60 பேருடன் சான் பிரான்சிஸ்கோவை விட்டுப் புறப்பட்டார்.
- ➢1904 - பனாமா கால்வாய் கட்டுமானம் ஐக்கிய அமெரிக்காவினால் ஆரம்பிக்கப்பட்டது.
- ➢1912 - ரோட்ஸ் என்ற கிரேக்கத் தீவை இத்தாலி ஆக்கிரமித்தது.
- ➢1919 - மே நான்கு இயக்கம்: சீனாவின் பகுதிகள் ஜப்பானுக்கு வழங்கப்பட்டதை எதிர்த்து தலைநகர் பெய்ஜிங்கில் தியானன்மென் சதுக்கத்தில் மாணவர் போராட்டம் இடம்பெற்றது.
- ➢1924 - பாரிஸ் நகரில் ஒலிம்பிக் விளையாட்டுக்கள் ஆரம்பமாகின.
- ➢1930 - பிரித்தானியக் காவல்துறையினரால் மகாத்மா காந்தி கைது செய்யப்பட்டு யெராவ்தா மத்திய சிறையில் அடைக்கப்பட்டார்.
- ➢1942 - இரண்டாம் உலகப் போர்: ஜப்பானினால் முதல் நாள் ஆக்கிரமிக்கப்பட்ட துளகி தீவின் (சொல மன் தீவுகள்) மீது அமெரிக்கக் கடற்படையி னர் தாக்குதலைத் தொடுத்தனர்.
- ➢1945 - இரண்டாம் உலகப் போர்: ஜேர்மனியின் ஹாம்பூர்க் நகரில் இருந்த நியூவென்காம் வதை முகாமை பிரித்தானிய இராணுவத்தினர் விடுவித்தனர்.
- ➢1945 - இரண்டாம் உலகப் போர்: வடக்கு ஜேர்மனி பிரித்தானியாவிடம் சரணடைந்தது.
- ➢1949 - அகில மலாயா தொழிற்சங்க சம்மேளத்தின் தலைவராக இருந்த எஸ். ஏ. கணபதி மலாயாவின் ஆட்சியாளர்களான பிரித்தானியர்களால் கோலாலம்பூர், புடு சிறைச்சாலையில் தூக்கிலிடப்பட்டார்.
- ➢1949 - இத்தாலியில் இடம்பெற்ற விமான விபத்தில் டொரினோ உதைபந்தாட்ட அணியின் அனைத்து விளையாட்டு வீரர்களும் கொல்லப்பட்டனர்.
- ➢1973 - சியேர்ஸ் கோபுரம், சிகாகோவில் உள்ள வானளாவி, கட்டி முடிக்கப்பட்டது.
- ➢1979 - மார்கரெட் தாட்சர் ஐக்கிய இராச்சியத்தின் முதலாவது பெண் பிரதமரானார்.
- ➢1994 - இஸ்ரேல் பிரதமர் இட்சாக் ராபினுக்கும், பாலஸ்தீன ஜனாதிபதி யாசர் அரபாத்துக்கும் இடையில் எட்டப்பட்ட அமைதி உடன்பாட்டின் படி காசாக் கரையில் பாலஸ்தீனர்களுக்கு தன்னாட்சி உரிமை வழங்கப்பட்டது.
- ➢2000 - லண்டனின் முதலாவது நகரத் தந்தையாக கென் லிவிங்ஸ்டன் தெரிவு செய்யப்பட்டார்.

### பிறப்புக்கள்

- ➢1767 - தியாகராஜர், கர்நாடக இசை மும்மூர்த்திகளில் ஒருவர் (இ. 1847)
- ➢1945 - என். ராம், இந்தியப் பத்திரிகையாளர்

### இறப்புகள்

- ➢1799 - திப்பு சுல்தான், மைசூர் மன்னன் (பி. 1750)
- ➢1879 - சேர் முத்து குமாரசாமி, இலங்கையின் தமிழ் அரசியல் தலைவர் (பி. 1834)
- ➢1949 - எஸ். ஏ. கணபதி, மலாயா தொழிற்சங்க சம்மேளனத்தின் தலைவர் (பி. 1925)
- ➢1980 - டீட்டோ, யூகோஸ்லாவியாவின் ஜனாதிபதி (பி. 1892)

### சிறப்பு நாள்

- ➢அனைத்து நாடுகள் தீயணைக்கும் படையினர் தினம்

### அனைத்து நாடுகள் தீயணைக்கும் படையினர் தினம்



அனைத்து நாடுகள் தீயணைக்கும் படையினர் நாள் (International Firefighters' Day) மே 4ஆம் திகதியன்று ஆண்டுதோறும் நினைவு கூரப்பட்டு வருகிறது. வழக்கமாக இந்நாளன்று ஐரோப்பிய நாடுகளில் தீயணைக்கும் படையினர் நாள் கொண்டாடப்பட்டு வந்தது. எனினும் 1999 ஆண்டு ஜனவரி 4 அன்று அவுஸ்திரேலியாவில் இடம்பெற்ற பெரும் காட்டுத்தீயைக் கட்டுப்படுத்தும் போராட்டத்தில் உயிரிழந்த ஐந்து தீயணைக்கும் படையினரை நினைவுகூருவதற்கு ஆதரவாக உலகெங்கும் மின்னஞ்சல் மூலமாக இடம்பெற்ற பரப்புரையினை அடுத்து மே 4ஆம் உலகெங்கும் நினைவுகூர முடிவு செய்யப்பட்டது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த் வாழ்க்கை வரலாறு

### சமரசம்

இதைத்தொடர்ந்து, ரஜினிக்கு எதிராக விதிக்கப்பட்ட தடையை ரெட்கார்டு விநியோகஸ்தர்கள் கைவிட்டனர்.

ரஜினிக்கும் விநியோகஸ்தர்களுக்கும் நல்லுறவு ஏற்பட்டது.



இதுகுறித்து, ரஜினிகாந்த் வெளியிட்ட ஒரு அறிக்கையில் கூறியிருந்ததாவது:-

'என்னுடைய படங்களை விநியோகஸ்தர்கள் வாங்கக் கூடாது என்று விநியோகஸ்தர்கள் சங்கம் எடுத்த தீர்மானத்துக்கு எதிராக, என்னை ஆதரித்த எல்லா நடிகர் - நடிகைகளுக்கும், என்னுடைய இனிய நண்பர் கமலஹாசன், திரைப்பட தொழிலாளர்கள் சம்மேளனத் தலைவர் மோகன் காந்திராமன், மற்றும் அவர் தலைமையில் இயங்கி வரும் 24 சங்க நிர்வாகிகளுக்கும், உறுப்பினர்களுக்கும், நடிகர் சங்கம், தென்னிந்திய திரைப்பட நடிகர்கள் மற்றும் டப்பிங் ஆர்ட்டிஸ்ட் சங்க தலைவர் ராதாரவி, திரை அரங்கு உரிமையாளர்கள் சங்க தலைவர் டி.ராமானுஜம் ஆகியோருக்கும், திரையரங்கு உரிமையாளர்களுக்கும், ஏனைய தலைவர்களுக்கும் நன்றி.

சரியான காலத்தில் சுமூகமான முடிவை எடுத்த திரைப்பட விநியோகஸ்தர்கள் சங்கத் தலைவர் - என்னுடைய நண்பர் சிந்தாமணி முருகேசனுக்கும் என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

### ஒற்றுமை

தவறு செய்வது மனித இயல்பு. செய்த தவறை உணரும் பக்குவம் வரும்பொழுது தான் உண்மையான மனிதர்கள் ஆகிறோம்.

இனிவரும் காலங்களில் நமக்குள் மனக் கசப்பு, அபிப்பிராய பேதங்கள் இல்லாமல் எல்லோரும் சிறப்புடன் வாழ, நாம் ஒற்றுமையுடன் பாடுபடுவோம்.' இவ்வாறு அந்த அறிகையில் ரஜினி குறிப்பிட்டிருந்தார்.

### சிந்தாமணி முருகேசன்

இந்த முக்கிய நிகழ்ச்சி குறித்து, சிந்தாமணி முருகேசன் கூறியதாவது:-

'ரஜினியை தங்களது வழிகாட்டும் தெய்வமாக ரசிகர்கள் எண்ணுகிறார்கள். அவர் பெயரைச் சொன்னால் ஆர்ப்பரிக்கிறார்கள்.

இப்படிப்பட்ட உயர்ந்த இமேஜ் கொண்ட ரஜினியிடமும், அவரது ரசிகர்களிடமும் என்னை கெட்டவன்போல் தோன்றச் செய்யும ஒரு சூழ்நிலையை, சிலர் ஏற்படுத்தினார்கள். அந்த சூழலுக்கு ஆட்பட்டு நான் பலி கடா ஆக்கப்பட்டேன். உண்மையில், ரஜினி படங்களை வாங்கக் கூடாது என்ற முடிவில் எனக்கு உடன்பாடு இல்லை. அதை அப்போதும் கூறினேன். அதையும் மீறி சங்கம் எடுத்த முடிவுதான் அது.

சங்கத் தலைவர் என்ற முறையில், மெஜாரிட்டி தீர்மானத்துக்கு நான் கட்டுப்பட நேர்ந்தது.

### அமைதி காத்தார்


ரஜினி நினைத்திருந்தால் எனக்கு எதிராக அறிக்கை வெளியிட்டு, ரசிகர்களைத் தூண்டி விட்டிருக்க முடியும். ஆனால் அவர் அப்படிச் செய்யவில்லை.

அறிக்கையில், என்னை தனது 'நண்பர்' என்றே குறிப்பிட்டார். எனக்கு எதிராகக் கோபப்பட்ட ரசிகர்களையும் சமாதானப்படுத்தினார். அகில இந்திய ரஜினிகாந்த் ரசிகர்கள் மன்ற தலைவர் சத்தியநாராயணனும் ரசிகர்களை அமைதி ப்படுத்தியதை இந்த நேரத்தில் நான் குறிப்பிட்டே ஆகவேண்டும்.

### வாழ்த்து சொன்னார்

இதன்பின், விநியோகஸ்தர்கள் சங்க தலைவராக 13-வது முறையாக நான் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தபோது, எனக்கு ஒரு டெலிபோன் வந்தது. (தொடரும்)

# கருவாச்சி காவியம்



## வைரமுத்து-131

....வாத்தியாரப் பாத்தவுடன் பயந்துபோனான் பய.

கண்ணாடி போட்ட சிங்கம் கையில பெரம்பு வச்சு நிக்கிற மாதிரியே இருக்கு அவரப் பாக்கையில அவனுக்கு.

பாவப்பட்ட மொசக் குட்டிகளாத் தெரியிறாங்க பள்ளிக்கூடப் பயக.

ஒம் பேர் சொல்லப்பா

தன் பேரு தனக்கு மறந்து போனவன் மாதிரி ரொம்ப நேரம் யோசிச்சு அழக சிங்கத்தத் துப்பினான்.

வயசு என்னம்மா பிள்ளைக்கு?

அஞ்சு முடிஞ்சிருச்சு; பங்குனியோட ஆறு ஆரம்பம்.

பயல உத்து உத்துப் பாத்தாரு வாத்தியாரு.

சின்னக் கண்ணு; மொக்க மூக்கு; பட்ட நெத்தி; பணியாரக் கன்னம்; அழுத்தமான உதடு; ஆத்தா நெறம் கல்லு ஒடம்பு; கனத்த நெஞ்சுக் கூடு.

சும்மா சொல்லக் கூடாது பஞ்சமில்லாமக் கஞ்சி ஊத்தி வஞ்சகமில்லாமத்தான் வளத்திருக்கா கருவாச்சி.

அழகு சிங்கம்... சோத்தாங்கையத் தூக்கித் தலையச் சுத்தி மறுகாதத் தொடு.

செய்யமாட்டேன்னு மொதல்ல கூனிக் குறுகிக் குன்னிப்போன பய அப்பறம் என்ன நெனச்சானோ ஏது நெனச்சானோ எக்கி எக்கித் தொட்டேபுட்டான்.

நீ சொன்னது சரிதான்.

அஞ்சு வயசு ஆகாத கையி தலையச் சுத்திக் காது தொடாது தாயி.

நீ போயிட்டு வா.

போப்பா.... போயி உக்காரு.

உடம்புக்கு வெளிய புடைச்சு நிக்கிற புதுச் சட்டமாதிரியே பொருத்தமாப் போயி உக்காந்தான் பாவம்.

அடிச்சு வளக்க அ[illegible] அணைச்சு வளக்க ஆத்தாளும் இல்லாத பிள்ளைக பெரும்



பாலும் புத்தியழிஞ்சு பொழ [illegible]

அப்பன் இல்லாம ஆத்தாளோ ஆத்தா இல்லாம அப்பனோ பிள்ள வளக்கிறது ஒத்தக் கையில தயிர் கடைஞ்ச கததான். வெண்ணையும் தெரளாது; வெளங்கவும் விளங்காது.

தகப்பன் இல்லாத பிள்ளைன்னு தாங்கித் தாங்கி வளத்ததுல அழகுசிங்கம் அடிமாறிப்போறதக் கண்டு புடிக்கமாட்டாமப்போனா கருவாச்சி.

மொளைச்ச முள்ள மொளை யிலயே கிள்ளாம, அவன் குத்தங்களக் கூட அவ கொண்டாட ஆரம்பிச்சது தப்பாப்போச்சு.

பசுமாட்டுல பால் பீச்சிகிட்டேயிருப்பா கருவாச்சி. பாத்துக்கிட்டேயிருப்பான் அழகுசிங்கம்.

சீலயத் தொரட்டி ஏத்திக்கிட்டு ரெண்டுகால் இடுக்குல பித்தளச்செம்ப வச்சு, சொர சொரன்னு இருக்கிற காம்புல வெண்ணெயத் தடவி நீவிவிட்டு அவ சர்ரு சர்ருன்னு பீச்சுற சத்தமிருக்கே, சரஸ்வதி வீணை வாசிச்சா அத நிறுத்திட்டு இங்க வந்து இதக் கேக்கணும். (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரம்பரிய நெல் உற்பத்தியை ஊக்குவிப்பதற்கு நடவடிக்கை

(கொழும்பு)

25 இலட்சம் கிலோ பாரம்பரிய நெல்லை கொள்வனவு செய்து கிலோ 90 ரூபா வீதம் விற்பனை செய்ய கமத்தொழில் அமைச்சு தீர்மானித்துள்ளது.

பாரம்பரிய நெல் உற்பத்தியை ஊக்குவிப்பதுடன் நாட்டில் வேகமாக பரவும் தொற்றாத நோய்களை கட்டுப்படுத்தும் நோக்கில் இத்தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. ஒரு கிலோ பாரம்பரிய நெல்லை 80 ரூபா வீதம் கொள்வனவு செய்யப்படவுள்ளது.

பாரம்பரிய பயிர்ச் செய்கை முறைகளிலிருந்து விலகி இரசாயனப் பதார்த்தங்களின் உள்ளீடுகளில் தங்கியிருக்கின்ற இன்றைய விவசாயிகளுக்கு பாரம்பரிய உணவுப் பயிர்ச் செய்கையிலிருந்து விலகியமை மற்றும் உணவுப் பழக்கவழக்கங்களை மாற்றியமைத்தமை என்பன தொற்றாத நோய்கள் ஏற்படுவதற்கான காரணங்கள் என உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு ஆராய்ச்சிகளிலிருந்து நிரூபிக்கப்பட்டுள்ளது.

அமைச்சின் கீழ் இயங்குகின்ற ஹதஹித்த அதிகார சபை, உணவு ஊக்குவிப்பு சபை, மாவட்ட விவசாயத் திணைக்களங்கள் ஆகியவற்றின் பணிப்பாளர்களின் ஊடாகக் கொள்வனவு செய்து விற்பனை செய்யப்படவுள்ளது 25 கிலோ கிராம் என்ற வீதத்தில் நெல்லை விதை நெல்லுக்காக சிறுநீரக நோய் பரந்துள்ள பகுதிகளுக்கு முன்னுரிமை அளித்து விவசாயிகளுக்கு மத்தியில் விநியோகிப்பதற்கும், எஞ்சிய நெல்லை அரிசியாக உற்பத்தி செய்து விற்பனை செய்யப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ)


## நிரந்தர தொழில்வாய்ப்பு

எதிர்காலத்தில் நிரந்தர தொழில் ஒன்றினை பெற உடனடியாக எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள். சம்பளம் 18000/=,50000/= (தொழில் அடிப்படையில்) கொழும்பை அண்மித்த பிரதேசங்களில். பிரதான தொழிற்சாலைகள் (ஜேம்/சொக்லெட்/யோகெட்/ பிளாஸ்டிக்/ காமென்ட்....) தனியார் துறைமுகம், விமான நிலையம், வாகன சாரதிகள், இலக்ரீசன், வெல்டர், தச்சு,பெயின்டர், மேசன் ( கம்பிபாஸ்,செடலிங்) போன்ற பல வெற்றிடங்கள். 18-55 வயது ஆண், பெண் தேவை. உணவு, தங்குமிடம் ஒழுங்கு செய்து தரப்படும். நண்பர்களாகவும் விரும்பத்தக்கது.

தொடர்புக்கு: 077 111 6770

## வாழ்க்கையில் வெறுப்பா?

பிரச்சினை எதுவானாலும்,
எம்முடன் தொலைபேசியில்
அல்லது நேரில் பேசுங்கள்.
இரகசியங்களைப் பேணுவோம்.
காலை 9.00 – பி.ப4.00
மதச்சார்பற்றது
(C-478)

**கைகொடுக்கும் நண்பர்கள்**

104, 4ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்.
021 222 8117, 0779008776

## தேவை

துறைமுகம்/ விமான நிலையங்களில் உல்லாச பிரயாணத் துறையில் போக்குவரத்து சேவைக்காக கனரக/ மென்ரக சாரதிகள்/சாரதி உதவியாளர்கள் தேவை

45000/=

(231)

**0759219227**


# மயூரன் பெயரால் புலமைப்பரிசில் டோனி அபோட் போர்க்கொடி

மயூரன் சுகுமாரன், அன்ட்ரூ சான் ஆகியோரை கௌரவிக்கும் வகையில் பல்கலைக்கழகமொன்று புலமைப் பரிசிலை அறிவித்தல் என்பது விந்தையான விடயமென அவுஸ்.பிரதமர் டோனி அபோட் அறிவித்துள்ளார்.மயூரன், சான் இவர்கள் இருவருக்கும பொது மன்னிப்பு வழங்கப்பட வேண்டும் என்று போராடிய அவுஸ்திரேலிய கத்தோலிக்கப் பல்கலைக்கழகம், இருவரின் ஞாபகார்த்தமாக புலமைப் பரிசில் திட்டத்தை அறிவித்து இவர்களை கௌரவிக்கப் போவதாக தெரிவித்துள்ளது.

வாழ்க்கையின் கலாசாரத்தை மேம்படுத்துவதில் திடசங்கற்பம் கொண்டுள்ளதால், நாம் கத்தோலிக்க பல்கலைக்கழகம் என்ற ரீதியில் மரணதண்டனையை ஆட்சேபிக்கிறோம் என்று பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பேராசிரியர் கிரெக் கிரேவன் தெரிவித்தார்.

அவுஸ்திரேலியாவில் கல்வி கற்க விரும்பும் அவுஸ்திரேலிய பிரஜைகள் புலமைப் பரிசில் கோரி விண்ணப்பிக்க முடியும். இவர்கள் விண்ணப்பத்துடன் மனித உயிரின் மதிப்பு பற்றிய கட்டுரையொன்றை இணைக்க வேண்டுமென கோரப்பட்டுள்ளது.

இது பற்றி கருத்து வெளியிட்ட அவுஸ். பிரதமர் டோனி அபோட், அவுஸ்திரேலிய பிரஜைகள் கொல்லப்பட்டதை ஏற்றுக் கொள்ள முடியாது என்ற போதிலும், போதைப்பொருள் கடத்தலை அங்கீகரிப்பதும் நியாயமில்லை என்றார். கத்தோலிக்க பல்கலைக்கழகம் வழமைக்கு மாறான செய்தியை விடுத்துள்ளதென அவர் தெரிவித்தார். (இ)

## மரண அறிவித்தல்

### அமரர் சின்னையா கந்தையா



பளை வேம்பொடு கேணியை நிரந்தர வசிப்பிடமாகவும் யாழ்ப்பாணம் கல்வியங்காட்டை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட சின்னையா கந்தையா கடந்த 29.04.2015 அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 04.05.2015 திங்கட்கிழமை யாழ்ப்பாணம் கல்வியங்காட்டிலுள்ள செங்குந்தா இந்துக் கல்லூரிக்கு அருகாமையில் உள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று 2 மணிக்கு அவரது பூதவுடல் தகனக் கிரியைக்காக செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

செங்குந்தா வீதி,
கல்வியங்காடு,
யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்.

## 7 ஆவது ஆண்டு நினைவஞ்சலி



### அமரர் திருமதி ஸ்ரீநகுலமீரா சிதம்பரநாதன்

பிறப்பு 16.05.1947 இறப்பு 21.04.2008

திதி:- அபரபக்க பிரதமை

நீள நினைப்பதற்குரிய தாயே
நெஞ்சம்- மறக்குமா உங்களை
வாழ வழிகாட்டிய எங்களின் தாயே
மனையெல்லாம் வாட்டுதம்மா
ஏழாண்டுகள் ஓடிச் சென்றாலும்
எப்படி அம்மா உங்களை
மறக்க முடியும்

உரும்பிராய் தெற்கு
உரும்பிராய்.

இங்ஙனம்
கணவர், பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிதியமைச்சரில் நம்பிக்கையில்லை ஆறு அமைச்சர்கள் கையொப்பம்!

(கொழும்பு)

**நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்கவிற்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மான யோசனையில் ஆறு அமைச்சர்களும் கையொப்பமிட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.**



இந்த நம்பிக்கையில்லா தீர்மான யோசனையில் கையொப்பமிட்டுள்ளதனால் அதனை சபாநாயகர் சமல் ராஜபக்ஷவிடம் ஒப்படைப்பதில் சிக்கல் நிலைமை ஏற்பட்டுள்ளது. அரசாங்கத்தில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மற்றும் ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினர்கள் அங்கம் வகிக்கின்றார்கள்.

நிதி அமைச்சருக்கு எதிரான நம்பிக்கையில்லா தீர்மான யோசனையில், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அமைச்சர்களே கையொப்பமிட்டுள்ளனர்.

அரசாங்க அமைச்சர் ஒருவருக்கு எதிரான நம்பிக்கையில்லா தீர்மான யோசனையில் அரசாங்க அமைச்சர்கள் கையொப்பமிடுவது சம்பிரதாயத்திறகு முரணானது என சட்ட வல்லுநர்கள் ஆலோசனை வழங்கியுள்ளனர்.

இந்த விடயம் குறித்து ஆராய்ந்ததன் பின்னரே நம்பிக்கையில்லா தீர்மானம் குறித்த யோசனை சபாநாயகரிடம் சமர்ப்பிக்கப்பட உள்ளது.

இதேவேளை, தமக்கு எதிரான நம்பிக்கையில்லா தீர்மான யோசனையை துரிதகதியில் முன்வைக்குமாறு நிதி அமைச்சர் கோரியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-5)

## சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | கிளிநொச்சி | திருநெல்வேலி | மருதனார்மடம் |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 100 | 120 | 90 |
| உருளைக்கிழங்கு | 100 | 90 | 100 |
| பச்சைமிளகாய் | 80 | 40 | 40 |
| தக்காளி | 140 | 100 | 70 |
| மரவள்ளிக்கிழங்கு | 80 | 60 | 50 |
| கோவா | 60 | 40 | 40 |
| கரட் | 160 | 150 | 100 |
| பூசணி | 40 | 40 | 40 |
| புடோல் | 60 | 60 | 80 |
| வாழைக்காய் | 60 | 60 | 50 |
| சின்ன வெங்காயம் | 120 | 80 | 70 |
| பெரிய வெங்காயம் | 120 | 100 | 90 |
| பாகற்காய் | 120 | 140 | 100 |
| வெண்டிக்காய் | 60 | 140 | 100 |
| கருணைக் கிழங்கு | 80 | 80 | 70 |
| பயற்றங்காய் | 100 | 180 | 120 |
| லீக்ஸ் | 200 | 160 | 160 |
| பீற்றூட் | 80 | 50 | 50 |
| கறிமிளகாய் | 120 | 100 | 80 |
| முருங்கைக்காய் | 500 | 600 | 400 |
| போஞ்சி | 200 | 160 | 120 |
| கத்தரிதம்புள்ள | 80 | 100 | 80 |
| கீரை – 1 பிடி | 50 | 30 | 20 |
| தேசிக்காய் | 160 | 150 | 180 |
| தேங்காய் (ஒன்று) | 50-60 | 60 | 70 |
| இராசவள்ளி | 120 | 130 | 120 |
| வெங்காயப்பூ | — | — | — |
| முள்ளங்கி | 80 | 50 | 50 |
| பொன்னாங்காணி | 30 | 30 | 20 |
| வல்லாரை | 20 | 10 | 20 |

# பொதுத் தேர்தலை நடத்த 300 கோடி ரூபா தேவை

## தேர்தல்கள் திணைக்களம்

பொதுத் தேர்தலை நடத்த 300 கோடி ரூபா பணம் தேவைப்படுவதாக தேர்தல்கள் திணைக்கள அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

தேர்தலை நடத்துவதற்கு தேவையான நிதி ஒதுக்கீடுகளை வழங்குமாறு தேர்தல் திணைக்களம் திறைசேரியிடம் கோரியுள்ளது. அரசாங்கம் அவசரமாக தேர்தலை நடத்தினால்சுமார் 300 கோடி ரூபா பணம் தேர்தல் செலவுகளுக்கு தேவைப்படும் என தெரிவிக்கப்பட்டுளளது. நாடாளுமன்றம்கலைக்கப்படும்எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பொதுத் தேர்தலை நடத்தத் தயார்.

இதேவேளை, கடந்த ஜனாதிபதி தேர்தலின் போது செய்யப்பட்ட மொத்த செலவு விபரங்கள் எதிர்வரும் 15 ஆம் திகதி அளவில் அறிவிக்கப்படும் என தேர்தல்கள் திணைக்கள அதிகாரி தெரிவித்துள்ளார். (இ-5)

## விளையாட்டுப் போட்டி

(கரணவாய்)

புலோலி தென் மேற்கு கந்தமுருகேசனார் மாதிரி முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டுப் போட்டி எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1.30 மணியளவில் முன்பள்ளி மைதானத்தில் கந்த முருகேசனார் சனசமூகத் தலைவர் பா. இரகுநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது. (இ-3-60)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 360

Search for people, places and things Nagendram Home

இலக்கியா நகுலன்



அழுகின்ற விநாடியும்
சிரிக்கின்ற நிமிடங்களும்
நம் வாழ்க்கை என்ற
காலகடிகாரத்தில்
நிரந்தரமாக
அமைவதில்லை.

ருக்சி சிவகுமார்




தனு தனுசியா

நபர் 1 : என்ன சார் தலையில கட்டு
நபர் 2 : மனைவி பாத்றூமில வழுக்கி விழுந்திட்டா
நபர் 1 : அதுக்கு நீங்க ஏன் கட்டு போட்டு இருக்கீங்க?
நபர் 2 : அவ விழுந்ததை பாத்ததும் நான் கொஞ்சம் வாய் விட்டு சிரிச்சிட்டன்!

பிரவின் தாஸ்




ராஜா தனு




தர்சன் கவிதா



மனது இருந்தால்
வருவேன் என்றது
காதல்



பணம் இருந்தால்
வருவேன் என்றது
சொந்தம்



எதுவும் வேண்டாம்
நான் இருக்கேன்
என்றது நட்பு.

நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valam.puri.16 எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# கைவிடப்படும் தமிழக மீனவர்கள்

"தமிழக மீனவர்கள் தங்கம், போதைப் பொருள்கள் ஆகியவற்றைக் கடத்துகின்றனர். எல்லைத் தாண்டிச் சென்று பெரிய வலைகளைப் பயன்படுத்தி மீன் பிடிக்கிறார்கள். இலங்கை மீனவர்களின் மீன்பிடி சாதனங்களைச் சேதப்படுத்துகின்றனர். இந்திய மீனவர்கள் சட்ட விரோதச் செயல்களில் ஈடுபடுவதால் அவர்களை இலங்கைக் கடற்படை கைது செய்கிறது. இந்திய எல்லைக்குள் தமிழக மீனவர்களை இலங்கைக் கடற்படையினர் தாக்குகின்றனர் என்பது தவறானது. எனவே, தமிழக மீனவர்களைக் காப்பாற்றும் பொறுப்பை இந்தியக் கடலோரக் காவல் படை ஏற்க முடியாது." மேற்கண்டவாறு மத்தியக் கடலோரக் காவல் படைத் துணை இயக்குநர் - ஜெனரல் கே.ஆர். நாட்டியால் கூறியுள்ளார்.

தமிழக மீனவர்களுக்குப் பாதுகாப்பு வழங்கத் தவறிய மத்திய அரசு அதிகாரிகள் மீது நீதிமன்ற அவமதிப்பு நடவடிக்கை கோரி வழக்குரைஞர் எஸ்.எம். ஆனந்த முருகன் உயர்நீதிமன்ற மதுரைக் கிளையில் தாக்கல் செய்த மனுவுக்குப் பதில் அளிக்கும் முறையிலேயே மேற்கண்டவாறு அவர் கூறியுள்ளார்.

1983 ஆம் ஆண்டிலிருந்து இதுவரை 600இற்கும் மேற்பட்ட தமிழக மீனவர்கள் சிங்களக் கடற்படையால் சுட்டுக் கொல்லப்பட்டிருக்கிறார்கள். ஆயிரக்கணக்கானவர்கள் அங்கவீனமாக்கப்பட்டிருக்கிறார்கள். பல ஆயிரம் கோடி ரூபாய் பெறுமான அவர்களது படகுகளும், வலைகளும் சேதப்படுத்தப்பட்டுள்ளன. ஆயிரக்கணக்கானவர்கள் கைது செய்யப்பட்டு இலங்கை சிறைகளில் சித்திரவதைகளுக்கு ஆளாகி அடைக்கப்பட்டுள்ளனர்.

தமிழக மீனவர்கள் சந்தித்து வரும் முடிவில்லாதத் துயரங்களுக்கு முற்றுப்புள்ளி வைக்கவோ, அவர்களைக் காப்பாற்றவோ முன்வராத இந்திய அரசின் கடலோரக் காவல் படை, அவர்கள் மீது அவதூறு சேற்றை வாரி வீசுகிறது.

சிங்களக் கடற்படையோ அல்லது சிங்கள அரசோ கூட தமிழக மீனவர்கள் மீது கூறாத குற்றச்சாட்டுகளை கடலோரக் காவல படையின் அதிகாரி கூறியுள்ளார்.

தமிழகக் கடற்கரை நெடுகிலும் காவல் நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. கரையோரமாக கடலோரக் காவல் படையின் தீவிரமான கண்காணிப்பு உள்ளது. அதைத் தாண்டி இந்தியக் கடற்படையின் கண்காணிப்பு உள்ளது. இந்த மூவகை கண்காணிப்புகளை மீறி தமிழக மீனவர்கள் தங்கம் மற்றும் போதைப் பொருள்களைக் கடத்துகிறார்கள் என்று சொன்னால் அதற்கான பொறுப்பை மேலே கண்ட மூவகை அமைப்புகளின் அதிகாரிகள் ஏற்க வேண்டும்.

இவர்களை மீறி கடத்தல் நடக்கிறது என்று சொன்னால் கண்காணிப்பு வேலையை இவர்கள் சரிவரச் செய்யவில்லை என்பது தான் உண்மையாகும். அதற்காக இவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப் பட வேண்டும்.

சிங்களக் கடற்படையால் கொலை செய்யப்பட்ட 600இற்கும் மேற்பட்ட தமிழக மீனவர்கள் அனைவருமே கடத்தல்காரர்களா? உடல் உறுப்புகளை இழந்து தவிக்கும் ஆயிரக்கணக்கான மீனவர்கள் கடத்தல்காரர்களா? தமிழக மீனவர்களில் பெரும்பாலானோர் கடத்தல் தொழிலில் ஈடுபட்டவர்களா என்பது போன்ற கேள்விகள் எழுகின்றன. தன்மானம் உள்ள எந்தத் தமிழனும் இவற்றை ஒருபோதும் ஏற்கமாட்டான். இது தமிழினத்துக்கு விடுக்கப்பட்ட அறைகூவலாகும்.

சிங்களக் கடற்படை எல்லை தாண்டி ஒருபோதும் வரவில்லை என கூசாமல் ஒரு பெரும் பொய்யை இந்த அதிகாரி கூறியுள்ளார். கடந்த காலத்தில் இந்திய கடல் எல்லையைத் தாண்டி மட்டுமல்ல. நமது நாட்டுக்குள்ளேயே புகுந்து சிங்களக் கடற்படை இருவரை சுட்டுக் கொன்ற நிகழ்ச்சியை யாரும் மறந்துவிட முடியாது.

06-10-1998 அன்று தனுக்கோடியில் உள்ள ஓலைக்குடா என்ற மீனவர் கிராமத்தில் சிங்களக் கடற்படையினர் வந்து இறங்கி கண்மூடித்தனமாகச் சுட்டதில் இருவர் கொல்லப்பட்டனர். அங்குள்ள பனைமரத்தில் குண்டுகள் பாய்ந்த வடுக்கள் இன்னமும் உள்ளன. அதுமட்டுமல்ல, மீனவர்களின் குடிசைகளையும், படகுகளையும் கொளுத்திவிட்டு அவர்கள் திரும்பிச் சென்ற நிகழ்ச்சியை அப்போது வெளிவந்த அத்தனை பத்திரிகைகளும் பரபரப்பாக வெளியிட்டுள்ளன.

இலங்கையின் நட்புறவை நிலைநிறுத்திக் கொள்வதற்காக கச்சத்தீவைப் பரிசாக இந்திய அரசு கொடுத்தது. 1974 ஆம் ஆண்டு செய்துகொள்ளப்பட்ட இலங்கை - இந்திய உடன்பாட்டுக்கு இணங்க கச்சத்தீவை இலங்கைக்குக் கொடுத்துவிட்டு அதற்குப் பதிலாக அந்தத் தீவைத் தாண்டிய கடற்பகுதியை இந்தியக் கடற்பகுதியாக அன்றையப் பிரதமர் பெற்றார் என்பதுதான் உண்மை.

இந்த உடன்பாட்டின்படி கச்சத்தீவுக்குச் செல்லவும் அங்குள்ள அந்தோணியார் கோயிலில் வழிபாடு செய்யவும் தமிழக மீனவர்களுக்கு எப்போதும் உரிமை உண்டு என இந்த உடன்பாடு கூறுகிறது. பாக் நீர்ச்சந்தியில் கச்சத்தீவுப் பகுதியில் உள்ள ஆழ்கடலில் தொன்றுதொட்டு இந்திய மீனவர்களுக்கு உள்ள மீன்பிடிக்கும் உரிமை தொடரும் என்றும் இந்த உடன்பாட்டில் சொல்லப்பட்டுள்ளது.

இந்திய - இலங்கையின் 1974 ஆம் ஆண்டு உடன்பாடு, 1976 ஆம் ஆண்டு வெளியுறவுத் துறைச் செயலாளர்கள் செய்துகொண்ட உடன்பாடு, அதையொட்டி இந்தியாவின் வெளியுறவுச் செயலாளர் இலங்கையின் வெளியுறவுச் செயலாளருக்கு எழுதிய கடிதம் ஆகிய அனைத்தும் பாக் நீர்ச்சந்தியில் கச்சத்தீவுப் பகுதியில் உள்ள ஆழ்கடலில் மீன்பிடிக்கும் உரிமை தமிழக மீனவர்களுக்கு உண்டு என்பதையும், இரு நாடுகளின் மேலாண்மையில் கச்சத்தீவு வைக்கப்பட்டுள்ளது என்பதையும் உணர்த்துகின்றன.

எனவே, தமிழக மீனவர்களுக்குப் பாதுகாப்புக் கொடுக்கும் கடமையும், இலங்கைக் கடற்படையைக் கட்டுப்பாட்டில் வைக்கும் கடமையும் இந்தியக் கடற்படைக்கு உண்டு. அதை அவர்கள் மறுப்பது கடமை தவறிய செயலாகும்.

தமிழக மீனவர்கள் சிங்களக் கடற்படையால் தொடர்ந்து சுட்டுக் கொல்லப்படுவதை இந்தப் பின்னணியில் நாம் பார்க்க வேண்டும். சின்னஞ்சிறிய சிங்களக் கடற்படை மிகப் பெரிய இந்திய நாட்டின் குடிமக்களைத் தொடர்ந்து 32 ஆண்டு காலமாக படுகொலை செய்கிறது. இதைத் தட்டிக் கேட்கவோ, தடுத்து நிறுத்தவோ இந்திய அரசு முன்வரவில்லை. இலங்கையைத் திருப்தி செய்வதற்காக, தமிழக மீனவர்கள் பலிகடாக்கள் ஆக்கப்பட்டுள்ளனர் என்பது அப்பட்டமான உண்மையாகும்.

கடலோரக் காவல் படையின் அதிகாரி உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனுவில், தமிழக மீனவர்கள் மீது அடுக்கடுக்காகச் சாடிய ஆதாரமற்ற குற்றச்சாட்டுகள் சிங்களக் கடற்படைக்கு மேலும் ஊக்கமூட்டும். தமிழக மீனவர்களை வேட்டையாடத் தூண்டும்.

தமிழ்நாட்டில் 13 கடலோர மாவட்டங்கள் உள்ளன. இந்த மாவட்டங்களில் 590 மீனவக் கிராமங்கள் உள்ளன. சுமார் 1000 கி.மீ. நீளமுள்ள இந்த நெடிய கடற்கரையில் 5 இலட்சத்துக்கும் மேற்பட்ட மீனவர்கள் வாழ்ந்து வருகிறார்கள். இவர்களின் வாழ்வாதாரமாக கடல் மட்டுமே திகழ்கிறது. இந்தியாவின் மீன் உற்பத்தியில் தமிழ்நாட்டின் பங்கு 21 சதவீதம் ஆகும். ஆனால், 32 ஆண்டு காலமாக இவர்கள் கடலில் தங்கள் தொழிலை செய்ய முடியவில்லை.

இவர்களை வேட்டையாடும் சிங்களக் கடற்படையினரின் அத்துமீறல்களைத் தடுக்கவோ மீனவர்களைக் காப்பாற்றவோ இந்தியக் கடற்படையின் கடலோரக் காவல் படை எதுவும் செய்யவில்லை. ஒரு தடவைகூட சிங்களக் கடற்படையினரைச் சுட்டு விரட்டும் முயற்சியில் ஈடுபட்டதில்லை.

இந்தியாவிலிருந்து பல ஆயிரம் மைல்களுக்கு அப்பால் ஆப்பிரிக்காவைச் சேர்ந்த சோமாலியா நாட்டின் கடற்பகுதியில் கடற்கொள்ளைக்காரர்களின் அட்டூழியத்தை அடக்கி ஒடுக்குவதற்காக இந்தியக் கடற்படை சென்று அவர்களை ஒடுக்கியுள்ளது. இது குறித்து இந்தியக் கடற்படைத் தளபதிகளில் ஒருவர் பின்வருமாறு பெருமையடித்துக் கொண்டார்.

நமது கடற்படை புதிய வடிவமெடுத்து ஆழ்கடல் கடற்படையாக மாறிவிட்டது என்றார்.

தொலைதூரத்திலுள்ள சோமாலியாவில் கடற்கொள்ளையர்களை வேட்டையாடி ஒழித்துக்கட்டிய இந்தியக் கடற் படையால் சிங்கள கொலைகாரக் கடற்படையை தடுத்து நிறுத்த முடியவில்லை.

தமிழக மீனவர்கள்மீது சிங்களக் கடற்படை தொடர்ந்து நடத்தி வரும் தாக்குதலை நியாயப்படுத்தும் வகையிலும் தமிழக மீனவர்கள் மீது பொய்யான குற்றச்சாட்டுகளைக் கூறியும் கடலோரக் காவல் படையின் சார்பில் உயர்நீதிமன்றத்தில் அளிக்கப்பட்ட மனு இந்திய அரசின் நிலைப்பாட்டை எடுத்துக்காட்டுவதாகும்.

கடலோரக் காவல் படையின் உயர் அதிகாரி உயர்நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்வதற்கு முன்பாக இந்திய அரசின் உயர் பதவியில் உள்ளவர்களை கலந்தாலோசித்த பிறகே மேற்கண்ட மனுவை தாக்கல் செய்திருக்க வேண்டும்.

மத்திய இணையமைச்சர் பொன். ராதாகிருஷ்ணன், தமிழக பா.ஜ.க. தலைவர் தமிழிசை சௌந்தரராஜன், மூத்த தலைவர் இல.கணேசன், தேசியச் செயலர் ஹெச்.ராஜா ஆகியோருடன் தமிழக மீனவ அமைப்புகளின் பிரதிநிதிகள் மத்திய வெளியுறவு அமைச்சர் சுஷ்மா சுவராஜை ஏப்ரல் 29-ஆம் திகதி சந்தித்துப் பேசியபோது, தமிழக மீனவர்கள் கடல் எல்லை தாண்டி மீன் பிடிக்கப் போகக் கூடாது என அவர் கூறினார்.

இவரது கூற்றிலிருந்து, உயர் நீதிமன்றத்தில் கடலோரக் காவல் படையினரின் சார்பில் தாக்கல் செய்யப்பட்ட மனு இந்திய அரசின் ஒப்புதலுடனேயே செய்யப்பட்டிருக்கிறது என்பது தெளிவாகத் தெரிகிறது.

அதே நாளில், சென்னைக்கு வருகை தந்த இலங்கை அமைச்சர் சாமிநாதன், 'தமிழக மீனவர்கள் எல்லை தாண்டி எங்கள் பகுதிக்குள் வந்தால் எங்கள் இராணுவம் பார்த்துக் கொண்டு சும்மா இருக்காது. எங்கள் நாட்டைக் காப்பாற்ற அவர்கள் சுடுவார்கள்' என்று கூறியுள்ளார். இந்திய அரசின் நிலைப்பாட்டின் விளைவாகத்தான் சென்னையிலேயே இலங்கை அமைச்சரால் இவ்வாறு கூற முடிந்துள்ளது.

இலங்கையைத் திருப்தி செய்வதே இந்திய அரசின் கொள்கை. அதற்காக ஈழத் தமிழர்களையும், தமிழக மீனவர்களையும் பலி கொடுக்கவும் இந்திய அரசு தயங்கப் போவதில்லை என்பது திரும்பத் திரும்ப உறுதி செய்யப்பட்டுள்ளது. தமிழக மீனவர்களை இந்தியக் குடிமக்களாக இந்திய அரசு கருதவில்லை என்பது தெளிவாகியிருக்கிறது.

-பழ.நெடுமாறன்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனாதிபதியின் கூட்டத்தில் ஆயுதத்துடன் நடமாடிய ராணுவ கோப்ரலுக்கு மறியல்

(கொழும்பு)

**மாத்தறை அங்குனுகொலபெலஸ்ஸ நகர மண்டபத்தில் ஜனாதிபதி மைத்திரிபால பங்கேற்ற கூட்டத்தில் ஆயுதத்துடன் நடமாடிய குற்றத்தில் கைது செய்யப்பட்டுள்ள இராணுவ கோப்ரலை, எதிர்வரும் 12ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப் பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.**

இந்த உத்தரவை அங்குனு கொலபெலஸ்ஸ மாவட்ட நீதவான் நீதிமன்ற நீதவான் விடுத்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த இராணுவ வீரர் தொடர்பில் குற்றப் புலனாய்வு துறையினர் மேற்கொண்ட விசாரணைகளை அடுத்து அவர் நேற்று முன்தினம் சனிக்கிழமை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

அதனையடுத்து, அங்குனு கொல பெலஸ்ஸ மாவட்ட நீதவான் நீதிமன்ற நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்தியபோது அவரை விளக்க மறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

இராணுவ கொமாண்டோ படைய பிரிவில் பணிபுரிந்த சேனக குமார எனும் இராணுவ கோப்ரல் ஒருவரே கைதுசெய்யப்பட்டுள்ளவராவார்.

குறித்த இராணுவ கோப்ரல், நாமல் ராஜபக்ஷ எம்.பியின் மெய்ப் பாதுகாவலர் எனவும் ஆயுதத்தை மறைத்துக்கொண்டு ஆயுதங்களுடன் உள்நுழைய கூடாத பகுதிக்குள் நுழைந்துள்ளார் என்று இராணுவ கோப்ரல் மீது குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் ஆதரவாளர்களை சந்திக்கும் கூட்டம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் கடந்த சனிக்கிழமை நடைபெற்றது.

ஜனாதிபதி பாதுகாப்பு பிரிவு, நாமல் ராஜபக்ஷ எம்.பியின் பாதுகாவலர்களை கட்டாயமாக சோதனைக்கு உட்படுத்தியிருக்க வேண்டும்.

எனினும், நாட்டின் முதல் பிரஜையின் பாதுகாப்பு தொடர்பில் மேற்கொள்ளவேண்டிய செயன்முறைகளை அந்தப்பிரிவு கையாளவில்லை என்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அந்த இராணுவக் கோப்ரல் சோதனைக்கு உட்படுத்தப்படவில்லை என்பதை, அங்கு பாதுகாப்புக்கு நிறுத்தப்பட்டிருந்த பொலிஸ் விசேட அதிரடிப்படையின் கொமாண்டோ வீரர் கண்டுள்ளார்.

அதன்போது, அந்த கொமாண்டோ பாதுகாப்பு வீரர், ஜனாதிபதிக்கு மிகவும் அருகில் இருந்துள்ளார் என்று தெரிகின்றது.

ஜனாதிபதி, ஏதாவது கூட்டத்தில் பங்கேற்பாராயின், பிரதமர் பாதுகாப்பு பிரிவு மற்றும் அமைச்சர் பாதுகாப்பு பிரிவு அங்கிருந்து விலக்கப்பட்டு. அந்த பாதுகாப்பு கடமைகள் யாவும் ஜனாதிபதி பாதுகாப்பு பிரிவுக்கு ஒப்படைக்கப்படல் வேண்டும்.

அங்கு மாகாண பொலிஸாரும், ஜனாதிபதி பாதுகாப்பு பிரிவின் பணிப்புரைகளுக்கு கட்டுப்படவேண்டும் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

எனினும், பொலிஸ் விசேட கொமாண்டோ படைவீரர், நாமல் ராஜபக்ஷவின் மெய்பாதுகாவலரை சோதனைக்கு உட்படுத்தியதுடன் அவரிடம் பிஸ்டல் ரக துப்பாக்கி இருப்பதை கண்டு அவரை, அந்த இடத்திலிருந்து உடனடியாக அப்புறப்படுத்தியுள்ளார்.

ஜனாதிபதி பாதுகாப்பு பிரிவின் பிரதானி சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் எஸ்.எம். விக்கிரமசிங்க ஆவார். அவர், முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் பாதுகாப்பு பிரிவிலும் கடமையாற்றியுள்ளார் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (இ)

# தேயிலை உற்பத்தியில் வளர்ச்சி

இலங்கையின் தேயிலை உற்பத்தி கடந்த மார்ச் மாதம் 17.5 சதவீதத்தால் அதிகரித்துள்ளது.


சிறந்த காலநிலை தன்மை நிலவியமையே இதற்கு காரணம் என்று தெரிவிக்கப்படுகிறது.

இலங்கை தேயிலை சபை இதனைத் தெரிவித்துள்ளது.

இந்த அதிகரிப்பின் காரணமாக, நாட்டின் முதல் காலாண்டுக்கான தேயிலை உற்பத்தி 7 சதவீத வளர்ச்சியை காட்டியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த 2014 ஆம் ஆண்டு இலங்கையின் தேயிலை உற்பத்தி இந்த காலப்பகுதியில் 0.6 சதவீதத்தால் வீழ்ச்சி அடைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-5)

# கணவன் - மனைவி உட்பட விபத்துக்களில் நால்வர் பலி




நேற்று முன்தினம் சனிக்கிழமை இடம்பெற்ற இருவேறு விபத்துகளில் நான்கு பேர் உயிரிழந்துள்ளனர். மாலை 6 மணியளவில் கம்பளை- கண்டி வீதியில் கொத்மல்கம பிரதேசத்தில் லொறி ஒன்றுடன் ஆட்டோ மோதி விபத்துக்குள்ளானதில் நால்வர் காயமடைந்தனர். காயமடைந்தவர்களை வைத்தியசாலையில் அனுமதித்த பின்னர் அதில் இருவர் உயிரிழ்ந்துள்ளனர். இரவு 8.40 மணியளவில் பிலியந்தலை - படகெத்தர வீதியில் மோட்டார் சைக்கிளொன்று வீதியை விட்டு விபத்துக்குள்ளாகியுள்ளது. இந்த விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த கணவன் - மனைவி இருவரும் உயிரிழந்துள்ளனர்.

சம்பவம் தொடர்பான விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (இ-5)

# வெளிநாட்டு நாணயங்களுடன் கட்டுநாயக்கவில் ஒருவர் கைது

(கொழும்பு)

வெளிநாட்டு நாணயத்தாள்களை இலங்கைக்கு கடத்த முற்பட்ட ஒருவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

விமான நிலையத்தின் சுங்க அதிகாரிகளால் அவர் கைது செய்யப்பட்டார்.

டுபாயில் இருந்து வந்த ஒருவரே இவ்வாறு கைதானதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவரிடம் இருந்து 45 ஆயிரத்துக்கும் அதிகமான அமெரிக்க டொலர்களும், ஐக்கிய இராச்சியம் [illegible] (இ)

# இன்று ஒரு தகவல்

## நேர நிர்வாகம்...

ஒரு வேலையும் செய்யாமல் சும்மா கிடப்பவன் மட்டும் சோம்பேறியல்ல. இப்போது செய்து கொண்டிருப்பதைவிட இன்னும் சிறப்பாக ஒரு வேலையைச் செய்யக்கூடிய வாய்ப்பிருந்தும் அப்படி செய்யாமல் இருக்கிறானே அவனும்கூட சோம்பேறிதான் என்று சிந்தனையாளர் சோக்ரடீஸ் சொல்வதில் எவ்வளவு அர்த்தம் இருக்கிறது பாருங்கள்.

அட்லாண்டிக் சமுத்திரத்தை மனிதன் கடக்கும் நேரம் ஆண்டு க்கு ஆண்டு குறைந்து கொண்டே போகிறது. ஆனால் அவன் அலுவலகம் செல்லும் நேரம் மட்டும் அதிகரித்துக் கொண்டே போகிறது என்பது ஒரு செய்தி. நேரத்தைத் திட்டமிடுவதற்கும் திட்டமிடாமல் செயற்படுவதற்கும் உள்ள இடைவெளி இது.

**நேரப்பங்கீடு:**

காலையிலே எழுதல் முதற்கடமை. அதிகாலையில் எழும் பறவையால்தான் இரைக்காக புதிய இடங்களுக்குப் பயணிக்க முடியும்.

காலைக் கடமைகளை முடித்ததும் வேலைகளைத் தொடங்குவதற்கு முன்னால் ஒரு குறிப்பேட்டில் அன்றைய வேலைகளைப் பட்டியலிடுங்கள். அவசரமாகச் செய்து முடிக்க வேண்டிய வேலை கள், கொஞ்சம் நிதானமாகச் செய்யக்கூடிய வேலைகள், இன்றே முடித்து விடக்கூடிய வேலைகள் என அவற்றைப் பிரித்துக் கொள் ளுங்கள்.

**ஒவ்வொரு வேலைக்கும் ஏகதேசமாக எவ்வளவு நேரமாகும் என்பதை கண்டறிந்து அந்த நேரத்தை அவற்றை முடிப்பதற்கென்று ஒதுக்குங்கள். கூடிய வரைக்கும் அந்த நேரத்துக்குள்வேயே அந்த வேலையை முடிக்கப்பாருங்கள். பிறகு பார்த்துக் கொள்ளலாம் என்று எதையும் ஒத்தி வைக்க வேண்டாம். அதுவே பிறகு பெரும் சுமையாக மாறி விடும்**

அதன் அழுத்தத்தில் புதிய வேலைகளைத் தொட முடியாமல் போகலாம். பெரிய நிர்வாகியாக இருப்பவர்கள்கூட கோப்புகளைத் தொடுவது இந்த அடிப்படையில் இருப்பது நல்லது. எது முதலில், எது பிறகு, எது அடுத்தது என்று அவற்றை வகைப்படுத்துவதே பாதி வேலை முடிந்ததற்குச் சமம்.

மாலையில் பணியிடத்தில் இருந்து திரும்பும்போதோ அல்லது இரவு படுகைக்குச் செல்லும் முன்போ காலையில் எழுதிய குறிப் பேட்டிலுள்ளதில் எவையெல்லாம் முடிந்திருக்கின்றன என்று கணக்குப் பாருங்கள். விடுபட்டுள்ளவைகளை அடுத்த நாள் வேலைகளில் முதன்மைப்படுத்துங்கள். எல்லா வேலைகளையும் நினைவிலேயே வைத்துக்கொள்ளலாம் என்று நினைப்பது தவ றான செயல். அது சிக்கலில்தான் போய் முடியும். சில நேரங்களில் நினைவு நம்மை ஏமாற்றி விடும். ஒரு வேலையானது நடந்தி ருக்கும், ஆனால் முடிந்திருக்காது. இப்படி ஒரு நிலை. ஒரு வேலையைத் தொட்டால் அதை முழுமையாக முடித்து விட வேண்டும்.

ஒன்றைப் பாதியிலேயே நிறுத்திவிட்டு... இன்னொரு வேலையைத் தொட்டு அதனையும் நிறுத்திவிட்டு... இப்படியே போய்க் கொண்டிருந்தால் நேரம்தான் விரயமாகி இருக்கும். நினைத்த வேலை முடிந்திருக்காது. நேரத்தைத்தான் தொலைத்திருப்போம். எந்தப் பொருளை எந்த இடத்தில் வைத்தோம் என்ற தெளிவு நமக்கு இருக்க வேண்டும். கார் சாவியைத் தேடுகிறவர்கள், வீட்டுச்சாவி, மூக்குக் கண்ணாடி, பேனா இவைகளைத் தேடுகிறவர்கள் நம்மில் பலபேர் இருக்கிறார்கள். இந்த நேரம் நிச்சயமாக நாம் நேரத்தை தொலைக்கிற ஒரு நேரம். அதோடு தேவையில்லாத டென்ச ன்களையும் இது ஏற்படுத்திவிடும்.

**காத்திருக்கும் நேரம்:**

பயணங்களின்போது பல நேரங்கள் காத்திருக்க வேண்டிய கட்டாயம் ஏற்படலாம். புகையிரத தாமதம், விமான தாமதம், நெரிசலில் சிக்கிய பேருந்துகளால் ஏற்படும் தாமதம். இது போன்ற சந்தர்ப்பங்களில் அந்த நேரங்களையும் பயனு டையதாக செல வழிக்கலாம். நேரங்களின் அளவைப் பொறுத்து அதைப் பயன் படுத்தலாம். தியானம் செய்யலாம், படிக்கலாம், சிறுசிறு பயிற்சிகள் செய்யலாம். உடன் இருப்பவர்களோடு உருப்படியான விடயங் களைப் பற்றி உரையாடலாம். தாமதம் வேண்டாம். உலகில் எல்லோரும் பின்பற்றும் மதம் தாமதம் என்பார்கள். அந்த நிலை வேண்டாம். குறித்த நேரத்தில் எதையும் முடிப்பதையே குறிக் கோளாக வைத்துக்கொள்ள வேண்டும்.

காலத்தின் கர்ப்பப் பையில்தான் நமது எதிர்காலம் கருக் கொண்டிருக்கிறது என்பதை மறந்து விடாதீர்கள்.

*கலைமாமணி முனைவர் இளசை சுந்தரம்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# 19 ஆவது திருத்தம் சாதனையா?

கடந்த ஜனவரி மாதம் நடந்த ஜனாதிபதித் தேர்தலில் மைத்திரிபால சிறிசேனவின் வெற்றி எந்தளவுக்கு பெரும்பாலானோரால் எதிர்பார்க்கப்படாத ஒன்றாக இருந்ததோ, அதுபோலவே, கடந்த செவ்வாய்க்கிழமை நாடாளுமன்றத்தில் 19 ஆவது திருத்தச்சட்டமும் எதிர்பாராத வகையில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

சிறுபான்மை அரசாங்கம் ஒன்று, நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை பலத்தைக் கொண்டுள்ள எதிர்க்கட்சியின் ஆதரவுடன் மூன்றில் இரண்டு பெரும்பான்மைப் பலத்துடன், இந்த அரசியலமைப்புத் திருத்தத்தை மேற்கொண்டது ஆச்சரியமான விடயமே. அதுவும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்குள் மஹிந்த ராஜபக்ஷவின் ஆதிக்கப் போட்டிக்கு மத்தியிலேயே இது நடந்திருக்கிறது. 19 ஆவது திருத்த வரைவு முன்வைக்கப்பட்ட நாளிலிருந்தே, அதற்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட சதி முயற்சிகள், வெளியிடப்பட்ட கருத்துகள், எதிர்க்கட்சியினரின் நடவடிக்கைகள் எல்லாவற்றையும் உன்னிப்பாக அவதானித்த எவருக்கும், இந்த திருத்தச்சட்டம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்படும் என்ற நம்பிக்கை ஊட்டியிருக்கவில்லை.

ஜனாதிபதியின் நிறைவேற்று அதிகாரங்களை குறைத்து, நாடாளுமன்றத்தை வலுப்படுத்தும் வகையிலான நகர்வில் பெரியளவில் பாய்ச்சலை நிகழ்த்தியிருக்காவிட்டாலும், இந்த திருத்தச்சட்டம் அந்த முயற்சியில் சில அடிகளை முன்நோக்கி எடுத்து வைத்திருக்கிறது என்பதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை.

இந்த திருத்த வரைவு முன்வைக்கப்பட்டபோது, ஜனாதிபதியின் அதிகாரங்களை கணிசமாக குறைக்கும் அம்சங்கள் இடம்பெற்றிருந்தன. ஆனால், உயர் நீதிமன்ற வியாக்கியானத்தில் சர்வஜன வாக்கெடுப்பும் நடத்தியே நிறைவேற்ற வேண்டும் என்று விதந்துரைக்கப்பட்ட பகுதிகளை இந்த திருத்தச் சட்ட மூலத்திலிருந்து நீக்கியபோதே, பிரதான இலக்கில் ஒரு தடுமாற்றம் ஏற்பட்டு விட்டது. அதற்குப் பின்னர், திருத்தங்களுடன் முன்வைக்கப்பட்ட சட்டமூலத்தில் மேலும் மேலும் திருத்தங்கள் முன் வைக்கப்பட்டன.

இறுதியாக இரண்டாவது வாசிப்பின் போது, 174 திருத்தங்கள் முன்வைக்கப்பட்டு, அவற்றில் பெரும்பாலானவை உள்ளடக்கப்பட்டதால், இந்த திருத்தத்தின் அடிப்படை அம்சம் குலைந்துபோனது. எவ்வாறாயினும், நிறைவேற்று அதிகாரத்தில் சில பிரிவுகளை வலுவிழக்கச் செய்வதில் வெற்றி கண்டிருக்கிறது அரசாங்கம்.

1978ஆம் ஆண்டு ஜே.ஆர்.ஜெயவர்த்தனவின் அரசாங்கம் உருவாக்கிய குடியரசு அரசியல் யாப்பில், நிறைவேற்று அதிகார ஜனாதிபதி தொடர்பான பிரிவில் செய்யப்பட்டுள்ள முதலாவது மிகப்பெரிய மாற்றமாக இதனைக் கருதலாம். 2010 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்றதும் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ எதிர்க்கட்சிகளை உடைத்தும் பிரித்தும் மிரட்டியும் மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலத்தைப் பெற்றுக்கொண்டு, 18ஆவது திருத்தச்சட்டத்தை நாடாளுமன்றத்தில் நிறைவேற்றியிருந்தார். அதன் மூலம், நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சிமுறை குறித்த பிரிவில் - ஜனாதிபதி பதவிக்கு போட்டியிடத் தகுதி பெற்றவர்கள் குறித்த விடயத்தில் திருத்தம் செய்யப்பட்டது.

ஜே.ஆர்.ஜெயவர்த்தனவின் அரசியலமைப்பு, ஜனாதிபதிப் பதவியை இரண்டு தடவைகள் வகித்த ஒருவர், மூன்றாவது பதவிக்காலத்துக்காக தேர்தலில் போட்டியிட முடியாது என்று கூறப்பட்டிருந்தது. அந்த விதிமுறையை 18 ஆவது திருத்தச்சட்டத்தின் மூலம் தனக்காகவே மாற்றிக்கொண்டிருந்தார் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ. அதன மூலம் அவர் மூன்றாவது முறை போட்டியிட்டுத் தோல்வியையும் தழுவிக் கொண்டார்.

மஹிந்த ராஜபக்ஷவின் அந்தப் பேராசையே அவரை இரண்டாவது பதவிக்காலத்தைக் கூட, முழுமையாக ஆட்சியில் அமர்ந்திருக்க முடியாத நிலையை ஏற்படுத்தியிருந்தது. இப்போது 19 ஆவது திருத்தச்சட்டத்தின் மூலம் ஜனாதிபதி பதவியில் இரண்டு முறை இருந்த ஒருவர், மூன்றாவது முறை போட்டியிட முடியாமல் தடுக்கப்பட்டுள்ளது. அதாவது, மஹிந்த ராஜபக்ஷ கொண்டுவந்த 18 ஆவ்து திருத்தம் நீக்கப்பட்டுள்ளது. அதைவிட, ஆறு ஆண்டுகள் என்றிருந்த ஜனாதிபதியின் பதவிக் காலம் ஐந்து ஆண்டுகளாக குறைக்கப்பட்டுள்ளது.

இது, ஜனாதிபதி பதவியில் இனிமேல் அமரக்கூடிய எவரும் 10 ஆண்டுகளுக்கு மேல் அந்தப் பதவியில் அமர்ந்திருக்க முடியாத நிலையை ஏற்படுத்தியிருக்கிறது. இதற்கு முன்னர் ஜனாதிபதிக்கு இருந்த் அதிகாரங்கள், அவரை நாடாளுமன்றத்துக்கு பொறுப்புக்கூற வேண்டிய அவசியமற்றவராகவே வைத்திருந்தது. அந்த நிலை மாற்றியமைக்கப்பட்டு, நாடாளுமன்றத்துக்கு பொறுப்புக் கூறவேண்டிய நிலையை இப்போதைய திருத்தம் உருவாக்கியிருக்கிறது.

இதுவரை ஜனாதிபதிக்கு எதிராக, எந்தவொரு வழக்கையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யமுடியாது என்ற நிலையே இருந்து வந்தது. ஆனால், இப்போது 19ஆவது திருத்தச்சட்டம் ஜனாதிபதிக்கு வழங்கியிருந்த அந்த சட்டப் பாதுகாப்பை நீக்கியிருக்கிறது. ஜனாதிபதிக்கு எதிராக அடிப்படை உரிமை மீறல் வழக்கை உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்வதற்கு இந்த திருத்தம் வழி செய்கிறது.

தமக்கெதிராக வழக்கு தொடுக்க முடியாது என்ற துணிச்சல்- கர்வத்தில் ஜனாதிபதி ஒருவர் எதையும் செய்யமுடியும் என்ற நிலைக்கு இதன்மூலம் முற்றுப்புள்ளி வைக்கப்பட்டிருக்கிறது. அமைச்சர்கள் நியமனத்தைக் கூட, ஜனாதிபதி தன்னிச்சையாக நியமிக்கலாம் என்ற நிலை மாற்றப்பட்டிருக்கிறது. பிரதமருடன் கலந்தாலோசித்தே, அமை ச்சர்களை நியமிக்கலாம் என்று 19 ஆவது திருத்தச்சட்டத்தில் கூறப்பட்டுள்ளது. மிக முக்கியமாக, நாடாளுமன்றத்தின் மீது ஜனாதிபதி ஒருவர் தனது அதிகாரத்தை பிரயோகிப்பதற்கும் 19ஆவது திருத்தம் கட்டுப்பாடுகளை வலுப்படுத்தியிருக்கிறது.

5 ஆண்டுகளைக் கொண்ட நாடாளுமன்றத்தை முன்கூட்டியே அதாவது, நான்கரை ஆண்டுகளுக்கு முன்னதாக ஜனாதிபதியால் கலைக்க முடியாது என்று சட்டத்தில் திருத்தம் செய்யப்பட்டுள்ளது. இது ஜனாதிபதி ஒருவர், தனக்கு உடன்பாடில்லாத தன்னுடன இணங்கிப்போகாத அல்லது மாற்று க்கட்சி பெரும்பான்மை பலம் பெற்றிருக்கும் அரசாங்கம் ஒன்றைக் கலைப்பதை தடுக்கிறது.

முன்னதாக ஓர் ஆண்டுக்குப் பின்னர், எந்த நேரத்திலும் ஜனாதிபதியால் நாடாளுமன்றத்தைக் கலைக்கமுடியும் என்ற நிலை இருந்துவந்தது. 2001ஆம் ஆண்டு தேர்தலில் அதிகாரத்தைக் கைப்பற்றிய ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்தை, அப்போதைய ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க குறுகிய காலத்திலேயே கலைத்திருந்தார். 2004 ஆம் ஆண்டு தொடக்கத்திலேயே அப்போதைய நாடாளுமன்றம் கலைக்கப்பட்டது. இந்த நிலை இனிமேல் ஏற்படாது என்பதை 19 ஆவது திருத்தச்சட்டம் உறுதிப்படுத்துகிறது. இதன்மூலம் நாடாளுமன்றத்தின் மீதான ஜனாதிபதியின் நிறைவேற்று அதிகாரம், வலுவற்றதாக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, அமைச்சரவையின், அரசாங்கத்தின், நாட்டின் தலைவராகவும் முப்படைகளின் தளபதியாகவும் ஜனாதிபதியே பதவியில் இருக்கப்போகிறார். இது குறித்த சில திருத்தங்களும் முன்வைக்கப்பட்ட போதிலும், உயர் நீதிமன்றத்தில் வியாக்கியானத்தினாலும், எதிர்க்கட்சியின் அழுத்தங்களினாலும் அவற்றை கைவிடவேண்டிய நிலை அரசாங்கத்துக்கு ஏற்பட்டது.

முன்னதாக, நிறைவேற்று அதிகார ஜனாதிபதி பதவி ஒழிக்கப்படும் என்றே வாக்குறுதிகள் கொடுக்கப்பட்டன. ஆனால், தற்போது ஏற்படுத்தப்பட்டுள்ள திருத்தங்கள், ஜனாதிபதி பதவியை ஒழிப்பதற்கான அடிப்படையை கொண்டிருக்கவில்லை. ஜனாதிபதியின் நிறைவேற்று அதிகாரங்களை குறைப்பது மட்டுமே இதன் நோக்கமாக இருந்தது.

இதற்கு முன்னர், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை போலவே, நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சி முறையை ஒழிப்பதாக முன்னாள் ஜனாதிபதிகளான சந்திரிகா குமாரதுங்க, மஹிந்த ராஜபக்ஷ ஆகியோரும் தேர்தல்களில் வாக்குறுதிகளை கொடுத்திருந்தனர். ஆனால், அவர்களால் அதனைச் செய்யமுடியவில்லை என்பதை விட, செய்ய முயற்சிக்கவில்லை என்பதே உண்மை.

மஹிந்த ராஜபக்ஷவிடம் மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலம் இருந்த போதும், அவர் தனது அதிகாரங்களை வலுப்படுத்திக்கொள்வதற்கே பயன்படுத்திக் கொண்டாரே தவிர, நிறைவேற்று அதிகார ஆட்சிமுறையை ஒழிப்பதற்கு பயன்படுத்த நினைக்கவேயில்லை. ஏனென்றால், அந்த அதிகாரங்களில் அவர் நன்றாகவே ருசி கண்டிருந்தார்.

இப்போது நிறைவேற்று அதிகாரத்தை ஒழிகக்ப் போராடும் சந்திரிகா குமாரதுங்கவும கூட, தனது பதவிக்காலத்தில், இத்தகையதொரு அரசியலமைப்புத் திருத்தத்தை மேற்கொண்டு, நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை ஒழிக்கவோ அல்லது அதிகாரங்களை குறைக்கவோ முனையவில்லை.

இப்போதுள்ள சிறுபான்மை அரசாங்கம், பெரும்பான்மை பலம் கொண்ட எதிர்க்கட்சிகளின் ஆதரவுடன் இந்த திருத்தச்சட்டத்தை நிறைவேற்ற முடிந்திருக்கிறது என்றால், சந்திரிகாவினால் அப்போதே அதனை செய்திருக்க முடியும். ஆனால், அவரது அதிகார போதை அந்த துணிவை அவருக்கு கொடுத்திருக்கவில்லை. நிறைவேற்று அதிகார ஜனாதிபதி பதவி, அந்தப் பதவியில் அமர்ந்து கொள்ளும் எவரையும் சர்வாதிகாரியாகவே மாற்றி விடும் வல்லமை பெற்றது. ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன விடயத்திலும் அது நடந்து விடுமோ என்ற அச்சம் பலருக்கும் வந்ததும் உண்மை. சிலர் அதனை வெளிப்படையாகவே கூறினர்.

அதிகாரத்துக்கு வந்த பின்னர், நிறைவேற்று அதிகாரங்களை தக்கவைத்துக் கொள்வதற்காக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தனது கட்சியினரை தூண்டிவிட்டு, 19 ஆவது திருத்தம் நிறைவேறுவதை தடுக்க முனைவதாக மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி.) போன்ற கட்சிகள் வெளிப்படையாகவே சந்தேகம் வெளியிட்டிருந்தன. ஆனாலும், 19ஆவது திருத்தச்சட்டத்தை நிறைவேற்றுவதற்கு தனது முழுமையான அர்ப்பணிப்பை வெளிப்படுத்தியிருந்தார் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன என்பதில் துளியளவும் சந்தேகம் கொள்ள வேண்டியதில்லை.

இறுதிக்கட்டத்தில், மஹிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவான தமது கட்சியினரை வழிக்கு கொண்டுவந்து, அவர்களையும் 19 ஆவது திருத்தத்துக்கு ஆதரவாக வாக்களிக்க வைத்த பெருமைக்கு அவரே முக்கிய காரணம். அதற்காக அவர் நாடாளுமன்றத்துக்குள் இருந்துகொண்டு நடத்திய போராட்டத்தை குறைத்து மதிப்பிடமுடியாது. அதிகாரத்தை விட்டுக்கொடுத்து, அரசியலமைப்பில் திருத்தம் செய்ய முன்வந்த முதல் ஜனாதிபதியாக அவர் அடையாளப்படுத்தப்பட்டுள்ளார்.

அதேவேளை, இந்த அரசியலமைப்புத் திருத்தத்தின் மூலம் எல்லாப் பிரச்சினைகளும் தீர்க்கப்பட்டு விட்டதாகவோ, ஜனநாயகம் முற்றாக வலுப்படுத்தப்பட்டு விட்டதாகவோ கருதமுடியாது. ஏற்கெனவே திட்டமிட்டது போன்று, அரசியலமைப்பு சபையை அரசியல் கலப்பற்றதாக - துறைசார் நிபுணர்களை மட்டும் கொண்டதாக உருவாக்கும் முயற்சி பலிக்கவில்லை.

மீண்டும், அது நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஆதிக்கத்துக்குட்பட்டதாகவே அமைக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் சுதந்திர ஆணைக்குழுக்களுக்கு நியமனங்களை செய்யும்போது, அரசியல் ரீதியான தலையீடுகளுக்கு வாய்ப்புகள் இருப்பதை மறுக்கமுடியாது.

அரசியலமைப்பு சபை விடயத்திலும் பிரதமரின் அங்கிகாரத்துடனேயே அமைச்சரவையை நியமிக்க முடியும் என்ற விடயத்திலும் கடைசிவரை நீடித்த இழுபறியால் 19 ஆவது திருத்தமே நிறைவேற்றப்பட முடியாமல் போகும் நிலை ஏற்பட்டது. அந்தக் கட்டத்தில், வேறு வழியின்றி எதிர்க்கட்சியின் அழுத்தங்களுக்கு பணிவதை விட, வேறு தெரிவு ரணில் விக்கிரமசிங்கவின் அரசாங்கத்துக்கு இருக்கவில்லை.

சிறுபான்மை அரசாங்கம் ஒன்று மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலத்துடன் அரசியலமைப்புத் திருத்தம் ஒன்றை மேற்கொள்ளும்போது, இது போன்ற விடயங்களில் விட்டுக்கொடுத்தேயாக வேண்டியது கட்டாயம். இல்லாவிட்டால், 19ஆவது திருத்தம் முற்றாகவே முடக்கிப் போயிருக்கும். அதனாலேயே, பல விடயங்களில் தமது பிடிவாதங்களை தளர்த்தி, எதிர்க்கட்சியின் ஆதரவைப் பெற முனைந்திருக்கிறது அரசாங்கம்.

தாம் நினைத்ததை சாதிக்கமுடியாது போனாலும், இப்போதைக்கு ஜனாதிபதியின் அதிகாரங்களை குறைத்தல் உள்ளிட்ட விடயங்களை உள்ளடக்கிய 19ஆவது திருத்தச்சட்டதை நிறைவேற்றியுள்ளதாக அரசாங்கத்தினால் காட்டிக்கொள்ள முடியும். ஆனால், இதன் முழுப்பலனை அடைவதற்கு மீண்டும் திருத்தங்களை செய்ய வேண்டும் என்றும் அடுத்த நாடாளுமன்றத் தேர்தலின் பின்னர், முழுமையாகவே அரசியலமைப்பை மாற்றப்போவதாகவும் அமைச்சர் மங்கள சமரவீர கூறியிருக்கிறார். அதற்கான மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலம் மட்டுமன்றி, சர்வஜன வாக்கெடுப்பும் நடத்தப்பட வேண்டும்.

அத்தகையதொரு மாற்றத்துக்கான சூழல் இப்போது இலங்கையில் இருக்கிறதா என்பது சந்தேகமே. என்றாலும், இப்போதைக்கு நிறைவேற்று அதிகாரத்தின் சிறகுகள் சில வெட்டப்பட்டு, அளவுக்கு மிஞ்சிப் பறக்க முடியாத நிலை ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. ஆனாலும், இதன் பலனை அனைத்து மக்களும் அனுபவிக்கவேண்டுமாயின், அதற்கு அரசியலமைப்பில் இன்னமும் பல திருத்தங்கள் செய்யப்படவேண்டியுள்ளது.

-கே.சஞ்சயன்-


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாகிஸ்தான் தீவிரவாதி லக்வி விடுதலை விவகாரத்தில் ஐ.நா.தலையிடவேண்டும்

## இந்தியா வலியுறுத்தல்

(டில்லி)

**மும்பைத் தாக்குதலுக்கு மூளையாக செயற்பட்ட பாகிஸ்தானின் லஷ்கர்-இ-தொய்பா தீவிரவாத இயக்கத் தலைவன் லக்வியின் விடுதலையில் ஐக்கிய நாடு கள் சபை தலையிட வேண்டும் என இந்தியா மீண்டும் வலியுறுத்தியுள்ளது.**



கடந்த 2008 ஆம் ஆண்டு மும்பையில் பாகிஸ்தான் தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலில் 166 பேர் பலியாகியுள்ளனர். இந்த தாக்கு தலுக்கு சதி திட்டம் தீட்டி மூளையாக செயறபட்ட வன் பாகிஸதானின் லஷ்கர்-இ- தொய்பா தீவிரவாத இயக்க தலைவன் ஷகி- -ரஹ்மான் லக்வி (வயது-55).

இந்தியா வலியுறுத்தியதன் பேரில் இவன் உட்பட 6 பேரை பாகிஸ்தான் கைது செய்து சிறையில் அடைத்தது.

இந்த நிலையில் கடந்த ஏப்ரல் 9 ஆம் திகதி இவனை பாகிஸ்தான் நீதிமன்றம் விடுதலை செய்தது.

இதற்கு இந்தியா கடும் எதிர்ப்பு தெரிவித்தது. இந்த நிலையில் ஐ.நா. சபைக்கு இந்தியாவின் நிரந்தர பிரதிநிதி அசோக்முகர்ஜி மூலம் கடிதம் அனுப்பியுள்ளது.

அதில் தீவிரவாதி லக்வி விடுதலை விவகாரத்தில் பாகிஸ்தான் நீதிமன்றம் ஐ.நா.சபை தீர்மானத்தை மீறியுள்ளது. எனவே இதில் ஐ.நா. சபை தலையிட வேண்டும்என வலியுறுத்தியுள்ளது. (இ)

# பயங்கரவாதி தாவூத் இப்ராகிம் பொலிஸில் சரணடைய விருப்பம்

மும்பை குண்டு வெடிப்பு சம்பவத்தின் முக்கிய பயங்கரவாதி தாவூத் இப்ராகிம், பொலஸில் சரணடைய விரும்பினான். ஆனால், சி.பி.ஐ., அதை கண்டு கொள்ளவில்லை என, டில்லி மாநகர முன்னாள் பொலிஸ் ஆணையாளர் நீரஜ் குமார், தன் புத்தகத்தில் தெரிவித்துள்ளார்.

கடந்த, 1993இல் மும்பையில், 13 இடங்களில், தொடர் குண்டு வெடிப்புகள் நிகழ்ந்தன. இந்தச் சம்பவத்தில், 257 பேர் பலியாகினர் 700 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.

இந்த தாக்குதல் சம்பவத்தின், முக்கிய சதிகாரரான தாவூத் இப்ராகிம், தற்போது பாகிஸ்தானில் வசித்து வருகிறான். மத்திய அரசால் தேடப்படும் குற்றவாளியான அவனைப் பற்றி, டில்லியின் முன்னாள் பொலிஸ் ஆணையாளர் நீரஜ் குமார், தான் எழுதி வரும் புத்தகத்தில் கூறியுள்ளதாவது,

மும்பை யில், தொடர் குண்டு வெடிப்புகள் நிகழ்ந்த, 15 மாதங்களுக்குப் பின், நிழல் உலக தாதாவான தாவூத் இப்ராகிம், பொலிஸாரிடம் சரண் அடைய விரும்பினான். அப்போது, சி.பி.ஐ.,யின் டி.ஐ.ஜி.,யாக இருந்த என்னிடம், 1994 ஜூனில், மூன்று முறை பேசினான். அதேநேரத்தில், சரண் அடைந்தால், தனக்கு எதி ரான தாதா கும்பலைச் சேர்ந்த வர்கள், தன்னைக் கொன்று விடு வர் என்றும் அஞ்சினான்.

நானோ, "நீ சரண் அடைந்தால, சி.பி.ஐ., உனக்கு கண்டிப்பாக பாதுகாப்பு அளிக்கும் என, கூறினேன். இருந்தாலும், தாவூத் இப்ராகிம் சரண் அடைய விருப்பம் தெரிவித்ததை, சி.பி.ஐ., உயர் அதிகாரிகள் கண்டு கொள்ளவில்லை.

அத்துடன், என்னையும், தாவூத்துடன் பேசக்கூடாது என, தடை விதித்து விட்டனர். தாவூத்தின் நம்பிக்கைக்குரிய உதவியாளர் மணீஷ் லாலா. அவர் மூலமாகவே, நான் தாவூத்துடன் தொலைபேசியில் பேசினேன்.

தாவூத்திற்கு சட்ட ரீதியான பல உதவிகளைச் செய்தவர் மணீஷ் லாலா. மும்பை ஆர்தர் ரோடு சிறையில், லாலாவை நான் சந்தித்துப் பேசினேன். இவ்வாறு, நீரஜ்குமார் கூறியுள்ளார்.

டில்லி பொலிஸ் ஆணையாளர் பதவியில் இருந்து, 2013 ஜூலையில், ஓய்வு பெற்ற நீரஜ்குமார், சி.பி.ஐ.,யில், டி.ஐ.ஜி.,யாக பணியாற்றிய போது தான், மும்பை தொடர் குண்டு வெடிப்பு வழக்கை விசாரித்தார்.

பிரபல சட்ட நிபுணரான ராம் ஜெத்மலானியும், "இந்தியாவில் தேடப்படும் பயங்கரவாதியான தாவூத் இப்ராகிம், சரண் அடைய தயாராக இருந்தான். ஆனால், தன்னை வீட்டுக் காவலில் வைக்க வேண்டும். மும்பை பொலிஸார் துன்புறுத்தக்கூடாது என, நிபந்தனை விதித்தான். அந்த நிபந்தனைகளை, அரசு ஏற்றுக் கொள்ளாததால், அவர் சரண் அடையவில்லை என, ஏற்கனவே தெரிவித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ)

# குழந்தைகள் - பெண்களுக்கு எதிரான குற்றங்கள் அதிகரிப்பு-மு.க.ஸ்டாலின்



(சென்னை)

பெண்கள், குழந்தைகளுக்கு எதிரான குற்றங்கள் அதிகரித்துள்ளதாக திமுக பொருளாளர் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

இது குறித்து, முதல்வர் ஓ.பன்னீர்செல்வத்துக்கு நேற்று முன்தினம் அவர் எழுதிய கடிதத்தில்,

கடந்த நான்கு ஆண்டுகளில் மக்களைப் பெரிதும் அச்சுறுத்தும் அளவுக்கு குற்றங்கள் பெருகிவிட்டன.

குறிப்பாக குழந்தைகள், பெண்களுக்கு எதிரான குற்றங்கள் அதிகரித்து விட்டன. டாஸ்மாக் நிறுவனத்துக்கு முக்கியத்துவம் தரப்படுகிறது. அரசின் மொத்த வருவாயில் அது 30 சதவீதத்தை ஈட்டுகிறது. இது அரசுக்கு பெருமை தேடித் தரக் கூடியதா?

ஆட்சியின் கடைசி ஆண்டில் அடியெடுத்து வைத்துள்ள உங்களது நிர்வாகத்தில், மக்களின் தேவைகளை பூர்த்தி செய்ய முயற்சி செய்ய வேண்டும் என கேட்டுக் கொண்டுள்ளார். (இ)

# இந்தியாவின் நிவாரண உதவிகள் தொடர்பில் நேபாளம் எச்சரிக்கையுடனிருக்க வேண்டும்

நிலநடுக்க நிவாரணம் மீட்புப் பணிகளில் ஈடுபட்டு வரும் இந்தியா உள்ளிட்ட வெளிநாடுகளால் நேபாளத்தின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது. இது குறித்து பிரதமர் சுஷீல் கொய்ரலர் எச்சரிக்கையுடன் செயற்ட வேண்டும் என்று அந்நாட்டு இடது சாரி தலைவர்கள் தெரிவித்துள்ளனர்.

நோபாள காங்கிரஸ் தலைவர் சுஷீல் கொய்ராலர் தலைமையில் அனைத்துக் கட்சிக்கூட்டம் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

அந்தக்கூட்டத்தில் எதிர்க்கட்சித் தலைவர்களான நேபாள ஐக்கிய கம்யூனிஸ்ட் கட்சி (மாவோயிஸ்ட்) தலைவர் பிரசண்டா, நேபாள கம்யூனிஸ்ட் கட்சி (மாவோயிஸ்ட்) தலைவர் மோகன் வைத்யா நேபாள விவசாயக் கட்சித் தலைவர் நாராயணன் மான் பிஜுக்சே உள்ளிட்டோர் கலந்து-கொண்டனர்.

அப்போது மேற்கண்ட 3 தலைவர்களும் பேசியதாவது,

நிலநடுக்கத்துக்குப் பின்னர் இந்தியாவின் தலையீடு அதிகரித்து வருகிறது. இந்தியாவின் எல்லைப் பாதுகாப்புப் படை நேபாளத்தின் கட்டுப்பாட்டை மீறி சென்று கொண்டிருக்கிறது.

சீனாவுடனான நேபாளத்தின் வடக்குப் பகுதி எல்லை மீதும் காத்மண்டுவில் திரிபுவன சர்வதேச விமான நிலையத்தின் மீதும் இந்தியாவின் கவனம் உள்ளது. இது சீனாவுக்கு கவலையை ஏற்படுத்தக் கூடும். எனவே பிரதமர் கொய்ராலர் எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும்.

இந்திய ராணுவம் மற்றும் மீட்புக்குழுக்களின் செயற்பாடுகள் கட்டுப்படுத்தப்பட வேண்டும் என்று அத் தலைவர்கள் தெரிவித்துள்ளனர்.(இ

பாரதச் செய்தி

# விவசாய நிலங்கள் ஒருபோதும் அபகரிக்கப்படமாட்டாது-பா.ஜ.க

நிலம் கையப்படுத்தும் அவசர சட்டத்தின் கீழ் விவசாய நிலங்களை ஒருபோதும் அபகரிக்க மாட்டோம் என பா.ஜ.க.தேசிய தலைவர் அமித்ஷா தெரிவித்தார்.

பா.ஜ.க. தேசிய தலைவர் அமித்ஷா மாநிலம் மாநிலமாக சென்று கட்சியை வலு சேர்த்து வருகிறார். நேற்றுமுன்தினம் வெளியிட்ட அறிப்பில் 10 கோடி உறுப்பினர்கள் பா.ஜ.கவில் இணைந்துளளதாக செய்திகள் வெளியாயின.

இந்நிலையில் பஞ்சாப் மாநிலம் அமிர்தசரசில் பா.ஜ.க.மாநில நிர்வாகிகள் ஆலோசனை கூட்டம் இரண்டு நாட்களாக நடைபெற்றது. இதில் தேசிய தலைவர் அமித்ஷா கலந்து கொண்டு கட்சியை வலுசேர்க்கும் விதமாக நிர்வாகிகளுடன் ஆலோசனை நடத்தினார்.

பின்னர் அவர் பேசியதாவது, ஏழை விவசாயிகளுக்கு காப்பீட்டு திட்டம், அவர்களுக்கு எளிதான கடனுதவி வழங்கிடும் முத்ரா வங்கி திட்டம் போன்ற திட்டங்கள் மூலம் நாடு முழுவதும் விவசாயம் சார்ந்த திட்டங்களை மத்திய அரசு செயற்படுத்திவருகிறது.

இதனை எதிர்க்கட்சிகள் , பெரு நிறுவனங்களுக்கு சாதமாக செயற்படுவதாக பொய் பிரசாரம் செய்து வருகின்றன.

நிலம் கையகப்படுத்தும் சட்டத்தின் கீழ் விவசாய நிலங்களை மத்திய அரசு ஒரு போதும் அபகரிக்காது, மேலும் குறைந்தவிலைக்கு நிலங்கள் வாங்கப்படமாட்டாது. அவரச சட்டம் குறித்து தவறான செய்திகள் பரப்பப்பட்டு வருகின்றன என்பது குறிப்பிடத்தக்கது. (இ)

# விவசாயிகளின் தற்கொலை ஆந்திராவில் தொடர்கின்றது

குண்டூர் மாவட்டம் பண்டி ரெட்டி திவாரி பாளையத்தைச் சேர்ந்தவர் புச்சிரெட்டி (வயது 65). இவர் பிடுகராலா ரயில் நிலையம் அருகே ரயிலில் வரும்போது தண்டவாளத்தில் தலை வைத்து தற்கொலை செய்து கொண்டார்.

அவரது பிணம் அருகே கிடந்த ஒரு கடிதத்தை பொலிஸார் கைப்பற்றினர். அதில் "விவசாயிகள் கடனை தள்ளுபடி செய்வதாக அரசு அறிவித்தது. அதனை நம்பி நான் வட்டி கட்டாமல் இருந்தேன். ஆனால் கடன் தள்ளுபடி செய்யாததால் வட்டி மேல். வட்டி போட்டு எனது கடன் தொகை அதிகமாகி விட்டது. வெளியில் வாங்கிய விவசாய கடனையும் என்னால் அடைக்க முடியவில்லை. இதனால் தற்கொலை செய்கிறேன்" என்று குறிப்பிட்டு இருந்தார்.

இதேபோல் அனந்தபுரம் மாவட்டம் கதிரிபள்ளி கிராமத்தை சேர்ந் ராஜப்பா (வயது 35) என்ற விவசாயி புளிய மரத்தில் தூக்கு போட்டு தற்கொலை செய்து கொண்டார்.

விவசாயத்தில் ஏற்பட்ட கடன் காரணமாக எனது கணவர் தற்கொலை செய்து கொண்டதாக அவரது மனைவி வீரலட்சுமி கூறினார்.

ஒரே நாளில் 2 விவசாயிகள் தறகொலை செய்த சம்பவம் ஆந்திராவில் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது. (இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தன்சல்களில் வழங்கப்படும் உணவின் தரம் பற்றி பரிசோதனைகள் அவசியம்

வெசாக்கை முன்னிட்டு முன்னெடுக்கப்படும் தன்சல்களில் வழங்கப்படும் உணவுகளின் சுகாதாரத் தரம் பற்றி பரிசோதனைகளை மேற்கொள்ளவுள்ளதாக இலங்கை பொது சுகாதார பரிசோதகர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

தன்சல்களை ஏற்பாடு செய்யும் போது சுகாதார விதிமுறைகளை உரிய முறையில் பின்பற்ற வேண்டும் என அந்த சங்கம் குறிப்பிட்டுள்ளது.

நாடுபூராகவும் 6000க்கும் மேற்பட்ட தன்சல்களுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் இவற்றை பரிசோதிக்க 1800 அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிய வந்துள்ளது.

இதேவேளை வெசாக் பண்டிகையை முன்னிட்டு கொழும்பு மற்றும் புறநகர் பகுதிகளில் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காக 1500 பொலிஸார் கடமைகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

இவர்கள் சீருடை மற்றும் சிவில உடைகளில் கடமையை முன்னெடுப்பார்கள் என பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர். (இ)

# மட்டு.சிறைச்சாலையில் 14 கைதிகள் விடுதலை

வெசாக் தினத்தினை முன்னிட்டு நாடெங்கிலும் உள்ள சிறைச்சாலைகளில் இருந்து சிறு குற்றங்கள் செய்த சிறைக்கைதிகள் விடுதலை செய்யப்பட்டனர்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் பணிப்புரைக்கமைய இந்த சிறைக்கைதிகளை விடுதலை செய்யும் நிகழ்வு நேற்று காலை நடைபெற்றது.

மட்டக்களப்பு சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த சிறு குற்றங்களில் ஈடுபட்ட 14 சிறைக் கைதிகள் நேற்று விடுதலை செய்யப்பட்டனர்.

மட்டக்களப்பு சிறைச்சாலையின் ஆணையாளர் ஏ.பிரியங்கர ஆலோசனையின் கீழ் பிரதான அதிகாரி ஆர். மோகனராஜாவின் தலைமையில் இந்த நிகழ்வு நடைபெற்றது.

வெசாக் தினத்தினை முன்னிட்டு இந்த சிறைக்கைதிகள் விடுதலை செய்யப்பட்டுள்ளதாக பிரதான சிறை அதிகாரி ஆர். மோகனராஜா தெரிவித்தார். (இ-5)

# ஆக்ராவில் இந்து மதத்துக்கு மாறிய முஸ்லிம்கள் மீண்டும் மறு மதமாற்றம்

இந்தியாவின் ஆக்ராவில் கடந்த டிசம்பர் மாதம் இந்து மதத்துக்கு மாறிய முஸ்லிம்கள் மீண்டும் தங்களது மதத்துக்கு மறுமதமாற்றம் செய்து கொண்டனர்.

ஆக்ராவில் கடந்த கிறிஸ்துமஸ் தினத்தன்று மாபெரும் மத மாற்ற நிகழ்ச்சி நடத்தப்பட்டது. இதில் நூற்றுக்கணக்கானோர் மத மாற்றம் செய்துகொண்டனர். இதில் மஹ்ரீர் லத்தியா கிராமத்தைச் சேர்ந்த "நத்" வகுப்பைச் சேர்ந்த முஸ்லிம்களும் அடங்குவர். இந்து மதத்துக்கு மாறினால் நிலம் வழங்கப்படும் என்று இந்துத்துவ அமைப்பின் தலைவர்வாக்குறுதி அளித்ததன்பேரில இவர்கள் அந்த நிகழ்ச்சி நடந்த போது இந்து மத்துக்கு மாறினர்.

இந்த நிலையில் தற்போது சுமார 17 முஸ்லிம்கள் இந்து மதத்திலிருந்து மீண்டும் மறு மதமாற்றம் செய்து கொண்டுள்ளனர். மறு மத மாற்றம் செய்துகொண்ட முதியவர் ராமாத் கூறும்போது, "அலி முகமது என்றவர் எங்களது குடும்பத்தினரை மதமாற்றம் செய்துகொள்ளும் படி கூறினார்.

நிலம் தருவதாக இந்துத்துவ தலைவர்கள் கூறினர். ஆனால் அவ்வாறு வழங்கப்படவில்லை. எங்களது சமூகத்தை சேர்ந்தவர்களும் எங்களை ஒதுக்கி தள்ளினர்.

திருமணம் உள்ளிட்ட எந்த நிகழ்ச்சிகளுக்கு எங்களை உறவினர்கள் அழைப்பதில்லை. அதனால திரும்பவும் எங்களது மதத்துக்கு மாறி விட்டோம்" என்றார்.

உத்தரப் பிரதேச மாநிலம் ஆக்ராவில் கடந்த கிறிஸ்துமஸ் தினத்தன்று 100 இஸ்லாமியர்கள் கட்டாய மதமாற்றம் செய்யப்பட்டதாக குற்றச்சாட்டு எழுந்தது.

மத மாற்றம் செய்துகொண்டால் ஆதார் அட்டை, பணம், நிலம் ஆகியவை வழங்கப்படும் என்று நிகழ்ச்சியை நடத்திய இந்துத்துவ அமைப்புகள் அறிவித்ததாக குற்றம் சாட்டப்பட்டுள்ளது. (இ)

# ரோஹித்தவின் சொத்து விபரங்களில் மறைக்கப்பட்ட பெறுமதியான மோதிரம் 28 இலட்சமாம்

(கொழும்பு)

முன்னாள் அமைச்சர் ரோஹித்த அபேகுணவர்தனவின் 28 இலட்சம் பெறுமதியான மோதிரம் அவரது சொத்து தொடர்பான அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதா என்று விசாரணை மேற்கொள்ளுமாறு வருமான வரி துறைக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக அரசாங்கத்தில் உயர் பதவி வகிக்கும் அதிகாரி ஒருவருக்கே அறிவிக்கப்பட்டுள்ளதாக தெரியவருகிறது. மோதிரம், சொத்து விபரத்தில் மறைக்கப்பட்டிருந்தால், சொத்து வெளிப்படுத்தாமை தொடர்பான குற்றச்சாட்டின் அடிப்படையில் ரோஹிதவுக்கு எதிராக நடவடிக்கை மேற்கொள்ளுமாறு உத்தரவிடப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

அண்மையில் பாராளுமன்றத்தில் போராட்டத்தில் ஈடுபட்டிருந்த சந்தர்ப்பத்தில் ரோஹிதவின் மோதிரம் காணவில்லை என தெரிவிக்கப்பட்டது. இது தொடர்பான விசாரணையின் போது இந்த குற்றச்சாட்டு வெளியாகியுள்ளது.

தோஷங்களை நீக்கும் வகையில் குறித்த மோதிரத்தை ரோஹித அணிந்திருந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது. (இ)

# பிரிவுத்துயர் பகிர்வு

### சின்னையா கந்தையா




கொடிகாமம் மயிலபுரத்தைப் பிறப்பிடமாகவும் பளை வேம்பொடுகேணியை நிரந்தர வசிப்பிடமாகவும் யாழ்ப்பாணம் கல்வியங்காட்டைத் தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட சின்னையா கந்தையா கடந்த 29ஆம் திகதி புதன் கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று திங்கட்கிழமை பிற்பகல் 2மணியளவில் கல்வியங்காடு செங்குந்தா வீதி குமாரகுலசிங்கத்தின் இல்லத்தில் நடைபெற்று பின்னர் பூதவுடல் செம்மணி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

### திருமதிதம்பிராசா நாகரத்தினம்

(ஓய்வுபெற்ற ஆசிரியை)



வளலாய், அச்சுவேலியைப் பிறப்பிடமாகவும் கொக்குவிலை வசிப்பிடமாகவும் கொண்ட ஓய்வுபெற்ற ஆசிரியை திருமதி நாகரத்தினம் தம்பிராசா கடந்த 30ஆம் திகதி வியாழக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று திங்கட்கிழமை முற்பகல் 10மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பின்னர் பூதவுடல் வளலாய் கூனன்காடு இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

### திருமதி சற்குணம் வீரவாகு



நயினாதீவு 2ஆம் வட்டாரத்தை பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம் இல. 9,கலட்டி அம்மன் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட சற்குணம் வீரவாகு கடந்த 30ஆம் திகதி வியாழக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று திங்கட்கிழமை முற்பகல் 10மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பின்னர் பூதவுடல் கோம்பயன் மணல் மயானத்தில் தகனம் செய்யப்படும்.

### பசுபதிப்பிள்ளை திரிபுவனப்பெருந்தேவி



இணுவில் தெற்கைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட பசுபதிப்பிள்ளை திரிபுவனப் பெருந்தேவி கடந்த 30ஆம் திகதி வியாழக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று திங்கட்கிழமை மு.ப.10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பின்னர் பூதவுடல் தாவடி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.


### நீக்கிலாப்பிள்ளை பீற்றர்



நாவாந்துறையைப் பிறப்பிடமாகவும் பிரதான வீதி நவாலி கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட நீக்கிலாப்பிள்ளை பீற்றர் கடந்த 1ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னாரின் பூதவுடல் இன்று திங்கட்கிழமை காலை 9.30 மணியளவில் அவரது இல்லத்திலிருந்து சென்பீற்றர் தேவாலயத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு இரங்கல் திருப்பலியின் பின்னர் நவாலி சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

### திருமதி சிவபாதம் கமலாதேவி



விளங்காவத்தை மயிலிட்டி வடக்கு மயிலிட்டியைப் பிறப்பிடமாகவும் ஐயனார் கோயிலடி மல்லாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சிவபாதம் கமலாதேவி நேற்று முன்தினம் சனிக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று திங்கட்கிழமை மு.ப.10மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பின்னர் பூதவுடல் நரியிட்டான் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

### முத்தையா செல்லையா

(முன்னாள் கனிஷ்ட அதிபர்)



அளவெட்டியைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட முத்தையா செல்லையா நேற்று மு தினம் சனிக்கி ழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று திங்கட்கிழமை பி.ப 1 மணியளவில் நடைபெற்று பின்னர் பூதவுடல்அளவெட்டி மல்லாகம் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

### அம்பலம் தம்பிப்பிள்ளை

(முன்னாள் கிராமசபை தலைவர்,சமாதான நீதவான்)



நெடுந்தீவைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட அம் பலம் தம்பிப்பிள்ளை கடந்த 1ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை செவ்வாய்க்கிழமை மு.ப11 மணியளவில் நடைபெற்று பின்னர் பூதவுடல் ஓட்டுமடம் கோம்பயன்மணல் மயானத்தில் தகனம் செய்யப்படும்.

### திருமதி முத்துலிங்கம் மகேஸ்வரி



அளவெட்டியைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்ட மகேஸ்வரி முத்துலிங்கம் கடந்த வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று திங்கட்கிழமை காலை 9.30 மணி தொடக்கம் மு.ப 11.30மணி வரை Chapel Ridge Funeral Home,8911 Woodbine Ave Markham,ON L3R 5G1,Canada எனும் முகவரியில் நடைபெற்று பின்னர் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

### திருமதி நேசரட்ணம் செல்லப்பா


(இளைப்பாறிய ஆசிரியை)



சுண்டுக்குளியைப் பிறப்பிடமாகவும் மட்டுவில் வடக்கை வசிப்பிடமாகவும் கனடா Toronto வை வதிவிடமாகவும் கொண்ட நேசரட்ணம் செல்லப்பா கடந்த வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை மறுதினம் காலை 9.30மணி தொடக்கம் பி.ப.12.30 மணி வரை Chapel Ridge Funeral Home,8911 Woodbine Ave Markham,ON L3R 5G1,Canada எனும் முகவரியில் நடைபெற்று பின்னர் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

### கிருஷ்ணசாமி சிவச்சந்திரன்



சுழிபுரம் கிழக்கைப் பிறப்பிடமாகவும் பிரான்சை வதிவிடமாகவும் கொண்ட கிருஷ்ணசாமி சிவச்சந்திரன் கடந்த 23 ஆம் திகதி வியாழக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை மறுதினம் புதன்கிழமை பி.ப.1மணி தொடக்கம் பி.ப.2.30 மணி வரை Crematorium du Pere Lachaise,71 Rue des Rondeaux,75020 Paris France (Metro: GAMB E TTA LING 3) என்னும் முகவரியில் நடைபெற்று பின்னர் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

### குணசிங்கம் பூபாலன்



புங்குடுதீவு 3ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் ஜேர்மனி Neuss ஐ வதிவிடமாகவும் கொண்ட குணசிங்கம் பூபாலன் கடந்த 30ஆம் திகதி வியாழக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை மறுதினம் புதன்கிழமை நண்பகல் 12 மணியளவில் Hauptfried hof,Rheydter StraBe 191,41464 Neuss, Germany என்னும் முகவரியில் நடைபெற்று பின்னர் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

### கணபதிப்பிள்ளை தனிநாயகம்

(இளைப்பாறிய தபால் ஊழியர்)



நெடுந்தீவு மேற்கு 1ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை தனிநாயகம் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள்இன்று திங்கட்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பின்னர் பூதவுடல் சித்துப்பாத்தி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அமெரிக்காவில் இந்தியப் பெண் சுட்டுக்கொலை

(வோஷிங்டன்)

அமெரிக்காவில் இந்திய பெண் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டார். குஜராத் மாநிலம் தாராப்பூரைச் சேர்ந்த மிர்துளாபென் பட்டேல் என்ற 60 வயது பெண், அமெரிக்காவின் தெற்கு கரோலினாவில் இனந்தெரியாத நபரால் கடந்த வியாழக்கிழமை இரவு சுடப்பட்டார்.

பின்னர் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த அவர் நேற்று முன்தினம் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

கொள்ளை முயற்சி யின் போது இந்த சம்பவம் நடைபெற்றதாகவும், இது இனவெறி தாக்குதல் இல்லை என்றும் பொலிஸ் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும் கொலை நடைபெற்ற பகுதியில் இருந்த சிசிடிவி கமரா காட்சிகளின் மூலம் கொலையாளியை பொலிஸார் தேடி வருகின்றனர்.

மிர்துளாபென் பட்டேல் அமெரிக்கா மற்றும் பிரிட்டன் குடியுரிமை பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ)

## நேபாள நிலநடுக்கம்

# பலியானோர் எண்ணிக்கை 7040 ஆக அதிகரித்தது!

(காத்மண்டு)

**நேபாளத்தில் கடந்த மாதம் 25ஆம் திகதி ஏற்பட்ட பயங்கர நிலநடுக்கத்தில் சிக்கி பலியானோர் எண்ணிக்கை 7040- ஆக அதிகரித்துள்ளது. நேபாள உள்துறை அமைச்சகம் வெளியிட்டுள்ள அதிகார பூர்வ செய்திக் குறிப்பிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.**



நிலநடுக்கம் ஏற்பட்டு ஒரு வாரம் முடிந்துவிட்ட நிலையில், இனியும் உயிருடன் யாரும் மீட்கப்படலாம் என்ற நம்பிக்கை வெகுவாக குறைந்துவிட்டது. 14 ஆயிரத்து 23 பேர் காயமடைந்துள்ளனர்.

இவர்களில் 6ஆயிரத்து512 பேருக்கு வைத்தியசாலைகளில் சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. நேபாளத்தில் கடந்த 25ஆம் திகதி ரிக்டர் அளவுகோலில் 7.9 என்ற அளவில் பயங்கர நிலநடுக் கம் ஏற்பட்டது. நிலநடுக்கத்தால் பாதிக்கப்பட்ட நேபாளத்துக்கு இந் தியாதான் முதலில் உதவிக்கரம் நீட்டியது. இன்றளவும் இந்தியா மீட்புப் பணிகளில் ஈடுபட்டுள்ளது. மேலும், நேபாளத்தில் சிக்கியிருந்த இந்தியர்களை இந்திய விமானப் படை சாதுர்யமாக மீட்டது. மேலும், அங்கிருந்த இஸ்ரேலியர்கள் உட்பட வெளிநாட்டவர்களை மீட்கவும் இந்தியா உதவியுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (இ)

## கேத் மிடில்டனுக்கு பெண் குழந்தை



இங்கிலாந்து இளவரசர் வில்லியமின் மனைவியான கேத் மிடில்டன் நேற்று முன்தினம் இரண்டாவது பிரசவத்தில் அழகான பெண் குழந்தையை பெற்றெடுத்துள்ளார்.

பிரசவத்துக்கான அறிகுறிகள் தென்பட்டதையடுத்து, உள்ளூர் நேரப்படி நேற்று முன்தினம் காலை சுமார் 6 மணியளவில் அவர் லண்டனில் உள்ள செயிண்ட் மேரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

ராணி எலிசபெத் குடும்பத்தின் ஆஸ்தான மகப்பேறு மருத்துவ ரான கை தார்ப்பே பீஸ்டன் தலைமையிலான டாக்டர்கள் குழு கேத் மிடில்டனுக்கு பிரசவம் பார்த்தது. ஏற்கனவே, ஒரு ஆண் குழந்தைக்கு தாயாகி இருக்கும் கேத் மிடில்டனுக்கு இரண்டாவது பிரசவத்தில் பெண் குழந்தை பிறந்துள்ளது.

கேத் மிடில்டனுக்கு பிறக்கப் போகும்குழந்தை ஆணா? பெண்ணா? என்பது பற்றி யாருக்கும் உறுதியாக தெரியாத நிலையில் இந்த குழந்தை பெண்ணாகதான் இருக்கும் என இங்கிலாந்து மக்களிடையே பலத்த எதிர்பார்ப்பு உருவாகியிருந்தது.

கடந்த 182 ஆண்டுகளாக இங்கிலாந்து மன்னர் வம்சத்தில் நேரடி பெண் வாரிசு பிறக்கவில்லை. இரண்டாம் தலைமுறை வாரிசு என்ற வகையிலும் கூட 65 ஆண்டுகளுக்கு முன்னர் இளவரசி அன்னி பிறந்த பின்னர், கடந்த 25 ஆண்டுகளாக இதுவரை வேறு பெண் குழந்தை அரச வம்சத்தில் பிறக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில், கேத் மிடில்டனுக்கு தற்போது பெண் குழந்தை பிறந்துள்ள செய்தியால் இங்கிலாந்து மக்கள் மகிழ்ச்சியில் திளைத்துள்ளனர். (இ)

## அமெரிக்க கூட்டுப்படைத் தாக்குதலில் 52 அப்பாவி பொதுமக்கள் உயிரிழப்பு

(பெய்ரூட்)

சிரியாவில் அமெரிக்க கூட்டுப் படைகள் நடத்திய விமனத்தாக்குதல்களில் அப்பாவி பொதுமக்கள் 52 பேர் கொன்று குவிக்கப்பட்டிருப்பதாக சிரிய மனித உரிமைக்கான கண்காணிப்பகம் அறிவித்துள்ளது.

அலெப்போ மாகாணத்தில், பிர்பாஹ்லே கிராமத்தில் ஐ.எஸ். ஐ.எஸ.தீவிரவாதிகளை குறி வைத்து கடந்த வெள்ளிக்கிழமை அமெரிக்க கூட்டுப்படைகள் விமானத் தாக்குதல் களை தீவிரமாக நடத்தின.

ஆனால் இந்த தாக்குதல்களில் அப்பாவி பொதுமக்கள் 52 பேர் கொல்லப்பட்டனர். அவர்களில் 7 குழந்தைகளும் அடங்குவார்கள். இன்னும் 13 பேர் இடிபாடுகளில் சிக்கியுள்ளனர். இந்த தகவல்களை சிரிய மனித உரிமைகள் கண்காணிப்பகம் நேற்று முன்தினம் வெளியிட்டது.

இது தொடர்பாக அந்த இயக்கத்தின் தலைவர் ரபி அப்தெல் ரகுமான கூறுகையில், "பிர்மாஹ்லேயில் அமெரிக்க கூட்டுப்படையினர் நடத்திய தாக்குதல்களில் அப்பாவி பொதுமக்கள்தான் சிக்கி பலியாகினர்.

அங்கு ஐ.எஸ்.ஐ.எஸ். நிலைகளே இல்லை. அங்கு எந்த மோதல்களும் கிடையாது. இந்த நிலையில் அமெரிக்க கூட்டுப் படைகள் நடத்திய குண்டுவீச்சில் ஒரு ஐ.எஸ். ஐ.எஸ். தீவிரவாதிகூட பலியாகவில்லை" என்றார்.

மேலும் அவர் கூறும்போது, "பக்கத்து நகரமொன்றில் நடந்த மோதல்களில் ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகள் 7 பேர் கொல்லப்பட்டனர்" என கூறினார். இதற்கிடையே ஐ.எஸ்.ஐ.எஸ். எதிர்ப்பு தாக்குதலை நடத்தி வரும் கூட்டுப் படையின் சார்பில் ஒரு அறிக்கை வெளியிடப்பட்டது. அந்த அறிக்கையில், கொபானி நகர் அருகே ஐ.எஸ். ஐ.எஸ். தந்திர பிரிவுகளை குறி வைத்து 6 வான் தாக்குதல்கள் நடத்தப்பட்டன என கூறப்பட்டுள்ளது.

சிரியாவில் இதுவரை அமெரிக்க கூட்டுப்படைகள் நடத்திய விமானத் தாக்குதல்களில் இதுவரை 2,000 பேர் பலியாகியுள்ளதாகவும், அவர்களில் 1,922 பேர் ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகள் எனவும் தகவல்கள் தெரிவிக்கின்றமை குறிப்பிடத்தக்கது. (இ)

## 27 தீவிரவாதிகள் கொன்று குவிப்பு

பாகிஸ்தானில் கடந்த 4 நாட்களாக தீவிரவாதிகளுக்கும், பாதுகாப்பு படையினருக்கும் இடையே கடும் மோதல் நடந்து வந்தது. நேற்று முன்தினம் இரு தரப்பினருக்கும் இடையே போர் வலுத்தது. தீவிரவாதிகளுக்கு எதிராக ராணுவத்தினருடன், பீரங்கி தாக்குதல், வானவழி தாக்குதல் என பலமுனை தாக்குதல் தொடுக்கப்பட்டது. இதன் முடிவில் 27 தீவிரவாதிகள் கொல்லப்பட்டனர். தீவிரவாதிகளின் மறைவிடங்கள் தகர்ககப்பட்டன. பாதுகாப்பு படையினரில் கப்டன் அஜ்மல் உள்ளிட்ட 5 பேர் உயிரிழந்ததுள்ளனர். தொடர்ந்து சிராவில்லா, வசுசாய் வேணி பகுதிகளில் தீவிரவாதிகளை குறி வைத்து பீரங்கி தாக்குதல் நடந்து வருவதாக தகவல்கள் கூறுகின்றன. இந்த தாக்குதல்களால் நிலை குலைந்து போயுள்ள தீவிரவாதிகள் ஆப்கான் எல்லையில் உள்ள செர்ஹாய், ராஜ்குல் பகுதிகளில் தஞ்சம் அடைந்து வருவதாக தெரியவந்துள்ளது. (இ)




## ஐ.எஸ்.ஐ.எஸ்.தீவிரவாதிகளால் 300 யாஷிடிய மக்கள் கொலை

இஸ்லாமிய அரசு (ஐஎஸ்ஐஎஸ்) தீவிரவாதிகள், தாங்கள் பிடித்து வைத்திருந்த சுமார் 300 யாஷிடி சிறுபான்மையின மக்களை கொன்றுள்ளதாக ஈராக்கிலிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன. நாட்டின் வடக்குப் பகுதியில் அவர்கள் ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகளால் பிடித்து வைக்கப்பட்டிருந்தனர்.

கடந்த வெள்ளிக்கிழமை மோசூல் நகருக்கு மேற்குப்புறமாக உள்ள பகுதியில் இவர்கள் கொலை செய்யப்பட்டுள்ளதாக யாஷிடி தரப்புத் தகவல்கள் கூறுகின்றன.

கடந்த ஆண்டு கோடை காலத்தில் வடக்கு ஈராக் முழுவதும் ஐ.எஸ். ஐ.எஸ். இயக்கத்தின் பிடியில் வீழ்ந்த போது, அவர்கள் ஆயிரக்கணக்கான யாஷிடிக்களை பணயக் கைதிகளாக பிடித்து வைத்திருந்தனர். பெருமளவிலானோரை கொலையும் செய்திருந்தனர்.

பிடித்துவைக்கப்பட்டிருந்த பல பெண்களை அவர்கள் பாலியல் அடிமைகளாகவும் வைத்திருந்தனர். யாஷிடி மக்களின் மத நம்பிக்கையை நிந்தனை செய்துள்ள ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பினர், யாஷிடிகளை மதத் துரோகிகள் என்றும் குற்றம் சாட்டுகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ)

## நேபாள நிவாரணத்துக்கு பேஸ்புக்கால் ரூ.72 கோடி

நேபாள நாட்டின் நிவாரண பணிகளுக்கு பல்வேறு நாடுகளும், பல அமைப்புகளும் உதவி வருகின்றன. 'பேஸ்புக்' சமூக வலைதளமும் நேபாள நாட்டு நிலநடுக்க நிவாரண பணிகளுக்கு உதவும்படி தங்கள் உறுப்பினர்களுக்கு வேண்டுகோள் விடுத்தது. உலகம் முழுவதும் இந்த வலைதளத்தை பயன்படுத்துவோர் 15 கோடிக்கும் அதிகமான பேர் இதனை பார்த்தனர். இவர்களில் 5 லட்சம் பேர் கடந்த 2 நாட்களில் மட்டும் நிவாரண உதவியாக மொத் தம் இந்திய மதிப்பில் சுமார் ரூ.60 கோடி (10 மில்லியன் அமெரிக்க டொலர்) வழங்கியுள்ளனர். அந்த தொகையுடன் 'பேஸ்புக்' நிறுவனம் கூடுதலாக ரூ.12 கோடி (2 மில்லி யன் டொலர்) வழங்குகிறது. ஆக மொத் தம் சுமார் ரூ.72 கோடி நேபாள நிலநடுக்க நிவாரண பணிகளுக்கு அந்த நிறுவனம் வழங்குகிறது. இதனை அதன நிறுவனரும், தலைமை செயல் அதிகாரியுமான ஜுக் கெர்பெர்க் கூறியுள்ளார். இந்த உதவியை செய்த மக்களுக்கு அவர் நன்றியும் தெரிவித்துள்ளார். (இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுங்க நடைமுறையைத் தளர்த்துமாறு நேபாள அரசாங்கத்திடம் கோரிக்கை

(காத்மண்டு)

சுங்க நடைமுறைகளை தளர்த்தும்படி நேபாள அரசாங்கத்தை ஐக்கிய நாடுகள் சபை கோரியு ள்ளது.

கடந்த வாரம் நேபாளத்தில் ஏற்பட்ட பாரிய இயற்கை அனர்த்தத்தை அடுத்து, பாதிக்கப்பட்டவர்களுக்காக அனுப்பி வைக்கப்படும் நிவாரணப் பொருட்களை விநியோகிப்பதில் காலதாமதம் ஏற்பட்டு வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேபாள சுங்கம் தமது சுங்க நடவடிக்கைகளை இந்த தருணத்தில் துரிதப்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து, ஐக்கிய நாடுகளின் மனிதாபிமான அமைப்பின் தலைவர் வலேரி அமோஸ் வலியுறுத்தியுள்ளார்.

தலைநகர் காத்மண்டு சர்வதேச விமான நிலையத்தில் ஏராளமான நிவாரண பொருட்கள் தேங்கியுள்ளதாகவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

கடந்த 25ஆம் திகதி ஏற்பட்ட இந்த பூமி அதிர்வு அனர்த்தத்தின் காரணமாக 7 ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் பலியாகியுள்ளமை உறுதிப படுத்தப்பட்டுள்ளது.

இந்த நிலையில், இடிபாடுகளுக்கு இடையே உயிருடன் மேலும இருப்பார்கள் என்பதற்கான சான்றுகள் இல்லை என மீட்பு பணியாளர்கள் தெரிவித்துள்ளனர். (இ)

## அதிகாரியை சுட்டுக்கொன்ற சப்இன்ஸ்பெக்டர் தற்கொலை

இந்தியாவின் மும்பை புறநகர் பொலிஸ் நிலையத்தில் பொலிஸ் உயர் அதிகாரியை சப் இன்ஸ்பெக்டர் ஒருவர் சுட்டுக் கொன்று விட்டு தானும் தற்கொலை செய்து கொண்ட சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இது குறித்து பொலிஸார் கூறும் போது, "நேற்று முன்தினமிரவு மும்பை புறநகரில் உள்ள சான்டா குரூஸ் பொலிஸ் நிலையத்தில், பணியில் இருந்த உயர் அதிகாரி விஷால் ஜோஷியை, சப் இன்ஸ்பெக்டர் திலீப் ஷிர்கே தனது துப்பாக்கியால் சுட்டுள்ளார்.

முதற் கட்ட விசாரணையின்படி தலீப் ஷிர்கே வெள்ளிக்கிழமை இரவுப்பணிக்கு வரவில்லை. ஷிர்கேவின் பொறுப்பின்மையை கடிந்து கொண்டுள்ளார் மேலதிகாரி விஷால் ஜோஷி. இதனால், ஆத்திரமடைந்த ஜோஷி தனது கைத்துப்பாக்கியை எடுத்து 5 முறை சுட்டுள்ளார்.

இதில் விஷால் ஜோஷியின் வயிறு, முதுகு பகுதிகளில் 3 குண்டுகள பாய்ந்துள்ளது. தவிர அதே அறை யில் இருந்த வயர்லெஸ் கருவி ஆப்பரேட்டர் பாலாசாஹேப் அஹார் தொடையிலும் ஒரு குண்டு பாய்ந்துள்ளது. பின்னர், திலீப் அதே துப்பாக்கியால் சுட்டு தற்கொலை செய்துகொண்டார்.

படுகாயமடைந்த விஷால் ஜோஷி வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டார். ஆனால், அறுவை சிகிச்சை செய்தும் பலனின்றி அவர் இறந்தார். சம்பவம் குறித்து விரிவான விசாரணைக்கு உத்தரவிடப் பட்டுள்ளது" எனத் தெரிவித்தார். (இ)

# ஆட்சி மாற்றத்தின் பின்னரும் கூட அரசுடன் இணைய வாய்ப்பில்லை

## அரியம் எம்.பி தெரிவிப்பு

**(கொழும்பு)**

**ஆட்சி மாற்றத்தின் பின்னரும் அரசாங்கத்துடன் இணைந்து செயற்படும் வாய்ப்பு இல்லை என பாராளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன் தெரிவித்துள்ளார்.**

கோப்- கனவு காண்பிப் பதற்கல்ல வழிகாட்டுவதற்கு என்ற வேலைத் திட்டத்தின் கீழ் இளைஞர் கழகங்களுக்கு விளையாட்டு உபகரணங்கள் பகிர்ந்தளிக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் சனிக்கிழமை மட்டக்களப்பு மாவட்டம் களுதாவளை பொது விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஆட்சி மாற்றம் ஏற்பட்டு 100 நாட்களைத் தாண்டிவிட்டது. இக்கால கட்டத்திற்குள்தான் அரச திணைக்களங்களும் தமிழ் தேசியக் கூட்டமைப்பை நிகழ்வுகளுக்கு அழைக்கின்ற சந்தர்ப்பம் ஏற்பட்டுள்ளது.

எனினும் தமிழ் தேசியக் கூட்டமைப்பு முன்வைத்த அடிப்படை விடயங்கள் இன்றும் செய்து கொடுக்கப்படவில்லை.

தற்போது இங்குள்ள இளைஞர்கள் விளையாடுகின்றர்கள். இங்கு விளையாடுகின்ற இளைஞர்களுக்குச் சமமான இளைஞர்கள் சிறைச்சாலையிலே வாடிக் கொண்டிருக்கின்றார்கள்.

இந்த நிலையில்தான் இந்த ஆட்சி மாறிய அரசாங்கத்துடன் தமிழ் தேசியக் கூட்டமைப்பு செயற்பட்டுக் கொண்டிருக்கின்றது. இன்னும் எமக்கு இந்த அரசாங்கத்துடன் இணைந்து செயற்படும் நிலையான வாய்ப்பு இல்லாமலிருக்கின்றது.

அபிவிருத்தியை யார் வேண்டுமானாலும் செய்யலாம். ஆனால் கடந்த 65 வருட காலமாக தொடர்ந்து கொண்டிருக்கும் எமது மக்களின் பிரச்சினைக்குரிய தீர்வு கிட்டும்வரை எமது அரசியல் பணி தொடர்ந்து கொண்டே இருக்கும்.

எனவே தற்கால இளைஞர் யுவதிகள் திறந்த மனதுடனும் தூய்மையானவர்களாகவும் எமது மண் மீது பற்றுள்ளவர்களாகவும் மாற வேண்டும்.

யுத்தம் நிறைவுற்ற தற்போதைய நிலையிலும் மதுபாவனை அதிகரித்த மாவட்டமாக மட்டக்களப்பு மாவட்டம் திகழ்ந்து கொண்டிருக்கின்றது.

இளைஞர்களை நல்வழிப் படுத்த நாங்கள் முயலும் போது மதுபான சாலைகள் தீய வற்றை தூண்டும் நடவடிக்கையில் ஈடுபடுகின்றன.

எனவே இளைஞர்கள் ஒழுக்கத்தைக் கடைப்பிடித்து மனோ நிலையில் மாற்றத்தைக் கொண்டு வந்து இந்த நாட்டிலே சிறந்த பிரஜைகளாக மாறவேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ)

## யாழ்.இலங்கை வேந்தன் கலைக்கல்லூரியின் இயல் இசை நாடக விழா




யாழ். நீராவியடியில் இல 63, கல்லூரி வீதியில் அமைந்துள்ள இலங்கை வேந்தன் கலைக்கல்லூரியின் இவ்வாண்டுக்கான இயல் இசை நாடக விழா கடந்த 30 ஆம் திகதி ஆரம்பமாகியது. கோப்பாய் ஆசிரிய கலாசாலை பிரதி அதிபர் ச.லலீசன் தலைமையில் நடைபெற்ற முதலாம் நாள் நிகழ்வில் நல்லூர் பிரதேச செயலர் பா. செந்தில்நந்தனன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார். ஆசியுரையை செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு. திருமுருகனும் வாழ்த்துரையை யாழ். இந்துக் கல்லூரி மற்றும் கொக்குவில் இந்துக் கல்லூரி என்பவற்றின் முன்னாள் அதிபர் அ.பஞ்சலிங்கமும் ஆற்றினர். நாச்சிமார் கோவிலடி சபேசன் குழுவினரின் மங்கல இசை, நல்லூர் சாரங்கம் இசை மன்ற மாணவர்களின் இறைவணக்கப்பா என்பவற்றைத் தொடர்ந்து காரைநகர் கிழவன்காடு கலாமன்ற மாணவி லதாங்கி ராமகிருஷ்ணனின் இசைக்கச்சேரி இடம் பெற்றது. அதனையடுத்து சிவகுமாரன் பத்மநாதனின் புல்லாங்குழல் இசைக்கச்சேரி இடம்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொற்ப மூளையும் பெரிய இதயமும் பெரும் காரியங்களைச் சாதித்துவிடும்.
– ஓர் அறிஞர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## ஜனாதிபதியை மாற்றியமை இனப்பிரச்சினைக்கான தீர்வன்று

அமெரிக்க வெளியுறவுச் செயலாளர் ஜோன் கெரி இலங்கைக்கு விஜயம் செய்து பலதரப்புடனும் சந்தித்துப் பேசியுள்ளார்.

அமெரிக்க வெளியுறவுச் செயலாளரின் இலங்கை விஜயம் முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதப்படுகிறது.

வன்னிப் போரின் போது நடந்த நெட்டூரத்தை போர்க் குற்றமாக சர்வதேசம் விசாரிக்க வேண்டும் என்பதில் அமெரிக்கா உறுதியாக இருக்கின்ற ஒரு நாடு. அதே நேரம் மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சியில் இலங்கை நாட்டில் ஜனநாயகம் நிலைக்க முடியாது என்பதிலும் அமெரிக்கா உறுதியாக இருந்தது.

மகிந்த ராஜபக்ஷவை வீட்டுக்கு அனுப்புவதில் அமெரிக்கா கொண்ட உறுதிப்பாட்டின் காரணமாகவே இந்தியாவும் அதற்கு இசைந்தது எனலாம். இந்நிலையில் இலங்கை தொடர்பில் அமெரிக்கா எடுத்த ஒரு முடிவு நிறைவேறிற்று. எனினும் சர்வதேச போர்க்குற்ற விசாரணை; தமிழர்களின் உரிமை என்ற விடயத்தில் இன்னமும் தாமதம் ஏற்பட்டு வருவதை காணமுடிகிறது.

அதே சமயம் சர்வதேச போர்க்குற்ற விசாரணை என்பதற்கு இலங்கை அரசு எதிர்ப்புக் காட்டி வருவதும் தெரிகிறது. இலங்கைக்கு வருகை தந்த அமெரிக்க வெளியுறவுச் செயலர் கெரி, ஜனநாயகப் பயணத்தி[illegible] அமெரிக்கா துணை நிற்கும் எனக் கூறியுள்ளார். இலங்கையில் ஜனநாயகம் நிலைக்க வேண்டுமாயின் தமிழ் மக்களுக்கு அநியாயம் இழைத்தவர்கள் தண்டிக்கப்பட வேண்டும்.

போரினவாத சிந்தனையோடு ஆட்சிப் பீடம் ஏறி சிறுபான்மை மக்களை கொன்றொழிக்கலாம் என்ற நினைப்போடு அதிகாரம் செலுத்தியவர்கள்– செலுத்துபவர்கள் தப்பித்துக் கொள்வார்களாயின் இலங்கையில் எங்ஙனம் ஜனநாயம் நிலைக்க முடியும்.

ஆக, இனப்படுகொலை நடத்தியவர்களை சர்வதேச சமூகம் தண்டிக்கும் போதுதான் இந்த உலகில் இனப்படுகொலைகள் முற்றுப்பெறும். எனவே வன்னிப் பெருநிலப்பரப்பு உள்ளிட்ட தமிழர் தாயகத்தில் நடந்த மனிதப்பேரவலம் தொடர்பில் சர்வதேச விசாரணைகள் முன்னெடுக்கப்படுவது அவசியம். இதனை அமுல்படுத்த வேண்டிய பெரும் பொறுப்பு அமெரிக்காவையே சாரும்.

இதேசமயம் இனப்பிரச்சினைக்கான தீர்வு என்பது [illegible]போதும் இலங்கை ஆட்சியாளர்களால் எட்டப்பட முடியாது. இனப்பிரச்சினைக்கான தீர்வு உள்நாட்டிலேயே காணப்படவேண்டும் என்பது உண்மையாயினும் இதற்கு சர்வதேச அழுத்தம் அவசியம் என்பது மறுக்க முடியாத உண்மை. அந்த அழுத்தத்தை தரக்கூடிய வல்லமை அமெரிக்காவிடமே உண்டு.

ஆகவே சர்வதேச போர்க்குற்ற விசாரணை மற்றும் தமிழர்களின் உரிமையைப் பெற்றுக் கொடுத்தல் என்ற முக்கியமான விடயங்களை அமெரிக்கா செய்யும் என்ற நம்பிக்கையே ஈழத்தமிழர்களின் வச்சிராயுதமாக உள்ளது என்பதை அமெரிக்கா புரிந்து கொள்ள வேண்டும்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை அந்தப் பதவியில் இருந்து வெளியேற்றுவது என்பது இனப்பிரச்சினைக்கான தீர்வாகாது என்பது புரிதலுக்கு உரியது. இலங்கைத் தமிழர்களைப் பொறுத்தவரை அவர்கள் அமெரிக்கா மீது அதீத நம்பிக்கை கொண்டுள்ளனர். எனினும் அமெரிக்காவின் அண்மைக்காலப் போக்கு மாறுபாடு உடையதாக தமிழ் மக்களால் உணரப்படுகிறது. அதாவது மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதி ஆகிய பின்னர் இலங்கையில் இருந்த ஒரு பெரிய பிரச்சினைக்கு தீர்வு காணப்பட்டு விட்டது போல அமெரிக்கா கருதுவதாகத் தெரிகிறது.

இலங்கையில் ஜனாதிபதிகளின் மாற்றங்கள் அல்ல பிரச்சினை. தமிழர்களுக்கு உரிமை வழங்கப்படாததே அடிப்படைப் பிரச்சினையாகும்.

ஆக, அறிக்கைகள் ஊடாக தமிழ் மக்களை ஆற்றுப்படுத்துதல் என்ற நிலைப்பாட்டில் இருந்து விலக தமிழ் மக்களுக்கு செயல் அளவில் உதவுவதே அமெரிக்காவின் கடமையாக இருக்கும்.

## வாகன விபத்தில் இளைஞன் பலி!

தம்புள்ளை - கண்டலம வீதியில் சிசிருவத்த பிரதேசத்தில் இடம்பெற்ற வாகன விபத்தில் 22 வயதுடைய இளைஞர் ஒருவர் பலியாகியுள்ளார்.

மோட்டார் சைக்கிள், கெப் ரக வாகனம் என்பன ஒன்றுடன் ஒன்று மோதி அந்த விபத்து ஏற்பட்டுள்ளது. மோட்டார் சைக்கிளை செலுத்திச் சென்ற இளைஞனே இந்த விபத்தில் பலியாகியுள்ளார்.

உயிரிழந்த இளைஞர் தம்புள்ளை பிரதேசத்தை சேர்ந்தவர் எனவும் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (செ)

## இலவச தேவாரப் பண்ணிசைப் பயிற்சி

சர்வதேச சக்தி பீடமாகிய நயினை ஸ்ரீ நாகபூசணி அம்பாள் தேவஸ்தான அனுசரணையுடன் கந்தர்மடத்தில் உள்ள யாழ். இந்து சமயப் பேரவையில் இலவச தேவார பண்ணிசை பயிற்சி வகுப்பு நடைபெறவுள்ளது.

இப் பயிற்சி வகுப்பில் தேவார இசை மணி கலாபூசணம் கே.எஸ்.ஆர்.திருஞான சம்பந்த ஓதுவார் மூர்த்திகளால் இன்று திங்கட்கிழமை காலை 9.30 மணியளவில் ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது.

மேலும் வாராந்தம் வியாழன் மற்றும் வெள்ளிக்கிழமைகளில் பிற்பகல் 4.30 மணி முதல் 6.00 மணி வரை நடத்தப்படவுள்ளதாக அகில இலங்கை திருமுறை மன்ற அமைப்பாளர் சி.கிருஷ்ணமூர்த்தி அறிவித்துள்ளார். (செ-3)

## ஈரானிய பிரஜை கடலில் மூழ்கி பலி

(கொழும்பு)

காலி வெலிகமை பிரதேசத்தில் கிராகல தீவுப்பகுதியில் புகைப்படமெடுக்க சென்ற ஈரானிய பிரஜை ஒருவர் கடலில் மூழ்கி நேற்று உயிரிழந்துள்ளதுடன் மற்றொருவர் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த இடத்துக்கு புகைப்படங்களை எடுப்பதற்காக சென்ற இவ்விருவரும் கடற்கரையோரமாக இருந்த கல் சரிந்து விழுந்ததையடுத்து தவறி கடலில் விழுந்துள்ளனர்.

இதனைத்தொடர்ந்து கடற்படையினரின் உதவியுடன் இருவரும் மீட்கப்பட்டபோது, அதில் ஒருவர் ஸ்தலத்திலேயே உயிரிழந்துள்ளார். காயமடைந்த மற்றையவர் மாத்தறை வைத்தியாசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

உயிரிழந்தவர் 24 வயதுடைய இளைஞர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (செ)

## சீலாரத்ன தேரருடன் சோமவன்ஸ கூட்டணி!

(கொழும்பு)

ஜே.வி.பியின் முன்னாள் தலைவர் சோமவன்ஸ அமரசிங்க, ஜனசெத பெரமுன கட்சியின் தலைவர் பத்தரமுல்லே சீலாரத்ன தேரருடன் கூட்டணியை ஏற்படுத்த இணங்கியிருப்பதாக அந்த கட்சியின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

சீலாரத்ன தேரரும், சோமவன்ஸ அமரசிங்கவும் எதிர்வரும் பொதுத் தேர்தல் மற்றும் தற்போதைய அரசியல் நிலைமைகள் குறித்து அண்மையில் சந்தித்து கலந்துரையாடியுள்ளனர்.

இதன்போது கூட்டணியை ஏற்படுத்துவது தொடர்பாக சீலாரத்ன தேரர் முன்வைத்த யோசனைக்கு அமரசிங்க இணக்கம் வெளியிட்டுள்ளதாக கூறப்படுகிறது.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை தமது கட்சியில் இணைந்து கொள்ளுமாறு சீலாரத்ன தேரர் இதற்கு முன்னர் அழைப்பு விடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (செ)

## மைத்திரிக்கு எதிரான அவதூறு செய்தி புனைந்த நபரை கண்டுபிடிக்க உத்தரவு

### சர்வதேச பொலிஸாரின் உதவியும் பெறப்படும்

(கொழும்பு)

கடந்த ஜனாதிபதித் தேர்தல் நேரத்தில் பொதுவேட்பாளராக போட்டியிட்ட மைத்திரிபால சிறிசேனவுக்கு அவதூறு ஏற்படுத்தும் வகையில் செய்திகளை புனைந்தமை தொடர்பில், லண்டனில் உள்ள இலங்கை தூதரகத்தில் பணியாற்றிய சேபால ரத்நாயக்கவை கண்டுபிடிக்க சர்வதேச பொலிஸாரின் உதவியை பெற கொழும்பு நீதவான் நீதிமன்றம் பொலிஸாருக்கு அனுமதி வழங்கியுள்ளது.

சேபால ரத்நாயக்க, முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் சட்ட ஆலோசகராகவும் பணியாற்றியுள்ளார்.

ஜனாதிபதித் தேர்தல் காலத்தில் 14 வயது ஆண் பிள்ளையை மைத்திரிபால சிறிசேன கடத்திச் சென்றதாக செய்தி ஒன்று வெளியிடப்பட்டது.

இந்த பொய்ச் செய்தி, சேபால ரத்நாயக்க மற்றும் சுயாதீன தொலைக்காட்சியின் பிரதிப் பணிப்பாளராக பணியாற்றிய சுதர்மன் ரெந்தலியகொட ஆகியோர் இணைந்தே இந்த செய்தியை புனைந்திருந்ததாக தெரிய வந்துள்ளது.

இந்த நிலையில், லண்டனில் உள்ள இலங்கை தூதரகத்தில் பணியாற்றிய சேபால ரத்நாயக்க, தனது பணி காலம முடிந்து கொழும்பு திரும்பாமல், இங்கிலாந்து பர்மிங்ஹாம் நகரில் அவரது நண்பருடன் சில நாட்கள் தங்கியிருந்துள்ளார்.

எவ்வாறாயினும் சேபால ரத்நாயக்க குறித்து லண்டன் தூதரகத்தில் விசாரித்த போது, அவர் கடந்த மார்ச் மாத இறுதியில் பணி முடிந்து சென்று விட்டதாகவும் அதன் பின்னர் அவர் பற்றிய எந்த தகவல்களும் கிடைக்கவில்லை என தூதரகத்தின் அதிகாரி ஒருவர் குறிப்பிட்டுள்ளார். (செ)

## இந். மீனவர்களின் 14 படகுகள் மீளவும் கையளிக்கப்பட்டன

இலங்கை கடற்படையினர் நேற்று இந்திய மீனவர்களின் 14 படகுகளை இந்திய கரையோரக் காவல் படையினரிடம் கையளித்தனர்.

இந்த படகுகள் ஏற்கெனவே நீதிமன்ற உத்தரவின்பேரில் விடுவிக்கப்பட்டிருந்தன.

இந்த நிலையில் அவை நேற்று கரையோர காவல் கப்பலான அனாக் கப்பல் அதிகாரிகளிடம் நெடுந்தீவு கடல் எல்லையில் வைத்து கையளிக்கப்பட்டன.

இலங்கையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள படகுகளை பழுதுபார்த்து மீண்டும் எடுத்துச் செல்வதற்காக இந்தியாவில் இருந்து 75 பேரைக் கொண்ட அணியொன்று கடந்த 28ஆம் திகதி இலங்கைக்கு வந்தமை குறிப்பிடத்தக்கது. (செ)

## வேதாத்திரி மகரிஷியின் நற்சிந்தனை

### மிருகம், மனிதன், மாமனிதன் (Super Man)



புலன்கள் மூலமாகப் பொருட்களைப் பார்ப்பதும், அப்படி நாம் பார்க்கும் போது நமது ஜீவகாந்த சக்தி செலவு ஆவதால் இன்பமோ, துன்பமோ, அமைதியோ, பேரின்பமோ வருவதும், புலன்கள் மூலமாக வரக்கூடிய வாழ்க்கை. உலகியல் வாழ்க்கை. அதற்கு மேலாக உண்மையை உணர்ந்து, இயற்கையை உணர்ந்து, அதற்குத் தக்கவாறு அருள்வாழ்வு வாழ வழி வகுத்துக் கொண்டு வாழக்கூடிய ஒரு பேராற்றலும் மனிதனிடத்தில் இருக்கிறது. ஆனால், மற்ற ஜீவராசிகளிடமும் இந்த அறிவு இல்லையா என்று பார்த்தால் இருக்கிறது. ஆனால் அந்த அறிவைச் செயல்படுத்தக் கூடிய வாய்ப்பே அவற்றுக்கு இல்லை.

பசி எடுத்தால் சாப்பிடவேண்டும். ஆனால், சாப்பாட்டிற்கு உணவு உற்பத்தி செய்ய எந்த ஜீவனாலாவது முடியுமா? உலகத்திலே, மனிதன் ஒருவனுக்குத் தான் தனக்கு வேண்டிய உணவைத் தானே உற்பத்தி செய்து சாப்பிடக்கூடிய திறமை உள்ளது. மற்ற ஜீவன்களுக்கு இல்லை. அவை என்ன செய்கின்றன?

"மற்றொரு ஜீவன் தன் வாய்க்குள் போகக் கூடியதாக இருக்க வேண்டும். அதற்கும் மேலாகத் தன்னால் கொன்று

ஜீவனும் தேடிக் கொள்கின்றன. உலகத்திலுள்ள எந்த ஜீவன் ஆனாலும் சரி, ஓரறிவான மரம், செடி, கொடி தவிர இரண்டாவது அறிவாகத் தோன்றி புழுவிலிருந்து மற்ற பூச்சிகள், பறவைகள், கால்நடைகள் எல்லாமே ஒரு உயிரைக் கொன்று வாழக்கூடியவை தான். ஆனால், அதனாலெல்லாம் அது கொலை செய்கிறது என்று உயிரினங்கள் பேரில் குற்றம் சுமத்த முடியாது. ஏனெனில், அவற்றுக்கு உணவு உற்பத்தி செய்யத் தெரியாது.

வாழ வேண்டும் என்று நம்மால் நினைக்க முடியும். இந்த உணர்வைச் செயல்பாட்டில் கொண்டு வந்தால் அதற்குத் தகுந்தவாறு திட்டமிட்டு வாழக்கூடிய அறிவு மனிதனிடம் இருக்கிறது. இப்போது மனிதனுடைய சிறப்பை உணர்ந்து

கொள்வதோடு, இதெல்லாம் தெரியாமல் துன்பத்தில் உழலும் மற்ற மனிதர்களும் அறிவு மேம்பாடு பெற அருள் தொண்டாற்றுவதற்கு அந்தச் சிறந்த மனிதன் முன்வரும்போது மாமனிதனாகிறான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபைக்குட்பட்ட வதிரி முன்பள்ளி விளையாட்டு விழா அண்மையில் நடைபெற்ற போது... (படங்கள்: கரணவாய் செய்தியாளர்)




வட இலங்கை சங்கீத சபை நடத்தும் மாதாந்த கலை நிகழ்ச்சி அண்மையில் சங்கீத சபையின் தற்பாரனந்தன் கலையரங்கில் நடைபெற்ற போது...



யுனிசெப் அனுசரணையுடன் வடமராட்சி வலயக்கல்வி அலுவலகம் நடத்தும் வலயமட்ட ஆரம்பப்பிரிவு கல்விக்கண்காட்சி அண்மையில் நடைபெற்ற போது... (படம்: கரணவாய் செய்தியாளர்)





தென்மராட்சி கல்வி வலயத்தின் ஏழிசை மாலை இசை நிகழ்வு சாவகச்சேரி நகராட்சி மன்ற பொன்விழா மண்டபத்தில் அண்மையில் தென்மராட்சி வலயக்கல்விப் பணிப்பாள சு.கிருஸ்ணகுமார் தலைமையில் நடைபெற்ற போது...






யாழ்.பரியோவான் கல்லூரி ஆசிரியர் ஜெ.துஷிராஜ், மருத்துவ பீட 4 ஆம் வருட மாணவன் ஜெ.துஜீவன் ஆகியோரால் நடத்தப்பட்ட "மாணவர்களுக்கான ஆங்கிலம்" நூல் வெளியீட்டு விழா கடந்த 22 ஆம் திகதி புதன் கிழமை சுன்னாகம் பொதுநூலகத்தில் இடம் பெற்றபோது...



சண்டிலிப்பாய் பிரதேச செயலகப் பிரிவிற்குட்பட்ட தாய் அல்லது தந்தையை இழந்த மாணவர்களுக்கு புலம்பெயர் வாழ் சங்கானை பகிரதனின் நிதியுதவியுடன் யாழ். எய்ட் அமைப்பினால் அண்மையில் கற்றல் உபகரணங்கள் வழங்கப் பட்ட போது...

நிகழ்வின் நிழல்கள்



இளவாலை பகுதியில் விபத்தில் எரிந்து நாசமான மீன்பிடி படகு மற்றும் இயந்திரத்திற்கான காப்புறுதி இழப்பீடு அமானதகாபுல் காப்புறுதி நிறுவனத்தினால் அண்மையில் வழங்கப்பட்ட போது...






கடந்த ஆண்டில் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மற்றும் இவ்வாண்டு தரம் ஒன்றில் இணைந்து கொண்ட நாவற்குழி பிரதேச மாணவர்களுக்கு கந்தையா கனகம்மா நிதியத்தினர் பரிசில்கள் வழங்குவதையும் நிகழ்வில் கலந்து கொண்ட மாணவர்களையும் படங்களில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரஹானேயின் ஆட்டத்தால் ராஜஸ்தானுக்கு வெற்றி டுமினியை கைவிட்ட டில்லி வீரர்கள்



அஜன்கியா ரஹானே அதிரடிக்கு, ஜே.பி டுமினி பதிலடி கொடுக்க முயன்றபோதும் அணி வீரர்களின் போதிய பங்களிப்பு இன் மையால் டில்லி அணி 14 ஓட்டங்களால் ராஜஸ்தான் அணியிடம் வீழ்ந்தது.

ஐ.பி.எல். சீசன் 8-ன் 36-வதும் லீக்கும், ஐ.பி.எல். தொடரின் 500ஆவது போட்டியு மான நேற்றைய இரண்டாவது போட்டி மும்பை வான்கடே மைதானத்தில் நடைபெற்றது.

இதில் ராஜஸ்தான் - டில்லி அணிகள் மோதின.

நாணயச்சுழற்சியில் வென்ற டில்லி அணி முதலில் களத்தடுப்பை தேர்வு செய்தது.

இதனடிப்படையில் ராஜஸ்தான் அணியின் ரகானே, வோட்சன் தொடக்க வீரர்களாக களம் இறங்கி அடித்து விளையாடினர்.

வோட்சன் 21 ஓட்டங்கள் எடுத்த நிலையில் ஆட்டமிழந்தார். அதன்போது ராஜஸ்தான் அணி 6.5 ஓவர்களில் 52 ஓட்டங்கள் எடுத்திருந்தது.

அடுத்து ரகானேவுடன் கருண் நாயர் ஜோடி சேர்ந்தார். இந்த ஜோடி டில்லி பந்து வீச்சை நொறுக்கித் தள்ளியது.

இதன்காரணமாக ராஜஸ்தான் அணி 13.4 ஓவர்களில் 100 ஓட்டங்களைத் தொட்டது.

ரஹானே 36 பந்துகளில் அரை சதத்தையும், நாயர் 33 பந்தில் அரை சதத்தையும் கடந்தனர்.

நாயர் 61 ஓட்டங்கள் (38 பந்து 6 பவுண்டரி, 2 சிக்சர்கள்) எடுத்திருந்தபோது ஆட்டம் இழந்தார். 3-வது விக்கெட்டுக்கு ரஹானேயுடன் போல்க்னர் ஜோடி சேர்ந்தார்.

ரஹானே அதிரடியால் ராஜஸ்தான் அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்களில் 2 விக்கெட்டுக்கள் இழப்புக்கு 189 ஓட்டங்கள் எடுத்தது.



களத்தில் ரஹானே 54 பந்துகளில் 9 பவுண்டரிகள், 3 சிக்ஸர்களுடன் 91, போல்க்னர் 8 ஓட்டங்களுடன் இருந்தனர்.

ரகானே, கருண் நாயர் அதிரடியால் 189 ஓட்டங்களைக் குவித்த ராஜஸ்தானை எப்படியும் வீழ்த்தி விடுவது என்ற மன உறுதியுடன் டில்லி டேர்டெவில்ஸ் அணியின் தைரியமான பிசாசுகளாக (dare devils) அகர்வால் மற்றும் ஐயர் களமிறங்கினர்.

நிலையான தொடக்கத்தை தர நினைத்த இருவருமே 4ஆவது ஓவருக்குள் அடுத்தடுத்து ஆட்டமிழந்தனர். அதன்போது அணியின் ஓட்ட எண்ணிக்கை 32 ஆக இருந்தது.

அடுத்து ஜோடி சேர்ந்த டுமினி, யுவராஜ் மீது அதிக எதிர்பார்ப்பு இருந்தது. இதில் யுவராஜ் 22 ஓட்டங்களில் போல்க்னரின் பந்து வீச்சில் வெளியேற, டுமினி மட்டும் நிதானமான ஆட்டத்தை வெளிப்படுத்தினார்.

அடுத்து வந்த மத்யூஸ், ஜாதவ் இருவரும் அடுத்தடுத்து ஆட்டமிழந்த பின்னர், டுமினியுடன் திவாரி கைகோர்த்தார். 16 ஆவது ஓவரின் முதல் பந்தில் டுமினி 50 ஓட்டங்களைத் தொட்டார். யாராவது கம்பெனி கொடுத்தால் போதும் டுமினி அதிரடியாக ஆடி இலக்கை எட்டி விடுவார் என்ற டில்லி ரசிகர்களின் நம்பிக்கையில் இடி விழுந்தது போல் 17ஆவது ஓவரின் கடைசி பந்தில் போல்க்னர் பந்துவீச்சில் குல்கர்ணியிடம் பிடி கொடுத்து ஆட்டமிழந்தார் டுமினி.



இனி ஏதாவது அதிசயம் நிகழ்ந்தால் மட்டுமே ஜெயிக்க முடியும் என்பது டில்லி ரசிகர்களுக்கு தெளிவாக புரிந்தது. இருந்தும் அந்த அதிசயம் நடக்குமா? என்று ஆவலுடன் காத்திருந்தனர். ஆனால் அதிர்ச்சியே மிஞ்சியது. அடுத்தடுத்து வந்தவர்களும் அடுத்தடுத்து ஆட்டமிழக்க,

டில்லி அணியால் 20 ஓவர்கள் நிறைவில் 7 விக்கெட்டுக்களை இழந்து 175 ஓட்டங்களை மாத்திமே எடுக்க முடிந்தது.


போட்டியின் ஆட்டநாயகனாக ராஜஸ்தான் அணியின் ரஹானே தெரிவானார்.

# பட்டேல், சிம்மன்ஸ் அதிரடி மும்பை ஹட்ரிக் வெற்றி

8ஆவது ஐ.பி.எல் தொடர் 2015ஐ மோசமாக ஆரம்பித்த மும்பை அணி, தனது முதல் வெற்றியை 5ஆவது போட்டியிலேயே பெற்றது, அதன்பின்னர் தனது தோல்விகளை சீரமைத்துடன், நேற்றைய ஆட்டத்தில் பட்டேல், சிம்மன்ஸின் அதிரடியான துடுப்பாட்டத்தினால் மீண்டும் வெற்றி பெற்று ஹட்ரிக் வெற்றியைப் பதிவு செய்தது.

ஐ.பி.எல். கிரிக்கெட் திருவிழாவின் நேற்றைய நாளின் முதல் போட்டி மொஹாலியில் நடைபெற்றது. இதில் பஞ்சாப் - மும்பை அணிகள் பலப்பரீட்சை நடத்தின.

நாணயச்சுழற்சியில் வென்ற மும்பை அணி முதலில் துடுப்பாட்டத்தை தேர்வு செய்தது.



இதன்படி முதலில் துடுப்பெடுத்தாட களமிறங்கிய மும்பை, ப்ட்டேல் (59), சிம்மன்ஸ் (71) ஆகியோரின் அதிரடியால் நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில் 3 விக்கெட்டுக்கள் இழப்புக்கு 172 ஓட்டங்கள் குவித்தது.


173 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற கடினமான இலக்குடன் களமிறங்கிய பஞ்சாப் அணிக்கு முரளி விஜய், சேவாக இணை ஆரம்பம் கொடுத்தது.

சேவாக் 2 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து ஏமாற்றம் அளித்தார். அடுத்து களமிறங்கிய அதிரடி வீரர் மக்ஸ்வெல் 12 ஓட்டங்களுடன் வெளியேறினார்.

தொடர்ந்து 3ஆவது விக்கெட்டுக்காக முரளி விஜய் உடன் மில்லர் ஜோடி சேர்ந்தார். இந்த ஜோடி நேர்த்தியாக விளையாடியது. ஆனால் அதிரடி காட்ட முடியவில்லை. இதனால் பஞ்சாப் அணியின் ஓட்ட எண்ணிக்கை மந்தகதியில்தான் உயர்ந்தது.


ஆரம்பத்தில் 6.6 ஓவர்களில் 50 ஓட்டங்களைத் தொட்ட பஞ்சாப் அணி 13.2 ஓவர்களிலேயே 100 ஓட்டங்களைத் தொட்டது.


43 ஓட்டங்கள் எடுத்த மில்லர் 17ஆவது ஓவரின் 2ஆவது பந்தில் ஆட்டம் இழந்தார். அத்துடன் பஞ்சாப் அணியின் தோல்வி உறுதியானது. அணித் தலைவர் பெய்லி 21 ஓட்டங்களில் ரன்-அவுட் ஆனார். அடுத்து வந்த அக்சார் பட்டேலும் எதுவித பந்தையும் சந்திக்காமல் ரன் அவுட் ஆனார்.



இறுதியில் பஞ்சாப் அணியால் நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில் 6 விக்கெட்டுக்கள் இழப்புக்கு 149 ஓட்டங்களையே எடுக்க முடிந்தது.

இதனால்மும்பை அணி 23 ஓட்டங்கள வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. இது மும்பையின் ஹட்ரிக் வெற்றியாகும். ஆட்டநாயகனாக மும்பை அணியின் சிம்மன்ஸ் தெரிவானார்.







வெசாக் பௌர்ணமி தினத்தை முன்னிட்டு முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் பெலியத்த மெதமுலன இல்லத்தில் நேற்று விசேட தர்ம உபதேசம் நடத்தப்பட்டது.

தர்ம உபதேசத்தை கலாநிதி மெதகொட அபயதிஸ்ஸ நாயக்க தேரர் நடத்தினார்.

இதில் முன்னாள் ஜனாதிபதியின் பாரியார் ஷிரந்தி ராஜபக்ச, முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ச, நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச உட்பட பலர் கலந்து கொண்டனர்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## புதிய அரசியல் சூழ்நிலையை...

மைப்பின் பிரதிநிதிகளை கொழும்பில் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்திய போதே இவ்வாறு அறிவுறுத்தியுள்ளார்.

கொழும்பு தாஜ் சமுத்ரா நட்சத்திர விடுதியில் நேற்று காலை 9.30 மணியிலிருந்து 10.15 மணிவரை இடம்பெற்ற இந்தச் சந்திப்பில் தமிழ்த தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன், வட மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராஜா, சுரேஸ் பிரேமச்சந்திரன், எம்.ஏ.சுமந்திரன், செல்வம் அடைக்கலநாதன் ஆகியோர் பங்கேற்றிருந்தனர்.

இந்தச் சந்திப்புக் தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்ட சுரேஸ் பிரேமச்சந்திரன், இச்சந்திப்பின் போது இலங்கையில் இடம்பெற்ற போரின் போது மேற்கொள்ளப்பட்ட போர்க்குற்றங்கள் மற்றும் மனிதவுரிமை மீறல்கள் தொடர்பில் நம்பகரமான விசாரணை நடத்தப்பட வேண்டும் என்பதை தமிழ்த் தரப்பு விரும்புகிறது என அமெரிக்க இராஜாங்க அமைச்சர் ஜோன் கெரியிடம் நாங்கள் தெரிவித்தோம்.

அத்துடன், வடக்குக் கிழக்கில் தமிழ் மக்களுக்கு நியாயமான அரசியல் தீர்வொன்று பெற்றுக் கொடுக்கப்பட வேண்டும் என்றும் நாங்கள் அமெரிக்க இராஜாங்க அமைச்சரிடம் வலியுறுத்திக் கேட்டுக்கொண்டோம.

அதேவேளை, இலங்கைப் படைத்தரப் பினரால் சுவீகரிக்கப்பட்ட காணிகளை உரிமையாளர்களிடம் மீண்டும் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் வலியுறுத்தினார்.

போர் முடிவுக்கு கொண்டு வரப்பட்டுள்ள நிலையில், வடக்கில் நிலைநிறுத்தப்பட்டுள்ள படையினர் நீக்கப்பட்டு, அனைத்து மக்களும் தமது சொந்த இடங்களில் மீள்குடியேறுவதற்கான நடவடிக்கைகளை விரைவுபடுத்த இலங்கை அரசாங்கத்தை அமெரிக்கா கோரவேண்டும் எனவும் நாங்கள் கோரக்கை விடுத்தோம்.

வடக்கில் படையினரே முடிவெடுக்கும் சக்தியாக இருக்கின்றனர். இந்த நிலைமை மாற்றப்பட்டு அரசியல் ரீதியாக தீர்க்கமான முடிவொன்றை இலங்கை அரசாங்கம் அறிவிப்பதற்கு அமெரிக்கா அழுத்தம் கொடுக்க வேண்டும் எனவும் அமெரிக்க இராஜாங்க அமைச்சர் ஜோன் கெரியிடம் நாங்கள் எடுத்துக் கூறினோம்.

எமது கருத்துக்களை ஏற்றுக்கொண்ட அவர், இலங்கையில் தற்போது ஏற்பட்டுள்ள அரசியல் சூழ்நிலையை தமிழர் தரப்பினர் சரியாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்று தெரிவித்தார் என சுரேஸ் பிரேமச் சநதிரன் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

இச்சந்திப்பை அடுத்து அமெரிக்க இராஜாங்க அமைச்சர் ஜோன் கெரி இலங்கைக்கான பயணத்தை முடித்துக் கொண்டு கென்யாவின் தலைநகர் நைரோபிக்கு பயணமானார். (செ)


**VACANCY** Tel 077 4458 134 / 077 999 4807

வட மாகாணத்தில் யாழ்ப்பாணம், வவுனியா, முல்லைத்தீவு, கிளிநொச்சி, மன்னார் ஆகிய மாவட்டங்களில் ஆரம்பிக்கப்படவுள்ள Granton நிறுவனத்தின் புதிய கிளைகளுக்கு

- நிர்வாக அதிகாரி
- செயற்றிட்ட அதிகாரி
- அலுவலக மேற்பார்வையாளர்
- அலுவலக உதவியாளர்

ஆகிய பதவிகளுக்கு ஆட்கள் தேவை.
ஆர்வமுள்ள பயிற்சிபெற விரும்புபவர்கள் 18-35 வயதுக்குட்பட்ட ஆண்/பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். (276)
இல.225, 3ம் குறுக்குத்தெரு, வைத்தியசாலை வீதி, யாழ்ப்பாணம்.

WEC சட்டரீதியான வீசா ஆலோசனை மையம்
Visa consulting service
மாணவர்கள், பெற்றோர்களின் வேண்டுதலுக்கு அமைவாக தற்பொழுது WEC நிறுவனம் வடமராட்சி நகரான நெல்லியடியிலும்...
எமது நிறுவனம் பற்றி...
- தென்மராட்சி மண்ணில் கடந்த 4 வருடகாலமாக வெற்றிகரமாக இயங்கிவரும் கல்லூரி.
- 150 இற்கும் மேலான வீசாக்களை பெற்றுக்கொடுத்த சாதனை.
- மேல்மாகாண பிரபல ஆசிரியரின் வழிகாட்டலில் IELTS, City&Guilds A1,B1 வகுப்புக்கள்.
- திருமணம் முடித்து sponsor visa இல் UK செல்பவர்களுக்கு KET EXAM இற்குரிய வகுப்புக்கள் நடைபெறுகின்றன. (100% பரீட்சையில் சித்தியடைய நாம் உத்தரவாதம் வழங்குகின்றோம்)

City&Guilds Approved Centre-UK
கடந்த 6 மாதத்தில் மட்டும் 7 வீசாக்கள்
(C-880)
சங்கத்தானை, சாவகச்சேரி (இந்துக்கல்லூரிக்கு அருகே) | பருத்தித்துறை வீதி, நெல்லியடி (றுகின்ஸ் Hospitel அருகே)
0779265447, 0217200989

IELTS இல்லாமல் ஐரோப்பா போக
பிரான்ஸ், இத்தாலி, ஜேர்மனி, நோர்வே உள்ளிட்ட 23 நாடுகளுக்குச் செல்லக்கூடிய செங்கன் விசா
பகுதி நேர வேலைவாய்ப்புடன் பட்டக்கல்வியைத் தொடர்ந்து, வேலைவாய்ப்புடன் விரும்பிய நாட்டில் குடியேறலாம்
க.பொ.த. உயர்தரத்தில் 3 பாடச் சித்தி அவசியம்!
அழையுங்கள்
0777 324 004
SIKARAM
Education Abroad
Work, Migration & Visa Solutions
எந்தவொரு நாட்டுக்குமான எந்த வகை விசா என்றாலும்
Sikaram (Pvt) Ltd.
275-2/1 & 2/2, மணிக்கூட்டுக்கோபுர வீதி, யாழ்ப்பாணம் (வைத்தியசாலை பின்புறம்)
யாழ் பஸ் நிலையத்துக்கு மிக அருகில்
(C-896)

காணி விற்பனைக்கு
உதயன் சந்தியில் இருந்து யாழ் இந்துக் கல்லூரி பக்கமாகச் செல்லும் வீதியில் கிறிஸ்தவ தேவாலயத்திற்கு முன்பாக வீட்டுடன் 2 பரப்பு காணி விற்பனைக்கு உள்ளது.
தொடர்புகளுக்கு :- 0774410925


## யாழில் வெடிபொருள்கள்...

பட்டதனை அடுத்து அவற்றை மொத்தமாக மீட்கும் முயற்சி நேற்றையதினம் இராணுவத்தினராலும் பொலிஸாரினாலும் மேற்கொள்ளப்பட்டது. இதன் போது யாழ்.விக்டோரியா வீதி, மணிக்கூட்டு வீதியின் ஒரு பகுதி என்பன மூடப்பட்டிருந்தன. இவ்வெடி பொருள் அகற் றும் பணியின்போது வெடிப்பு ஏதும் ஏற்பட்டாலும் என்ற எச்சரிக்கையில்குறித்த வெடிபொருள் உள்ள இடத்திலிருந்து 800 மீற்றருக்கு வெடிபொருள் வெடிப்பு அபாயமும் விடுக்கப்பட்டது.

இதில் குறிப்பாக யாழ். போதனா வைத்தியசாலையின சிலவாட்களில் உள்ள நோயாளர்களை வேறிடத்திற்கு மாற்றுமாறும இராணுவம் யாழ். போதனா வைத்தியசாலை நிர்வாகத்திற்கு அறிவித்திருந்தது.

இந் நிலையில் பிற்பகல் 4.00 மணியளவில் குறித்த வெடிபொருள் அகற்றும்பணிகள் முடிவுக்கு கொண்டு வரப்பட்டு போக்குவரத்துக்கள் வழமைக்கு திரும்பின.

பின்னர் மீட்கப்பட்ட வெடிபொருட்கள் கல்லுண்டாய் வெளியில் வெடிகக வைக்கப்பட்டதாக கூறப்படுகின்றது. மேலும் வெடிபொருள் அகற்றும் போது இராணுவத்தினர் குறித்த இடத்தில் பெருமளவில் குவிக்கப்பட்டிருந்தனர்.

குறித்த இடத்தில் எங்கு வெடிபொருள் உள்ளன? எவ்வாறு அகற்றப்பட்டன ? எவ்வளவு வெடிபொருடகள் மீட்கப்பட்டுள்ளன? யாருடைய வெடிபொருட்கள் ? என்பவை குறித்து படைத்தரப்பு எவ்வித தகவலையும் வெளியிடவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (செ-4)

## மன்னார்...

துள்ளார்.

அமெரிக்க இராஜாங்க அமைச்சர் ஜோன் கெரியை கொழும்பில் நேற்று முன்தினம் சனிக் கிழமை சந்திக்கச் சென்ற போது திடீரென மயங்கி வீழ்ந்த மன்னார் ஆயர் உடனடியாக கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு தீவிர சிகிச்சை வழங்கப்பட்டது.

இதன்போது மன்னார் ஆயரைப் பரிசோதித்த வைத்தியர்கள், அவரை பக்கவாத நோய் தாக்கியிருப்பதாக'தெரிவித்தனர்.

இந்நிலையில் மன்னார் ஆயரின் உடல் நிலையில் நேற்று முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாகவும், அவரால் உரையாடவும், கை மற்றும் கால்களை அசைக்க முடிவதாகவும் வைத்தியர்களை மேற்கோள்காட்டி செல்வம் அடைக்கலநாதன் தகவல் வெளியிட்டுள்ளார்.

கொழும்பு தேசிய வைத்தியசாலையில் நேற்று முன்தினம் மாலை அனுமதிக்கப்பட்டு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்ட மன்னார் ஆயரைப் பார்வையிட எவரும் அனுமதிக்கப்படவில்லை.

மன்னார் ஆயருக்குத் தேவையான மருத்துவ சிகிக்சைகளை வழங்க உரிய நடவடிக்கைகளை எடுக்குமாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கொழும்பு தேசிய வைத்தியசாலை பணிப்பாளருக்கு உத்தரவிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (செ-11)

## மாணவன்...

காலை 8.00 மணியளவில் தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுள்ளான்.

பின்னர் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு கொண்டு வரப்பட்ட மாணவன் 10.00 மணியளவில் மீண்டும் வாந்தியெடுத்து சோர்வடைந்துள்ளான்.

இதனையடுத்து சிகிச்சை அளிக்கப்பட்ட போதும் பிற்பகல் 2.30 மணியளவில் குறித்த மாணவன் உயிரிழந்துள்ளான்.

மாணவனின் மரணம் தொடர்பான விசாரணைகளை யாழ்.போதனா வைத்தியசாலையின் திடீர் மரணவிசாரணை அதிகாரி நமசிவாயம் பிரேம்குமார் மேற்கொண்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (செ-6)

## 1400 கைதி...

கள் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

இவற்றில் யாழ்ப்பாண சிறைச்சாலையில் இருந்து 8 கைதிகள் பொதுமன்னிப்பு அடிப்படையில் நேற்று ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 11.30 மணியளவில் விடுதலை செய்யப்பட்டிருந்தனர்.

விடுதலை செய்யப்பட்ட கைதிகளுக்கு இனிப்புப் பண்டங்கள் மற்றும குளிர்பானங்களும் கொடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (செ-4)

## 40 பேருக்கு...

சமர்ப்பிக்கப்படவுள்ளது.

நோர்வே இராஜதந்திர, முன்னாள் சமாதான தூதுவரும், முன்னாள் அமைச்சருமான எரிக் சொல்ஹெய்ம் இது தொடர்பாக, ஆணைக் குழுவின் தலைவர் செயித் அல் ஹுசேனுடன் தொடர்பு கொண்டு கலந்துரையாடியதாக தனது டுவிட்டர் பக்கத்தில் குறிப்பிட்டிருந்தார்.

மேலும், இராணுவ அதிகாரிகளுக்கு எதிராக ஆதாரம் கொடுத்தவர்கள் தொடர்பான தகவல்களை 2031ஆம் ஆண்டுவரை வெளிப்படுத்த முடியாதெனவும் தெரிவிக்கப்படுகின்றது. (செ)


தூக்கணம் | புத்தம் புதிய வடிவங்கள், எங்கும் இல்லாத வடிவங்கள்
எமது காட்சியறைகளில் பார்வையிடலாம்






(C-893)
பிரணவன் என்ரபிறைசஸ்
635, பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். 077 3818799

BCHS British College of Higher Studies
வழங்கும் சர்வதேச கற்கை நெறிகள்
Settlement Visa மூலமாக UK செல்பவர்களுக்கான
IELTS Life Skills
இப்பாட நெறியானது Settlement Visa மூலமாக UK செல்ல இருப்பவர்கள் எளிதாகக் கற்கக் கூடிய முறையிலும், உத்தரவாதத்துடனான பரீட்சை வெற்றியையும் கவனத்திற் கொண்டு தயாரிக்கப்பட்டு எமது நிறுவனத்தில் நடாத்தப்படுகிறது
Student, Migration Visa மூலமாகUK செல்பவர்களுக்கான
IELTS (Academic / General)
ஆரம்பத்தில் பயில சிரமப்படுவர்களுக்கு பிரத்தியேக வகுப்புகள் மூலமாக கூடுதல் பயிற்சிகள் வழங்கப்படும்
Batches Start on
Batch I : 05/05/2015 Batch II : 09/05/2015
No.15, Sirambiyady Lane (Off Stanley Road), Jaffna.
(Above Sathosa SM & Near Ariyakulam Junction)
Tel : 021-2224550
Hotlines: 0777585913,0777222422, 0714299935
(C-892)

Digital இண்டர்நஷனல் எக்ஸ்பிரஸ் பொதி விநியோக சேவை
விஷேட கட்டண சலுகைகள்



- 200க்கும் மேற்பட்ட நாடுகளுக்கான உலகின் முதற்தர கூரியர் நிறுவனம் மூலம் தபால் மற்றும் பொதி விநியோக சேவையினை தரமாகவும் பாதுகாப்பாகவும் அனுபப்பிட நாடுங்கள்
- நிர்ணயிக்கப்பட்ட குறைந்த கட்டணம்
- மிகச்சிறந்த வாடிக்கையாளர் சேவை
- அனுப்பும் பொதிகளுக்கான உத்தரவாதம்

WESTERN UNION MONEY TRANSFER
மிக விரைவான பணப்பரிமாற்ற சேவையினை நம்பிக்கையாகவும் பாதுகாப்பாகவும் பெற்றுக்கொள்ள முடியும்
62/16 ஸ்ரான்லி வீதி (சம்பத்வங்கி முன்பாக) யாழ்ப்பாணம்
தொடர்புகளுக்கு - 021 753 8330, 0777 151 101
(874)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 [illegible] என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 04.05.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org